# தமிழருவி



தமிழ் மன்றம்

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

கொழும்பு.

"தமிழ் எங்கள் உயிருக்குநேர்"

# யாழ் உலோகத் தொழிற்சாலை

**250—254, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்நகர்.**

தொலைபேசி: 7049

கிளை :

63, பாங்ஷால் வீதி,
கொழும்பு—11

தொலைபேசி: 26150

---

# Free Lanka Industries

*With the best Compliments of*

## FREE LANKA INDUSTRIES

P. O. BOX 4,
MINUWANGODA ROAD,
JA-ELA.

# தமிழருவி

# (THAMILARUVI)

நாலாவது இதழ்

1973

ஒளிசேர் தமிழை விழிபோல் காப்போம்

இதழாசிரியர்கள்

கந்தையா சிவசுப்பிரமணியம் ... சின்னத்தம்பி சிறீஸ்கந்தராஜா

வெளியீடு:

தமிழ் மன்றம்

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

கொழும்பு—10


Published by

*Tamil Mantram*

Ceylon Technical College

Colombo—10

தரமான
சுருட்டுகளுக்கு
துரைசிங்கம் லைட்
சுருட்டுக்கள்




என்றே கேளுங்கள்!

காரம், மணம், குணம் நிறைந்தவை! லைட், கறுப்பு வகைகளில் கிடைக்கும்!

உற்பத்தியாகும் இடம்:

உடுவில் தெற்கு,
பாலாவோடை,
மானிப்பாய்.

*Distributors:*

**LUXMI STORES**
No. 40/1 St. Johns Road,
Colombo - 11

FOR

**ICE CREAM CUPS**
SMALL AND BIG
**CONTACT**


**ST. ANNE'S PRODUCTS**

121, FIRST DIVISION
MARADANA,
COLOMBO — 10.

*With Best Compliments From*

**RAJESWARY BRAHMIN HOTEL**

69, OLCOTT MAWATTE,
COLOMBO - 11



எங்கள் தொழில் நுட்பக்கல்லூரி இன்றமிழ்
மன்றம் நிலைத்தென்றும் வாழியவே
எங்களின் எண்ணங்கள் திண்ணங்கள் வண்ணங்கள்
யாவும் வளர்த்தென்றும் வாழியவே
சங்கத்தமிழ்வழி தாங்கும் தொழில்மொழித்
தன்மை வளர்த்தென்றும் வாழியவே
எங்கும் புகழ்மொழி மேலெழ நாம் தொழ
எங்கள் தமிழ் மன்றம் வாழியவே.

# அருவியில்..........


என்னரும் இளைய சக்தியே!

இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரி — தமிழ் மன்றம்

Our Principal Congratulates........

ஆசியுரை

Our Registar Speaks........

தமிழக முதல்வர் வாழ்த்துகிறார்........

ஊற்றடியில்........

ஓ! மனமே!

தலைவர் தகவுரை........

எமது வழி — முன்னும் பின்னும்

எங்கள் கருத்து

''பகுத்தறிவு பரவட்டும்''

உலகம் பலவிதம்!

உலகம் எதனால் உளது?

ஆற்றுக்கு அணைகட்ட வேண்டும்

அலைகடலில் விதி அலைகள்

ஈழமும் தமிழும்

அன்புள்ள மகனுக்கு ஆசையில் ஓர் கடிதம்

நீ

ஐந்தாண்டுத்திட்டம் — விவசாயப்பகுதிச் செயற்றிட்டம்

தலைப்பிரசவம்

கருத்தோட்டத்தில் கவிதை

பெறுமானக் குறைவைக் கணக்கிடல்

சாந்தி நிகேதனம்

பௌர்ணமி நிலவில்........

மதமும் மனிதனும்

Awarenes for all Students

நீர் வழங்கும் குழாயின் சிக்கன முறைப்
பரிணமத்தைத் துணியும் முறை

நன்றிப்பெருக்கு

We write to introduce ourselves as Dyers and Dry-Cleaners, at the above premises — First floor (New Building), situated opposite the Municipal vegetable market, Wellawatte.

Our staff are backed by the experience gained in reputed establishments, and we are confident that we are equipped with men and material to suit the most exacting requirements.

Let it be terylene or woolen suits, you may approach us. Look impeccably smart in clothes dry cleaned / or dyed / or pressed by us. Chemical washing is done by experienced men who have had undergone a training abroad.

Get your expensive garments pressed by us for superb look. A trial order will convince you of the Quality of our service.

Do remember — your next garment will be dyed / or dry cleaned / or pressed by DE LUXE.

**DE LUXE**

140/1, Galle Road,
Wellawatta.
**1st Floor, (Front of Vegetable Market)**

---

அறியாமைகளிலெல்லாம் பெரியதோர் அறியாமை ஒன்றுண்டு. அது என்ன தெரியுமா? தெரியாத ஒன்றைத் தனக்குத் தெரிந்திருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுகிறானே, அதுதான். அறிவின் தவறுதலனைத்திற்கும் மூல காரணமாயிருக்கிறது.

—பிளாட்டோ

* * *

ஒரு மெழுகுவர்த்தி எவ்வளவு நேரம் சுடர் விட்டு எரியுமோ, அவ்வளவு நேரம் தான் இந்த அநியாய உலகில் ஒரு நல்ல காரியம் பிரகாசிக்க முடியும்.

—ஷேக்ஸ்பியர்

வசன கவிதை :

# என்னரும் இளைய சக்தியே!

எழுதுபவர்: இளம்புலவர், திரு. வை. நாகராஜன் அவர்கள்
(ஆசிரியர், உரோயல் கனிஷ்ட பாடசாலை கோழும்பு.)

உலக மிங்கோர், உயர்கூ ரையெனின்—
நிலவுமோ ரணுவும்; நிலையுறு கருத்தும்
அங்க மங்கமாய் அதிலடங் கிடுமெனின்—
உன்னரும் பங்கும், ஒருசிறு கல்லாய்;
அன்றி, மண்ணாய்; அசையாச் சாந்தாய்;
இண்டு மரமாய்; தூசியாய்; ஆகலாம்!
என்று லும்நீ யின்றி யதுவோ,
அஃதின்றி நீயோ அங்கில் லையன்றோ?

ஆதலால்—
என்னரும் நாட்டின் இளைய சக்தியே!
உன்னருங் கருதனே, உயிரும் உணர்வுங்
கொண்டதாய்; பிண்டத் தண்டமாய்; அண்டத்துப்
பிண்டமாய் வழிவழிப் பெற்றிட வேண்டாமோ?

இங்கு—
கருவெலாம் முளைப்பதும்; முளையெலா முயிர்த்துப்
பயிராய் மலர்வதும்; மலரெலாங் காய்ப்பதும்;
காய்ப்ப தெல்லாங் கனிந்து கனிவதும்;
கனிவ தெல்லாங் காய்ந்து, உதிர்வதும்;
உதிர்வ தெல்லா மோய்ந்து கழிவதில்லை!
இஃதுண் மையே! ஆயினும், இதிலுமோர்
விளைவு விடிந்து, வீழ்வதை நீயேன்
எண்ணிப் பாரா திருந்திட வேண்டும்?

கால மென்றுங் கடைவிதி யென்றுங்
கால மெல்லாங் காலத்தைக் கடத்தி
''கடலலை ஒயக் குடிநீர் கொள்வேன்''
என்றோர் வீணன் எங்கோ வுரைத்தான்;
அன்னவ னுய்நீ யுமன்றோ,
வாய்ப்பறை கொட்டி வாழ்நாள் போக்கிறாய்?

கருமங் கணக்கின்றிக் காலடியிற் கிடக்க,
உருவிலா வானத்தை ஊனமாய் நோக்கி,
''விரையும் முகில்கள், வடிவி லெத்தனை?''
என்று நீ யெண்ணி யெண்ணி மாய்கிறாய்!
உருப்படி யாய்நீ, உன்பங் கிலென்ன
உருப்படுத் திவிட்டாய்? உயிர்தான் தந்தாய்?
வெட்கம்! வெட்கம்! வேண்டாம், இந்நிலை!
கூரையி லுன்னைக் கூறிட்டு, மொழிக்கும்;
சாதிக்கும்; பழமைச் சேற்றுக் குமன்றோ
வெறுவாய் குதப்பி, வீணே முனைந்து,
வீரங் காட்டி வாழ்ந்து விட்டாய்!
அந்தோ! என்னரும், இளைய சக்தியே!
போதும்; போதும்! போனவை யெல்லாம்;

இனியேனும்—
உந்தன் எண்ணரு மோர்ம முன்னி
சிந்தையின் சீர்வழி யொன்றால்,
சீரிளமை பூண்டு, சிங்கமென வாராய்!

## JAYAMANEES

*

உயர்ந்தரக கைத்தறிப் புடவைகளுக்கு
மலிவான விலையில்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்கக்கூடிய நம்பிக்கையான
ஒரே ஸ்தாபனம்

## ஜெயமணீஸ்

*

117-119, (மேல்மாடி)
செட்டியார் தெரு, : கொழும்பு-11

## Aero Electricals

Manufacturers of Aerolux Globes, Glass Lamp Shades, Industrial and Domestic Electical Heating Appliances and Accessories

Colombo office:
77/2 Mayfield Road,
COLOMBO-13

★

No. 10, Point-Pedro Road
KANKESANTHURAI
CEYLON

T'Phone. 34928

*With best Compliments from*

## RAVEENDRA TRADES

DEALERS IN TEXTILES

112, Sea Street,
COLOMBO-11

Phone: **20345**

தமிழினைத் தமிழன் போற்றின்
தாரணி தமிழனைப் போற்றும்

## நடைமுறைத் தமிழ் இயக்கம்

# இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி
# தமிழ் மன்றம்

## உத்தியோகத்தர்கள் 1973.

காப்பாளர் :

திரு. கே. எம். டி. பெரோரா (கல்லூரி அதிபர்)
B. Com (Hons), Certificate in Supervisory Training (O. T. C. A) japan
Dip in Ed. Administration) U. K.

உபகாப்பாளர்கள் :

திரு சி. மாணிக்கவாசகர் (விரிவுரையாளர்)
B. Com (Lond), M. B. A (Vidyodaya)

திரு. பொ. சங்காப்பிள்ளை (விரிவுரையாளர்)
B. A. (Lond), B. Com (Lond)
M. Sc. (Econ) (Lond), A. M. Inst T.

தலைவர் :

திரு. கு. சி. மு. மஃரூப்

உபதலைவர் :

திரு. எ. பா. மதுரநாயகம்

செயலாளர் :

திரு. வை. பொ. கணேசானந்தன்

உபசெயலாளர் :

திரு. நியூட்டன் ஞானச்சந்திரன்

இணை இதழாசிரியர்கள் :

திரு. கந்தையா சிவசுப்பிரமணியம்

திரு. சின்னத்தம்பி சிறீஸ்கந்தராஜா

பொருளாளர் :

திரு. ஆ. குமாரவேல்

இலக்கியச் செயலாளர் :

திரு. வேல் அமுதலிங்கம்

செயற்குழு :

திரு. ஜி. எஸ். நிர்மலானந்தன்,
செல்வி. யோகேஸ்வரி தர்மலிங்கம்,
திரு. க. கருணாகரன்
திரு. வேஸ்லி தம்பியப்பா,
திரு. ந. தங்கராஜா.

*With the best Compliments of*

# Mala Stores

159, Gas Works Street
COLOMBO - 11

Phone: 27645

# S. T. Visvalingam & Son

Batteries Sale Service
and Charging

**50, MANIPAY ROAD**
**JAFFNA.**

# S. Thambipillai & Son

Manufacturing Jewellers
and Importers

**191, K. K. S. Road**
**JAFFNA.**

குறைந்த விலைக்கும்
நீடித்த உபயோகத்திற்கும்
பலவித கிளாஸ் ரம்ளர், சிமினி
போன்றவற்றிற்கும்

## அன்ரனிஸ்
## கிளாஸ் பக்ரறி

**காங்கேசன்துறை வீதி, : கீரிமலை**

**வியாபாரிகளுக்கும், பாடசாலைகளுக்கும்**
**விடுதிச்சாலைகளுக்கும் விசேஷ**
**சலுகைகள் கொடுக்கப்படும்.**

ஏகவிநியோகஸ்தர்:

## யூனிவேசல்
## கிளாஸ் ஏஜன்சீஸ்

**178, சென்றல் வீதி, : கொழும்பு-12**

**தொலைபேசி இல: 23597**
**35747**

FOR ALL YOUR
REQUIREMENTS

# Trico Electricals

Dealers in Electrical Goods

**82, Olcott Mawatte**
**MARADANA.**

# *Our Principal Congratulates....*

I am very happy to send this message tot he **"Tamil Aruvi"** which is the official organ of the College "Tamil Mantram".

The office bearers of this society should be Congratulated for its uninterrupted publication despite the mounting printing costs, which is a clear indication of the dedication and enthusiasm with which they have worked.

I am sure this Magazine while reviewing the activities of the society during the year, would cover a wide range of subjects of special interest to its readers.

I have no doubt that this Mantram has made its mark on the life of the college and would continue its useful work in the years to come.

I wish the Mantram every success and hope that the **"Aruvi"** would successfully serve the purpose for which it is being published.

**K. M. D. Perera**
Principal.

Ceylon Technical College,
Colombo 10: 1st August, 1973.

# அமுத வாக்கு

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல், கோபமும் குறையும் இல்லாமல் சம்பளத்தையும், வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே. நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும் போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந்தீங்கு செய்தாலும் வசைமொழி கூறாமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல், கற்பிப்பனவும் நூல்களே.

—றிச்சேட் — டி. பியூரி

அன்பளிப்பு:

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

த. பே. இல, 77, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7233

மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்

---

*Space donated by*

**OPATHA & CO**

13-15, ST. JOHNS ROAD
COLOMBO-11

---

*With best Compliments of*

**SINGARAMS**

★

(Place for Quality Textiles)

★

47, Sea Street
COLOMBO-11

# Our Registar Speaks.....

Ceylon Technical College,
Colombo - 10.
28th July 1973.


As Registrar of the Technical College, I consider it a great privilege to be invited to send a message to the 4th Annual issue of the Technical College Tamil Mantram's Magazine "Tamilaruvi". At a time like the present when the cost of printing is fairly high and the printing paper is in short supply, those responsible for the production of the magazine should be complimented for undertaking this difficult task.

A Magazine of this nature is necessarily of immense value to students pursuing various branches of study in an institute like the Ceylon Technical College. Most of the contributors of articles are students themselves and these provide Valuable Material to those interested in the various topics discussed. Students of technology Particularly, owe a great responsiblity to the future prosperity of the country. I am certain that they will bear this in mind.

I trust that the contributions will be of a high standard so that they will be of greate educative value to those who read them. This will, I hope, be an encouragement to other students in the future.

I Wish the Magazine Continued Success.

**M. M. U. Dhammike**
Registrar



# K. D. K.

TABLE & PEDESTAL
FANS

PAR
EXCELLENCE

**Distributors:**

T'phone: 29744/5

**ELITE RADIO &**
**ENG. CO. LTD.,**

**26, Keyzer Street,**
**Colombo-11**

*With best Compliments from*

**T. Vijayaratnam**
**& Bro**

167, Sea Street,
COLOMBO-11

தற்கால நவநாகரீகத்திற் கேற்ற
டிசைன்களில்
தங்க வைர நகைகளை செய்பவர்கள்

**கலாவதி**
**நகை மாளிகை**

239, பிரதான வீதி, : பருத்தித்துறை

**Kalawathy Jewel House**
**239, Main Street — Point-Pedro**

Phone: **567**

# தமிழக முதல்வர் வாழ்த்துகிறார்......

உழைப்பே ஆடவர்க் குயிரென, வாழ்ந்த
பிழையறு தமிழினம் சிந்திய வியர்வையால்
எண்ணரு நலன்கள் இனிதுறப் பெற்ற
மண்ணக மான இலங்கைத் தலைநகர்
கொழும்பு நகரில் பல்தொழில் நுட்பம்
செழிக்கப் பயிற்றும் சீர்மிகு கல்லூரி
தன்னிற் பயிலும் தழிழ்உளம் கொண்ட
நன்மா ணாக்கர் நடத்திடும் மன்றம்
இன்தமிழ்ச் சுவையை இனிதே யுணர்த்த
அன்பொடு தமிழ்விழா எடுக்கும் செய்தி
அறிந்து மகிழ்கிறேன்; அமுதத் தமிழின்
சிறப்பினை-சுவையைத் தெளிவுறக் காட்டத்
'தமிழருவி' என்னும் தகவுறு மலரினைத்
தமிழுல கேத்தத் தருகிறார்; அம்மலர்
தமிழர் கலையை தமிழர்தம் பண்பை
தமிழ்மொழிப் பெருமையை தமிழ்நாக ரிகத்தை
இனிதுறப் பரப்பும் எழில்மல ராகி
நனிபுகழ் சேர்க்க வாழ்த்திடு கின்றேன்:

மு. கருணாநிதி.

*With the best Compliments of*

# ST. JOSEPHS D/C & OIL MILLS

## DANKOTUWA.

Proprietor:

MR. C. DEVA FERNANDOPULLE

Telephone: Dankotuwa 803

# ஊற்றடியில்......

செந்தமிழ் மொழியாள் செழித்திட, தேடிவரும் தேமதுரத் தமிழோசை தென்றலென வீசிவந்து ஆசையுடன் நாடிவரும் வாசகர்களுக்கு எத்திசையும் புகழ்மணக்கும் தீந்தமிழ் மலரின் நறுமணத்தைப் பரப்பி நிற்க, ஓடுகிருள் இத்தமிழருவி. அருவியில் இன்ப நீராடி, மலரினை மணந்து அவள் இதழினைச் சுவைத்திடத் துடிக்கும் வாசகர்களை வருக வருக என வாழ்த்தி இவ் ஊற்றடியில் வரவேற்கிறோம்.

ஆற்றல் மிகு அதிபர் போற்றிட, தமிழ் வளர்க்கும் ஒளி விளக்காம் தம்பையா அவர்கள் ஆசிபகர்ந்திட, மதிப்பு மிகு பதிவாளர் பாராட்ட, இன்தமிழ்ச் சுவையோடு கனிந்துவரும் கவிதையால் கலைஞர் கருணாநிதி அவர்கள் வாழ்த்திக் கவி பாட ஊற்றெடுக்கிருள் தமிழருவி.

''என்னரும் இளைய சக்தியே'' என்ற கவிதை ஊற்றிற்கு இளம் சக்தியை வழங்கி வளமான ஓட்டத்திற்கு உயிரூட்டுகிறது. ஓ மனமே! ஓடாதே நில். இந்தத் தமிழருவியின் கருத்தினிலே நின்று ஒரு மனமாய் நீராடென அழைக்கிறது "ஓ மனமே!'' என்ளெரு கவிதை. எமது மன்றத்தின் தகைமை வாய்ந்த தலைவரின் தகவுரையையும், வழிகாட்டும் பொதுச் செயலாளரின் அறிக்கையையும் ஏற்று நிற்கும் அருவி ஏற்ற ஒரு அருவியாக யாவரும் போற்றிட ஆற்றல் மிகு அறிஞரின் அறிவுக் கட்டுரைகளுடன் கலந்து செல்கிருள். அறநெறித் தாகம் தீர்த்துச் சாந்தி தரும் படைப்பு சாந்திநிகேதனம், உண்மையான ஆன்றோரின் தன்மைகளை விளக்கும் கட்டுரை வாரியார் அருவிக்கு அருளொடு அளித்த பாலமுதம். மன்றத்து மாணவரின் அருமைபெறு அருவி மலர்கள், விரிந்து, புகழைப் புவியறியும் வண்ணம் மலர்ந்து, இவ்வருவியில் காட்சி கொடுக்கின்றன.

நற்றமிழ் வாசகர்களே! எமது இதய மலரில் பூத்து நிற்குமோரிதமான வேண்டுகோள். ''குறைகண்டு எம்மை நிந்தனை செய்யாமல் குணம் நாடி எம்பணி வளர்த்திடுவீர்''.

இதழாசிரியர்கள்

வெ. சண்முகராசா

நகை வியாபாரம்

වී. සන්මුගරාජා

V. Shanmugarajah

JEWELLER & PAWN BROKER

118, SEA STREET, COLOMBO - 11.

T'Grams: "ASIANSTAR" T'Phone: 25946 & 22014

ஸ்ரீ அம்பாள்
ஹோட்டல்

சுத்தமான
நித்தம் உங்கள் சித்தம் மகிழவைக்கும்
தரமான — சுவையான
உணவு வகைகட்கு
ஸ்ரீ
அம்பாள் ஹோட்டலுக்கு
விஜயம் செய்யுங்கள்

ரெலிபோன்: 92323

487,
மருதானை,
கோ. 10.

With Compliments from
Manufacturers of

PILOT BRAND

WATER COLOURS, TUBE COLOURS
AND CRAYNOS

Factory:

MARIYANAYAGAM INDUSTRIES,
INDUSTRIAL ESTATE,
PALLA KELLE,
KANDY.

Office and Stores:

MARIYANAYAGAM INDUSTRIES
A-36, NEGOMBO ROAD,
NITTAMBUWA.

# ஓ! மனமே!

கவிஞர் வி. கந்தவனம் அவர்கள்

ஓ மனமே ஓ மனமே
ஓடாதே நில்
வா மனம் வைத் தென்மனமே
வாடாதே வா!

வந்தொருகால் என்னொருசொல்
வைத்துமனம் கேள்
சிந்தையிலே கொண்டதனைச்
செய்யச் செவி சாய்!

யானெதுவோ திட்டமிட
ஆராயா மல்
நீ யெதையோ செய்வதனல்
நேர்மாறெல்லாம்!

கோயிலிலே யான்வணங்கக்
கொழும்பினிலே நீ
பாயலிலே யான் படுக்கப்
பார் முழுதும் நீ!

அந்தரப்பட் டவதியுற
ஆர்வமுடன் நீ
சந்திரனிற் சதிரிடுவாய்
சரி வருவாயோ?

எந்தவொரு வேளையிலும்
என்னுடன் நில் லாய்
விந்தை மிகும் உன்செயல்கள்
விளங்கவில்லைப் போ!

உன்னை நம்பிக் கண்ட தெல்லாம்
ஊர் நகைப்புத் தான்
இன்னும் புதுக் கவிதைகள் போல்
ஏமாற்று தே!

புதுமையென நீ நினைத்துப்
புரிந்ததெல்லாம் பாழ்
விதிவகையில் லாதசெயல்
விளைத்ததெல்லாம் வீண்!

கண்டபடி நடப்பதிலே
கலைத்துவம் இல்லை
தண்டியுடை யுடுப்பதிலே
தனித்துவம் இல்லை!

நினைக்கும் வழி நடந்திடலாம்
நிபந்தனைக்குள்ளே
உனக்கு மட்டும் சுதந்திரமோ
உலகுக் இல்லையோ!

சின்னமதி சொன்னபடி
திரிவதனு லே
என்ன பலன் என்சொல்மதி
என்னுளிரு வா!

கட்டுப்படு கவலைவிடு
கருத்தினிலே நில்
திட்டமுடன் செயற்பட நான்
சேர்ந்துதவு! வா!

# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை
ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்:

வாய்வு, வயிற்றுப் பொருமல், புளியேப்பம், அஜீரணம், மலச்சிக்கல், மூலவியாதி, வாதம், அசதி, சோம்பல், பித்தம், இடுப்புவலி, சொறி, சிரங்கு, ஊறல், பற்றுகள், சகல வித வாய்வுகள் வாதக் கடுப்புகள் சுகப்படும். பத்தியமில்லை.

பெரிய டின் ரூபா. 7-50
சிறிய டின் ,, 4-00

வி. பி. பி. ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

இலங்கையில் எல்லாப் பிரபல வியாபார ஸ்தாபனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

# ஆனந்தா தைலம்

சிரசிற்குச் சிறந்தது
ஆனந்தா தைலத்தை

நாள் தோறும் தலைக்கு வைத்து வந்தால் பித்த உஷ்ணத்தினுலாவது மேக நீரினுலாவது நேத்திரத்திலுண்டாகும் எரிச்சல், மஞ்சளாகுதல் கண்களில் நீர் வடிதல், புகைச்சல், மறைத்தல், பித்த மயக்கம், தலைவலி, பார்வைக் குறைவு, முடி உதிர்தல், மூலச்சூடு முதலியவைகளை சுகப்படுத்தும், பத்தியமில்லை.

பெரியது ரூபா 7-50
சிறியது ,, 4-00

தயாரிப்பாளர்:-

## ஆனந்தா வைத்தியசாலை

174, செட்டியார் தெரு, — கொழும்பு — 11
வி. பி. பி. ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

உங்கள் வீட்டிற்கோ,
வாகனங்களுக்கோ தேவையான
K.M.G. உதிரிப்பாகங்களைப்
பொருத்துங்கள்.

KAMALA GARAGE AND INDUSTRIES
K.M.G
53, STANLEY Rd JAFFNA

ඔබගේ නිවසට
ඔබගේ රථයට
K.M.G අමතර කොටස්
සවිකරන්න.

*With the Best Compliments*
*of*

## *Meena Jewllers*

98, Sea Street,
COLOMBO-11.

මීනා ජුවලර්ස්

## மீனு ஜுவலர்ஸ்

Phone: **22585.**

# தலைவர் தகவுரை..

''கற்றது கைம்மண்ணளவு

கல்லாதது உலகளவு'' என்பது நம் ஆன்றோர் வாக்கு.

நாம் இவ்வுலகிலே கற்கவேண்டியவை எத்தனை எத்தனையோ, எமது வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் எமக்கு ஒரு அநுபவமாகவும் அதே சமயத்தில் சிறந்தவொரு பாடமாகவும் அமைகின்றது. எனவே நாம் பெறும் அநுபவத்தையும், கற்கும் பாடத்தையும் வைத்து எம் குறைகளை நீக்கி நல்ல வழியிற் சென்று முன்னேற்றம் அடைய வேண்டும். மேலும் வாழ்க்கையில் எத்தனை துன்பங்கள் ஏற்படினும் அதனைக்கண்டு தளர்ந்து சோர்ந்து விடாமல், ஊக்கத்தைக் கைவிடாமல் இருந்தால் வெற்றி அடையலாம். இதனையே திருவள்ளுவரும் மிக அழகாகக் கூறியுள்ளார்.

''சிதைவு இடத்து ஒல்கார் உரவோர் புதை அம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு''

எமது நாட்டின் எதிர்காலம், வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியனவற்றிற் பெரும் பொறுப்புகள் வருங்கால சந்ததியரான மாணவர்களின் கைகளில் உள்ளன. எனவே மாணவர்கள் தம் பொறுப்பை உணர்ந்து, தேவையினை அறிந்து சிறந்த முறையிற் செயலாற்றி வளம் மிகு சமுதாயத்தை ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த முயல வேண்டும் இவற்றிற்கு மிக இன்றியமையாதவை பொறுப்புணர்ச்சியும், மாணவர்களிடையே ஒற்றுமையுமேயாகும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு.

ஆகவே நாம் அனைவரும் ஒற்றுமையின் சிறப்பினையுணர்ந்து, ஒன்று சேர்ந்து ஒரு தாய்மக்கள் போலச் செயலாற்றி புதியதொரு பாதையை ஏற்படுத்தி அதன் வழியே சென்று எம் நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம், ஒற்றுமை ஆகியனவற்றிற்கு வழிகோலுவோமாக.

கல்வி கற்க வந்துள்ள நாம், எம் தாய்மொழியாம் தமிழுக்குச் சேவை செய்ய அதன் பெருமைதனை உயர்த்திட, சிறப்பினை விளக்கிட, புகழினைப் பரப்பிட முயற்சிகள் எடுப்பது சாலச் சிறந்ததாகும், எம் முயற்சிகள் எல்லாம் ஆழ்கடலில் ஒரு துளி போன்றதாகும். எனினும் சிறுதுளிகளே பெருவெள்ளத்தை ஏற்படுத்துகின்றன. எனவே எம் முயற்சிகள் இன்றில்லாவிடினும் என்றேனும் தக்க பலனைத்தரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எனவே எமது முயற்சிகள் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் இது போன்ற பணிகளில் ஈடுபட்டுச் செயல் புரிவோமாக!

ஈற்றில், எமது '' தமிழருவி '' நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கிடையே வெளிவருகின்றது. இதற்குப் பொறுப்பாயிருந்து ஒற்றுமையைக் கைவிடாமற் செயல் புரிந்த மன்ற அங்கத்தவர் அனைவருக்கும் நன்றி கூறுவது என் கடமையாகும்.

வாழ்க தமிழ்மொழி! வளர்க எம் ஒற்றுமை!
தொடர்க எம் பணி!

ஸ்ரீ. சீ. மு. மஃரூப்.

IF THERE IS ANY PROBLEM IN

**CANNING**

ALWAYS

CONTACT

★

# SEMICO INDUSTRIES

★

**196, LAYARDS BROADWAY**
**COLOMBO-14**

Quality Films
From

*Robin Tampo's*
*Studio*

People With
Distinguished Experience
&
Skill

## "SRIPURA"

Funeral Directors & Florists
at your Service
DAY AND NIGHT

*Contact:*
**183, Chilaw Road**
**NEGOMBO.**

Telephone: 2024

# எமது வழி - முன்னும் பின்னும்

தமிழ்மன்றம் அமைத்தோம் ஏன் அமைத்தோம். தமிழர்களின் கலைகலாச் சாரத்தைப், பண்பைப்பாதுகாக்க இப்படியான மன்றங்கள் தேவை என்பதை, எமது எதிர்காலத்தை ஆக்கிக்கொள்கின்றவர்கள் இளைஞர்களாகிய நாமே என்பதை தமிழர் களின் எதிர்காலம் எப்படி எப்படியெல்லாம் சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்று தமிழ்ப்பற்று மிக்க இளைஞர்கள் கனவுகண்டார்களோ, காண்கின்றார்களோ அந்தஆசைக் கனவுகள் எல்லாம் நிறைவேறத் தமிழ்மன்றங்கள் தேவை என்பதை உணர்ந்தோம். தமிழ்மன்றம் அமைத்தோம்.

இன்று தமிழ்மன்றங்கள் அத்தியாவசியமானதாக ஆகிவிட்டது. மூலைமுடுக்குக ளெல்லாம் தமிழ்மன்றங்கள் அமைக்கவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இன்றைய தமிழன் தமிழனாக வாழவில்லை. தமிழர்களின் கலை, கலாச்சாரத்தைப் பண்பைப்பாதுகாக்க வேண்டிய கடமையைத் தங்களுடைய தோளிலே சுமக்கவேண்டிய எமது இளைஞர்கள் பலர், மொழியுணர்ச்சி அற்றவர்களாக அந்நியமோகங்கொண்டவர் களாக தமிழர்களின் பரம்பரைக் குணச்சிறப்புக்களைச் சற்றேனும் கொண்டிருக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்தநிலை நீடிக்குமானால் தமிழ்மக்களின் எதிர்காலம் மிகமிகப்பயங்கரமாகத்தான் இருக்கப் போகின்றது. ஆகையால் இந்தநிலையை மாற்றி அமைக்க வேண்டியது எமது கடமை. அந்த வழியில் எமது மன்றம் போய்க்கொண் டிருக்கின்றது.

இந்தக் கல்வியாண்டுக்குரிய செயற்குழு மிகச் சமீபத்தில் தான் தெரிவு செய் யப்பட்டது. தொடர்ந்து வந்த மிகக் குறுகிய காலத்தில் தரமிக்க நிகழ்ச்சிகளை நாம் நடத்தியுள்ளோம். தற்போதைய செயற்குழு மிகவும் சிறந்தமுறையில், பாராட்டத் தக்க வகையில் இயங்கிவருகின்றது. தொடர்ந்தும் இதே வகையில் சிறப்பாகக் கடமை யாற்றச் செயற்குழு திட சங்கற்பம் பூண்டுள்ளது.

எமது மன்றத்தின் இலக்கியப் பகுதி (இலக்கியச் செயலாளர் திரு. வேல் அமு தலிங்கத்தின்) உதவியுடன் மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது. தமிழ் இளஞ் சந்ததி யினரின் இன்றைய நிலைக்கு, இலக்கிய அறிவு இல்லாமையும் ஒரு காரணமாக இருக்க லாம் எனக்கருதி மாதாந்த இலக்கிய அரங்கு நிகழ்ச்சியை நடாத்த இருக்கின்றோம். அந்த அரங்கைக் கல்லூரி உபதலைவர் அவர்கள் மங்கள விளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்கள். முதல் இலக்கிய அரங்கு ''புறநானூறு ஆக்கினோர்'' அரங்காக மலர்ந்தது கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த வித்தியாதிகாரி திரு. கி. லக்ஷ்மண ஐயர். அவர்கள் அங்கு 'தமிழர் வாழ்வும் புறநானூறும்' என்ற தலைப்பிற் சிறப்புச் சொற் பொழிவாற்றினார்கள். தொடர்ந்து ஒவ்வொரு மாதமும், தமிழறிஞர்களின் சிறப்புச் சொற் பொழிவுகள் இலக்கிய அரங்கு நிகழ்ச்சியில் நடைபெற உள்ளது.

விவாதத் திறன் இளைஞர்களுக்கு அவசியம் தேவை. அதை விருத்திசெய்யும் நோக்கோடு விவாதக் குழு ஒன்றைத் தெரிவு செய்வதற்காக எமது மன்ற அங்கத்த வர்களுக்கிடையே விவாதப் போட்டி ஒன்றை நடாத்தினோம். அந்தப்போட்டிக்கு நடு வர் குழுத்தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் உபசபாநாயக ரும், தமிழறிஞருமாகிய திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் வருகை தந்து, விவாதிக்க வேண்டிய முறை பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். மற்றும் திரு. சிவசுப்பிர மணியம், திரு நாகராஜன் அவர்களும் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள். பின்வருவோர் விவாதக் குழுவிற் தெரிவு செய்யப்பட்டார்கள்.

திரு. க. கோபாலன் B. A. (தலைவர்)
திரு. கந்தையா சிவசுப்பிரமணியம் (உப தலைவர்)
திரு. எ. இராஜநாயகம்
திரு. கி. சி. நிர்மலானந்தன்
திரு. எம். ஏ. எல். எம். சலீம்
செல்வி. மெல்றோஸ் அலெக்சாந்தர்.

சட்டக்கல்லூரி, இலங்கைப் பல்கலைக்கழகக்கட்டுப்பத்தை வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்பு வளாகம் ஆகியவற்றுடன் விவாதங்களை நடாத்த உள்ளோம்.

இவ்வாண்டு மன்ற நிதிக்காக வெள்ளவத்தை சபையர் படமாளிகையில் 'நெஞ்சிருக்கும் வரை' காட்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளோம். முத்தமிழ் விழா ஒன்றை விரைவில் நடாத்த இருக்கின்றோம்.

இந்த ஆண்டு எமது மன்றம் சில நிகழ்ச்சிகளை நடாத்தியது. ஆனால் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் அதன் முயற்சிகள் தடைப்பட்டுவிட்டன; எமது செயற்குழு பொறுப்பைக் கையேற்கும் வரை எத்தனையோ இன்னல்களுக்கிடையே மன்றத்தை வழிநடத்திச் சென்ற திரு. நா. சந்திரபோஸ் அவர்களை என்றுமே மறக்க முடியாது.

இனிவரும் இளம் சந்ததியினர் எமது மன்றத்தை மிகமிகச் சிறப்பாக நடாத்திச் செல்வார்கள் என நான் நம்புகின்றேன்; அந்த நம்பிக்கை வீண் போகாமல் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்; எந்த நேரத்தில் சென்றாலும் எம்மை முகம்மலர வரவேற்று எமது ஆக்கத்திற்கு ஊக்கமளிக்கும் அதிபர் அவர்களுக்கும் எங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், உதவியையும் என்றும் தந்து கொண்டிருக்கும் எமது உபகாப்பாளர்களாகிய திரு. சி. மாணிக்கவாசகர், திரு. பொ. சங்கரப்பிள்ளை ஆகியோருக்கும், எமது முயற்சிகள் அனைத்துக்கும் ஆக்கமும், ஊக்கமும் தந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் நன்றி கூறி நிற்கின்றேன்.

அன்பு.

வை. போ. கணேசானந்தன்.
(பொதுச் செயலாளர்)

எவன் நல்லதும் கெட்டதும் வருமிடத்தே எதனினும் விழ்ச்சியற்றவனாய், ஆவலுறுவதும் பகைப்பதுமின்றி யிருப்பானோ அவனுடைய அறிவே நிலை கொண்டது;

—கீதை

# எங்கள் கருத்து

## தமிழோசை !

சங்கத்தில் வளர்ந்தது தமிழ். இன்பத்தில் திளைத்தது தமிழ். இயல் இசை நாடகமெனும் முத்தமிழில் மூழ்கித்தது தமிழ். தமிழன்னை உருவுந் திருவும் பெற்றுக் கருவுற்றுள் ஒல்காப் - பெரும்புகழ் தொல்காப்பியத்தால். அன்னையின் சீறடியில் கலீர்கலீரென ஒலித்த நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்றதோர் காவியம். சிந்தாமணி சூடாமணியாகத் திகழ்ந்தது. அவள் கைகளில் வளையாபதி வளைந்துகொண்டது. அன்னையின் அறிவொளியைக் காட்டி அறநெறியை உலகிற்கு ஊட்டியது வள்ளுவம். அன்னையாம் தமிழ்மொழியின் புகழுணர்ந்த பன்மொழிப் புலவர் பாரதியார்

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்
மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்...''

''தேமதுரத் தமிழோசை
உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்''

என்று அவள் புகழ் பரப்பவேண்டுகின்றார்.

புலவர்களாலும் புரவலர்களாலும் வளர்ந்த தமிழ் இன்று மன்றங்களாலும், ஆராய்ச்சிக் கழகங்களாலும் வளர்க்கப்படுகிறது. இன்று உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம் நற்பணியாற்றுவதை நாமறிவோம். மும்முறை தமிழாராய்ந்த ஆராய்ச்சிக் கழகம் நாலாவது மகாநாட்டினை இலங்கையில் நடாத்த முடிவு செய்துள்ளது. ஆட்சியினர் நாவலர்க்கு நல்ல கௌரவம் நல்கினர். தமிழ்வளர்த்த அந்த நல்லைநகர் தந்த நாவலருக்குச் சிலை எடுத்தோம். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற மூதுரைக்கொப்ப வாழ்ந்த முனிவர் விபுலானந்தருக்கும் விழா எடுத்தோம். நவாலியூர் தந்த தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரின் பெருமையை புவியறிய வைத்தோம். இத்தகைய நற்றமிழறிஞர் வாழ்ந்த நம் நாட்டிலே நாலாவது ஆராய்ச்சி மகாநாடு நடைபெறுவது நல்லதொரு பொருத்தமே. இலங்கை பெற்ற தவப் புதல்வர்களை தன்னகத்தே கொண்ட தமிழாராய்ச்சிக் கழகம் தலை சிறந்ததொரு மகாநாட்டை யாவரும் போற்றும் வண்ணம் நடாத்தும் என்பது எங்கள் நம்பிக்கை. அதற்கு வேண்டிய ஒத்துழைப்பை நல்கி நாட்டின் விருந்தோம்பலையும், ஆற்றலையும் பார்புகழச் செய்வது எமது கடமை.

இலக்கிய உணர்வை மக்களிடையே வளர்த்துப் பண்புடன் திகழ்ந்தனர் நம் முன்னோர். இன்றைய இளஞ் சமுதாயம் வெளிநாட்டு அநாகரிக உடைகளிலும், கவர்ச்சிக் கலாச்சாரங்களிலும் மயங்குவதற்கு இலக்கிய அறிவின்மையும் ஒரு காரணமாகும். இலக்கியத்தையோ இலக்கணத்தையோ கலாசாலைகளில் கற்றவர்கள்தான் அவற்றை உணரமுடியும், உருவாக்க முடியும் என்பதில்லை. பட்டிமன்றம் அமைத்துப் பால் வாய்ப் பசுந் தமிழை வளர்த்தவர்கள் இயற்கையாகவே கற்றுணர்ந்த மக்கள் தான். தமிழாராய்ச்சிக் கழகம் உலகம் எங்கும் உள்ள இளம் தமிழ் உள்ளங்களை உவகைதரும் உத்தமமான வழிக்கு இட்டுச் செல்ல இலக்கியத்தை எங்கும் பரப்ப வேண்டும்.

தமிழோசை தரணியில் வளர, தமிழ்ப் புலமை புவியில் வளர, வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும் கவிப் பெருக்கும் பெருகித் தமிழருவியாக ஓட ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற புறநானூற்றின் அறநெறி பிறழாது தமிழாராய்ச்சிக் கழகம் நற்பணியாற்ற வேண்டுமென நல்வாழ்த்து நவில்கிறோம்.

பொதிகையெனும் பொருப்பிலே பிறந்து தென்னவன் தன்புகழிலே கிடந்து சங்கமெனும் பொய்யாக்—குலக் கொடியாளொடு கொஞ்சிக் குலவிய ''தமிழருவி'' ஈழத்தலைநகரில் இன் தமிழ் இளைஞர்களின் இதயத்தே ஓர் கிளையாய் ஊற்றெடுத்து உங்கள் உள்ளக் கமலங்களை தன் தங்கத் தமிழ் நீரால் நீராட்டப் பொங்கி வருகிருள்.

கருத்தூன்றி, கன்னித் தமிழாளின் கவின் கூட்டி நாம் படைக்கும் கலைவிழாவிலே தமிழருவித் தாயவள் தண்மைமிகு தன் நான்காம் மடை திறந்து சலசலத்து ஓடி வருகின்ருள். முகையவிழ்ந்து மணம் சிந்தும் மலராடை அணிந்து முத்தமிழ்த்தேன் சிந்தி முறுவலுடன் வருகின்ற தமிழருவிதன்னில் நீராடிடுவீர், அங்கே சிந்துகின்ற தமிழ்த்தேனை மாந்திடுவீர்;

தமிழருவியின் மூன்று படைகளிலும் மூழ்கியெழுந்து முத்தமிழைச் சுவைத்திட்ட நீங்கள் அடுத்த மடை தடைப்பட்ட நிலைகண்டு துவண்டிருப்பீர். இன்னல் பல பின்னி வந்ததனுல் இளைத்தனரோ இளைஞரென்று எண்ணி நொந்திருப்பீர். ''பொருள்'' எனும் பொல்லாத கல்நெஞ்சன் பொங்கிவரும் தமிழருவி மடைக்குத் தடையிட்டான். 'தமிழருவி' பாய்ந்திடக்குறுக்கிட்ட தடைதன்னை இளைஞர் நாம் ''உணர்ச்சி'' எனும் படைகொண்டும், ஈந்துவப்போர் துணைகொண்டும் உடைத்திட்டோம், தடைமீறிப்பாய்கின்ற ''தமிழருவி'' மடைகண்டு தலை நிமிர்ந்து நிற்கின்ருேம்.

ஆழ்கடலின் அடியிலே மூச்சடக்கி முத்தெடுத்தவனின் முகத்திலே தோன்றுகின்ற ஒளி அந்த முத்தின் ஒளியைவிட அதிகமன்ருே. சிறிவந்த சிரமங்களைத் தாண்டி தமிழருவியின் நான்காவது வெளியீடு உங்கள் கரங்களிலே தவழ்கின்ற போது முத்துக்குளித்து வெற்றியீட்டியவனின் பெருமிதநிலையிலே நாம் நிற்கிருேம். இனிப் பொங்கு தமிழருவிக்குத் தடை என்ன தோன்றினும், அவற்றை வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் வெற்றித் தோள்கொண்ட நம் இளந்தமிழர் தங்கு தடையின்றி உடைத்தெறிவர் என உறுதி கூறுகிருேம்.

ஆண்டு தோறும் அன்னைத் தமிழுக்கு விழா வெடுத்து தலைநகரில் அவள் பெருமைதனை ஒலிக்கின்றது நம்தமிழ்மன்றம். அந்த ஒலியுடன் கலந்து சலசலத்து ஓடிவரும் ''தமிழருவியின்'' ஓசையும் உங்கள் செவிகளிலே ஒலித்து உள்ளத்தைத் தொட்டு தமிழுணர்வைத் தூண்டட்டும். தேன்பிளிற்றும் மலர் கொண்ட 'தமிழருவி' மடைதன்னில் ஆடிக்களித்திடுவீர். தமிழமுதம் பருகிடுவீர்.

இதழாசிரியர்கள்

எந்த நாட்டிலும் பெருமைப்படத்தக்க அருமையான இலக்கியம் தமிழிலக்கியம்.

—கெலட்

# "பகுத்தறிவு பரவட்டும்"

"அமுதன்"

பகுத்தறிவு வாதம் (Rationalism) என்றவுடன் அகமகிழ்வோரைக் காண்கிறோம். அஞ்சுவோரையும் காண்கிறோம். ஏற்பவர்களைக் காண்கிறோம். எதிர்ப்பவர்களையும் காண்கிறோம். வாழ்த்துபவர்களைக் காண்கின்றோம். வைபவர்களையும் காண்கின்றோம் ஒரு சாரார் ஒரு விதமாகவும், இன்னொரு சாரார் இன்னொரு விதமாகவும் வரவேற்கும் இவ்வாதத்தை மாணவர்களாகிய நாம் எவ்விதம் எதிர்நோக்குவது? வரவேற்போமா? வழியனுப்புவோமா? ஒவ்வொரு மாணவ நண்பனும் இக்கேள்விகளைத் தன்னுள் எழுப்பிச் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் முடிவு காணவேண்டும்.

ஒரு விடயத்தின் முடிவை கண்மூடித்தனமாக எடுத்துவிட முடியாது. அவர் சொன்னர், இவர் சொன்னர் என அடுத்தவரின் அபிப்பிராய அடிப்படையிலும் எடுத்துவிட முடியாது. விடயம் சம்பந்தமான சரியான தகவல்களின் அடிப்படையிலேயே முடிவைக் காணமுடியும். எனவே எமக்குத் தேவையாகும் முக்கிய தகவல்கள் சிலவற்றையும்; விடயம் சம்பந்தமான வேறு சில தகவல்களையும் முடிந்தளவில் தரமுயல்கின்றேன்.

பகுத்தறிவு என்பது எமது ஆறும் அறிவு. பகுத்தறிவே சீவராசிகளை மனிதர்களென்றும் மிருகங்களென்றும் கூறு போடுகின்றது. பகுத்தறிவு மக்களுக்கு நற்குணங்களை, நல்லொழுக்கங்களை, நவீன சாதனங்களை, நாகரீகத்தை நல்கியது. நாம் கால குண வேறுபாடுகளாற் கலக்கமடையவில்லையானல், நோயாலும் நொடியாலும் கஷ்டப்படவில்லையானல், சண்டைகளாலும் சச்சரவுகளினலும் கலங்கவில்லையானல் காரணம் பகுத்தறிவே. நாம் இனிதாயும் இன்பமாயும், சுகமாயும், சுலபமாயும், குடும்பமாயும் கூட்டாயும் வாழ வழி வகுத்தது பகுத்தறிவே;

> உன்னையே நீ அறிவாய் எதற்கும் ஏன்? எதற்காக? என்று கேள். அப்படிக் கேட்டதால் தான் சிலை வடிக்கும் சிற்பி சிந்தனைச் சிற்பியாக மாறினன்.
>
> சிந்தித்தால் அறிவு வளரும். அறிவு வளர்ந்துவிட்டால் மீட்சியும் மகிழ்ச்சியும் உண்டு. வாழ்வும் வளமும் உண்டு என்கிறர் அறிவகம் அளிக்கும் அமுதன்.

பகுத்தறிவு என்றவுடன் அப்பதத்தின் பொருள் புரிகின்றது. பகுத்தறிதல் பகுத்து அல்லது வகுத்து அறிதல் எனப் பொருள்படும். ஒன்றைப் பிரித்து வகுத்து சரி பிழையைப் பார்த்து, இலாப நட்டத்தைக் கணக்கிட்டு, நன்மை தீமையை மதிப்பிட்டு, தக்கதானல் தகுந்ததானல் ஏற்றல் என்பது விளங்குகின்றது. இது தான் "குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்ளும்" நிலை. "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருளில் மெய்ப் பொருள் காணும்" முறை. இதுவன்றி எந்நிலையிலும் எதிர்மறை நிகழ்ச்சியல்ல. கண்ணல் கண்டதையும், காதால் கேட்டதையும் நம்புவதல்ல. படித்ததையும் சொல்லப்பட்டதையும் ஏற்பதல்ல.

தமிழக பகுத்தறிவுச் செம்மல் வள்ளுவனர் இதனை மிக அழகாக எடுத்தியம்புகின்றர்.

"தேதற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்"

எனப் பொருள் மிகைபட சுவைமிகை படச் சுருக்கமாகக் கூறியுள்ளார். வள்ளுவனாரின் வள்ளுவமே பகுத்தறிவுக் கருவூலம். பகுத்தறிவுப் பாசறையைக் கண்டு களிக்க விரும்பும் அனைவரும் வீண்நேரம் வெளியே செலவிடாது நேரே வள்ளுவத்தை நாடலாம்

வள்ளுவனார் தென்னகத்தே என்றால் கிட்டத்தட்ட அதே காலத்தில் கிரேக்க நாட்டில் வாழ்ந்துவந்தவர் சோகிரட்டீஸ் என்பவர். பகுத்தறிவு பரவலுக்கு மேற்கு நாட்டில் பெரும் பணியாற்றியவர். எதையும் ஏன், எப்படி, எங்ஙனம் என்ற கேள்விகளை எழுப்பியே ஏற்கவேண்டும் என வீதி வீதியாக, வீடு வீடாகச் சென்று விளக்கிப் பகுத்தறிவுப் பேரெழுச்சிக்கு வித்திட்டவர். அவரின் சிந்தனையே, சீர்திருத்தவாதமே அன்னாரின் ஆயுளை அகாலத்தில் சோகம் தோய்ந்த கதையாய் முடிந்தது. இவர்களைப்போல் மேலும் குறிப்பிடவேண்டில், வட இந்தியாவில் வாழ்ந்த கௌதம புத்தரைக் குறிப்பிடலாம் புத்தபெருமானின் புதுமைவாதத்தால் அறியாமை அகன்று அறிவொளி எழுந்தது. மூடநம்பிக்கைகளும் முட்டாள் கொள்கைகளும் நிலை குலைந்தன.

குறிப்பிட்ட சிந்தனைச் சிற்பிகளின் காலம் சுமார் இரண்டாயிரத்திற்கும் இரண்டாயிரத்தை நூற்றுக்கு மிடைப்பட்டது. இக்கால எல்லைக்கு மேல் பகுத்தறிவுவாதத்தின் வளர்ச்சிக்கு யார் யார் முன்னோடிகளாக இருந்தார்கள், எப்படி எப்படி சேவை புரிந்தார்கள் என்பதை என்னால் ஆதார அத்தாட்சிகளுடன் சொல்லிவிட முடியாது. இதனைச் சரித்திர வல்லுனரே கூறவேண்டும்.

பிற்காலத்துக்கு வருவோம். பகுத்தறிவு வாதிகள் பலரைக் காண்கின்றோம். அவரைப் பலரும் அறிவர். அவர்கள் பட்டியல் கட்டுக்கடங்காது. உதாரணமாக ஒரு சிலரைக் குறிப்பிடலாம். இங்கசோல் (Ingersol), அல்பேட் ஈன்ஸ்டின் (Alberd Einstien), பேரன் ரெசேல் (Betrand Russel) ஜவகர்லால் நேரு (Jawaharlal Nehru), சி. என். அண்ணாதுரை ஆகியவர்கள் இவர்களிற் சிலர்: இவர்கள் விட்டுச் சென்ற நூல்கள் நூலகங்களிலே நிறைய இருக்கின்றன. பகுத்தறிவு பற்றிப் படிக்க முற்படுவோர் இவ்வறிஞரின் நற்படைப்புகளைப் படித்துப் பயனடைய வேண்டும்.

இன்று பகுத்தறிவுத் துறையில் யார் யார் பணிபுரிகின்றார்கள் என்பதை நாம் அறிவோம். நாடும் அறியும். பகுத்தறிவு தனித்தனி ஆதரவாளர்களால் வளர்க்கப்பட்டு, பின் ஆதரவாளர்கள் ஒன்று சேர்ந்து இயக்கங்களைத் தோற்றுவித்து இன்று இயக்கங்கள் நாட்டுக்கு நாடு நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

இலங்கையைப் பொறுத்தளவில் டாக்டர் ஏப்ரஹாம் ரி. கோவூர் (Dr. Abraham T. Kovoor) அவர்களின் தலைமையிற் பகுத்தறிவு இயக்கமொன்று சுறுசுறுப்பாய், விறுவிறுப்பாய் யாவரும் வியக்கும் வண்ணம் வளர்ந்து வருகின்றது. இதனை இலங்கையர் அனைவரும் அறிவர். பகுத்தறிவு உலகமும் அறியும். டாக்டரும், அவரது இயக்கத்தினரும், மூடநம்பிக்கையும், அறியாமைக்கும் காலத்திற்குக் காலம் சவால் விட்டு, அவற்றுடன் மோதி மிதித்து ஒவ்வொரு அங்கமங்கமாய் அழித்தொழித்து வருகின்றனர். காலகெதியில் எமது நாட்டில் அறிவியல் தலைதூக்கும், அறியாமை தலைசாய்க்கும், மனிதாபிமானம் மலர்ச்சி பெறும், விருத்தி பெருகும், விடிவு கிட்டும் என நம்பலாம். இலங்கைப் பகுத்தறிவு இயக்கம் தலைநகரில் மட்டும் தங்கியிராது, வெளிநகர்களுக்கும் வெளிக்கிளம்பத் தலைப்பட்டுள்ளது. பகுத்தறிவாளர் மேலும் இதைக் கிராமப்புறங்களுக்கும் கொண்டுசெல்லவேண்டும். பட்டி தொட்டியெல்லாம் பரப்பவேண்டும் என ஆசைப்படுகின்றோம். மும்மொழிகளிலும் முழுமூச்சாக இயக்கவேண்டும் என வேண்டுகின்றோம்.

தமிழுலகைப் பொறுத்தளவில், பகுத்தறிவு வாதம் புதியதுமல்ல, புரியாததுமல்ல. தமிழ் கொலு வீற்றிருந்த அந்நாளில் பகுத்தறிவே அடிப்படையாக

பெரியார் - ஈ.வே.இரா.

இருந்தது. பகுத்தறிவுக் கொவ்வாத எதையும் தமிழகம் ஏற்றதல்ல. தமிழினதும் தமிழகத்தினதும் எழிலுக்கும், ஏற்றத்திற்கும், எழுச்சிக்கும் காரணமிது. ஓங்கி வளரும் தமிழ்ப் பேரரசை ஒதுக்கிவிடச் சூழ்ச்சிகள் மதங்களாகவும், வேதங்களாகவும், ஊடுருவின. அந்தோ! பேரரசு வீழ்ந்தது! ஐயகோ! பெருவாழ்வு அழிந்தது! சதி வென்றது! மதி மறந்தது! அறிவு மாசுபட்டது!

மீண்டும் தமிழுலகம் வாழ, தமிழ் வாழ வழி பகுத்தறிவு. வழி உண்டு நமக்கு. மனம்தான் உடன் தேவை. மனம் வைத்தால் வாழ்வுண்டு, வளமுண்டு, வளர்ச்சியுமுண்டு.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறுவது போல், செத்த பிறகு சிவயோகம், வைகுந்தம் சேர்ந்திடலாமென எண்ணியிராது. ஆயிரம் தெய்வங்கள் உள எனத் தேடியலையாது, மாடனை, காடனை, வேடனைப் போற்றி மயங்காது, சாத்திரங்கள் பித்தமனிதர் பேயுரை எனத் தேர்ந்து தெளிந்து சுத்த அறிவே சிவமென அறிந்து ஈடேறுவோமாக

வாழ்க பகுத்தறிவு!

வளர்க பகுத்தறிவு இயக்கம்!

*With the best Compliments of*

**Greenlands Hotel**

**BAMBALAPITIYA.**

*With Compliments*

*from*

# ST. CHRISTOPHERS'
# D/C MILLS

## PALUGAMA
## DUMMALASURIYA

*Proprietor:*

**Mr. R. I. Fernandopulle**

*Telephone:* KOCHCHIKADE 94.

# ஆற்றுக்கு அணைகட்ட வேண்டும்

''தர்மா''

ஆசை என்னும் ஆறு பெருக்கெடுத்தது கமலத்தின் இதயத்தில் அணைகட்டத் துடித்தான் சுந்தரம். ஆனால்......................

சரோ! சரோ! இவள் எங்கை போட்டாள்?

சரோ......!

என்னம்மா?

''தண்ணியை வை தம்பி வாற நேரமாப் போச்சு'' ஓ வைக்கிறன் சாகும் வரைக்கும் உங்களுக்குத்தான் செய்ய வேண்டும் போல கிடக்குது. உங்கை வேற எங்க இப்பிடி நடக்குது''

தாய்க்கு மகள் அளித்த பதில் தாயின் உள்ளத்தில் வேதனையைக் கூட்டியது. ஆனால் அவளால் என்ன செய்யமுடியும்? யோசித்து, யோசித்து மரமாகி விட்ட அவள் சிந்தனை அப்படியே நின்றது அவள் கைகள் மின்வேகத்தில் கிடுகைப் பின்னிக் கொண்டிருந்தன.

அம்மா!

மூத்தமகள் கமலா இன்னொரு கிடுகைத் தூக்கி முன்னே வைத்துக்கொண்டு அவள் முன் அமர்ந்தாள்.

என்ன பிள்ளை?

''பக்கத்து வீட்டுச் சந்திராவுக்குக் கல்யாணம் ஒழுங்காப் போச்சாம். மாப்பிள்ளை கிளார்க் உத்தியோகமாம். வாற கிழமை எழுத்தாம்.''

ம்...... ம். நீண்ட மௌனம்

அவர்களைச் சூழ்ந்தது பிறகு......

சிந்தனைகள் மலர்ந்தன. உள்ளம் வெடிக்கின்றது. இயற்கையின் கைவண்ணம், இறைவனின் தண்டனை, ஆசையின் உந்தல், கனவுகளின் போராட்டம், பொறுமையின் முடிவு, அத்தனையும் ஒன்றாகிக் கேள்வியாகி வெளிவந்தது.

அம்மா! அந்தச் சிவக்கொழுந்துவின்ற மகனைப் பேசிப் போனிங்கள். அவை இன்னும் முடிவு சொல்லேலயை? பெடியன் வலு நல்ல பெடியனும். எல்லாரும் சொல்லுதுகள்''

ஐயோ! கடவுளே! எப்பவோ வீட்டுக்கு வந்து, உணர்ச்சிகளின் எழுச்சியைக் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரம் அப்படியே உட்கார்ந்தான்.

நல்லதொரு உத்தியோகத்திலிருந்தும் குடும்பத்தைச் சரியாகக் கவனிக்காமல் இருந்து விட்டார் அவன் தந்தை. குடியும், சூதாட்டமும் அவரை ஆட்டிப் படைத்தன. சொந்த மக்களைப் பார்க்க வேண்டும். அவர்களுக்குக் கல்யாணம் செய்துகொடுக்கவேண்டும். என்ற சிந்தனையே அவர் மனதில் எழவில்லை. மனைவி சுந்தரத்தின் தாய் கொஞ்சினள், கெஞ்சினள். கதறினள், குமிறினள். அவளுக்குக் கிடைத்தது. அடியும், உதையும்தான். பண்பாட்டின் உச்சியை அடைந்தவள் அவள். ஒரு தாய் ஒரு மனைவி, கணவனைத் தெய்வமாக மதிக்கவேண்டும் என்ற கருத்தைப் பரிபூரணமாக நம்பி, அதன்படியே நடந்துகொள்பவள் அவள். பாவம் அவளால் ஒன்றுமே செய்து கொள்ள முடியாமற் போய்விட்டது.

விளைவு...... இன்று

கல்யாணத்திற்கு நிற்கும் அவனது இரண்டு சகோதரிகள் ஒருத்தி தங்கை. மற்றவள் அக்கா. கல்யாண வயதை அடைந்த உடனேயே அவர்களுக்குரியவற்றைச் செய்து கல்யாணங்கள் பேசி முற்

ருக்கிவிடுகின்றூர்கள். குடும்பத்தில் அக்கறை கொண்ட தந்தைமார் ஆனுல் எல்லாத் தந்தைமாரும் அப்படியே இல்லையே. இன்று ''அம்மா எனக்குக் கல்யாணம் செய்துவை'' என்று பெற்ற தாயை நோக்கி மக்கள் கேட்கின்றூர்கள். அப்படி நேரே கேட்கவில்லைத்தான்: ஆனுல் சுந்தரத்திற்கு அப்படி என்ன ஒரு குழந்தைக்கு இருக்கும் அறிவு கூடவா இல்லை. அவன் நெஞ்சில் ஏதோ வலித்தது. தொண்டை அடைத்தது. கண்கள் குழமமாயின

''தம்பி எப்ப வந்தனி? வெள்ளெனக்கூட இருக்கிறியே!'' அம்மா அவசரமாகக் கேட்டுக்கொண்டு வந்தாள்.

''இல்லை அம்மா இப்பத்தான் வந்தனுன்''

ஆனுல் அவன் முகம் சொல்லிய செய்தியைத் தாய் புரிந்து கொண்டாள்

''அம்மா! சிவக்கொழுந்து எவ்வளவு சீதனம் கேட்கிறூர்?''

''அதை விடு தம்பி! அந்தாள் முப்பதினுயிரமும் வீடும் இல்லாவிடில் ஐம்பதினுயிரம் காசு எண்டு நிக்குது. எங்களால் கனவு கூடக் காணமுடியாது அது அதெல்லாம் பிறகு பார்க்கலாம் இப்ப நீ தண்ணியைக் குடி''

''பிறகா? பிறகு என்றுல் எப்ப அம்மா? அவனுக்குத் தெரியும். எவ்வளவு காலங்கள் பிறகு பிறகு என்று போய் விட்டன. இயலாமையை மூடி மறைப்பதற்கு பிறகு என்ற காரணத்தை எவ்வளவு நாட்களுக்குத்தான் சொல்லிக்கொண்டிருப்பது: அவனும் சும்மாவா இருக்கின்றூன். மாடு மாதிரி உழைக்கின்றூன். உழைத்து உழைத்து தந்தைதாயார் பட்ட கடனை அடைத்துக் கொண்டிருக்கின்றூன். இல்லாவிடில் இருப்பதற்குக் காணியே இல்லாமற் போய்விடும்

''நான் இண்டைக்குக் கொழும்புக்குப் போறன் அம்மா?

ஏன்? தம்பி ஏன்? இன்னும் இரண்டு நாட்களுக்கு நிற்கலாமென்று சொன்னுய் பிறகு திடீரென்று போகப்போறன் எண்டுறுய்''

''இல்லையப்மா நான் கட்டாயம் போகவேண்டும்''

கொழும்பு என்ன திடீரென மாறிவிடுமா? கொழும்பு என்றும் கொழும்பு தான். சுந்தரம் என்றும் சுந்தரம் தான்.

''என்னடாப்பா சுந்தரம்! ஒரே யோசனையாய் இருக்கிறுய் என்ன விஷயம்''

''ஒண்டு மில்லையடாப்பா சும்மா யோசிக்கிறன்''

''ஏன் வெள்ளென வந்தனி? லீவு இன்னும் மூடியவில்லையே?''

கணேசன் விட்டால்தானே. அலுவலகம் வந்தாகிவிட்டது. இனி என்ன மாலை வரையும் பொழுதுபோக வேண்டுமே. அரசியல் பிரச்சனைகள் தொடக்கம் என்னென்னவோ எல்லாம் கதைத்தான். சுந்தரம் உம் போட்டுக்கொண்டிருந்தான். வேறு என்ன செய்வது வேலையில் கவனம் செலுத்த அவனுல் முடியவில்லை. பைலைத் திறந்ததும் கமலாவின் முகம் எட்டிப்பார்த்தது. அன்று அவள் தாயை நோக்கிக் கேட்ட அந்தக் கேள்வி அவனுள் எதிரொலித்தது. அந்த முகம்... எவ்வளவு உணர்ச்சிகளைத் தாங்கி நின்றது. அவள் கண்களிலேயிருந்து தெறித்த ஆவல்... அதற்கு இணையாக எதைச் சொல்வது.

''சுந்தரம் உனக்கொரு விஷயம் தெரியுமே. கணேசன் மறுபடியும் தொடங்கினுன்''

''உம் சொல்லடாப்பா''

''நான் முந்தி ஒருக்காற் சொன்னன். உனக்கு நினைவிருக்கே. அந்தத் தணிகாசலத்தின் மகள் — சுந்தரி எண்டு. அவள் பள்ளிக்கூடத்தில் படிக்கேக்குள்ள கூட ஒரு மாதிரித்தான். பிறகு கனபேர் பல

# உலகம் பலவிதம்!

கற்றுக் கனல் தெறிக்கக்
கவிதை பல இயற்றி;
சமத்துவம் சமதர்மம்
சகலவும் உட்புகுத்தி;
சமயம் வரும்போது
'சட்'டென்று மனம் மாறி;
வேற்றுமை காட்டிடுவர்
வேதனை ஊட்டிடுவர்.

உள்ளத்தில் உள்ளதெல்லாம்
உரைத்திட வார்த்தையில்லை
எல்லோர்க்கும் என் அன்பு
எப்போதும் உண்டென்று
சொன்மாரி பல பொழிந்து
சொக்கித் திணற வைப்பார்
உதவியென்று கேட்டிடின்
உதைத்தும் விரட்டுவார்.

தமிழ் எங்கள் தாய்மொழி
தமிழோடு எம் மொழியும்
கலப்பதைப் பொறுத்திடோம்
கலந்திடின் துடித்திடுவோம்
என்றெல்லாம் எடுத்துரைத்து
எதிர்ப்புப்பல காட்டிடுவார்
''இங்கிலிஷ்'' மொழிமட்டும்
இதற்கு விதிவிலக்காம்.

எல்லோரும் ஓர் குலம்
என்றவர் கூறினும்
ஏய் நீ கீழ்மகன்
எனும் வார்த்தை போகாது
இப்படிப் பல ரகம்
இப்புவி மீதினில்
இன்றும் சொல்லலாம்
எனக்கேன் வீண்வம்பு.

மு. அ. ல. மு. சலீம்
மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு
மூன்றாம் வருடம்

With the best Compliments of

# PUSPA JEWELLERS

**154, SEA STREET**

**COLOMBO - 11**

With the best Compliments of

**American Engineering Corporation**

Hardware merchants and Estate Suppliers

**31, Old Moor Street, COLOMBO-12**

Phone: **34430**

We are technologists in the disappearing act.

With best Compliments from the makers of

*

**Anandi Vanishing Cream**

*

**294, George R. de Silva Mawatte**

**COLOMBO - 13**

## தமிழ் மன்ற உத்தியோகத்தர்கள் 1973—1974



இருப்பவர்கள் ;

(இடமிருந்து வலம்) திரு. பொ. சங்கரப்பிள்ளை (உப காப்பாளர்) திரு. ஆ. குமாரவேல் (பொருளாளர்) திரு. வை. பொ. கணேசானந்தன் (பொதுச் செயலாளர்) திரு. கு. சீ. மு. மஃரூப் (தலைவர்) திரு. கே. எம். டி. பெரேரா (அதிபர், காப்பாளர்) செல்வி. த. யோகேஸ்வரி, திரு. சி. மாணிக்கவாசகர் (உபகாப்பாளர்)

நிற்பவர்கள் ;

(இடமிருந்து வலம்) திரு. ந. தங்கராசா, திரு. ஜி. எஸ். நிர்மலானந்தன், திரு. கந்தையா சிவசுப்பிரமணியம் (இதழாசிரியர்). திரு. நி. ஞானச்சந்திரன் (உப செயலாளர்), திரு. எ. பொ. மதுரநாயகம் (உபதலைவர்) திரு. க. கருணாகரன், திரு. சின்னத்தம்பி சிறீஸ்கந்தராஜா (இதழாசிரியர்) திரு. வேல் அமுதலிங்கம் (இலக்கியச் செயலாளர்), திரு. வெஸ்லி தம்பியப்பா.

# உலகம் எதனுல் உளது?

திருமுருக கிருபானந்தவாரியார்

> சான்ருேர் உளராதலால் உலகம் நிலை பெற்று வாழ்கிறதெனக்கூறி, அச்சால் புடைமைக்கு இலக்கிய ஆதாரத்துடன் விளக்கம் தருகிருர் ஆசிரியர் திருமுருக கிருபானந்தவாரியார். தமக்கேயுரிய தனிநடையில் அருவிக்கு அவர் தந்த விருந்தையுண்டு பயன் பெறுக

ஒரு பெரிய ஏரியின் நடுவில் சிறிய மண்ணுருண்டை நிற்பது போல், அகண்ட கடலுக்கு நடுவில் இப்பூமி இருக்கின்றது. அதை நினைக்க இப்பூமி எவ்வாறு கடலிற் கரைந்து போகாமல் நிற்கின்றது? என்ற ஐயமும் ஆச்சரியமும் எழுகின்றன. கடல் சிறிது கொதித்து எழுந்தால் இந்தவுலகம் இருந்த இடந் தெரியாமல் அழிந்து ஒழியும்.

பூமியைச் சுற்றிக் கடல்; கடலை ஆடையாக உலகம் உடுத்திருக்கின்றது என்று புலவர் வருணிப்பர்.

''உவரலைப் புணரியாடை உலகுடை
வேந்தர் காணக்
கவர்தரப் புகறியென்ருன் கண்ணருள்
சிறிதுமில்லான்''

என்பார் வில்லிபுத்தூரர்

நிலப்பரப்பு கடலைநோக்க மிகமிகச் சிறியது. பெரிய ஏரியின் நடுவில் மூன்று அடி அகல நீளமுள்ள சிறிய நிலத்தில் ஒருவன் இருப்பானுனல் அஞ்சாமல் வாழமுடியாது. அதுபோல் நாம் இவ்வுலகில் வாழ்வது, கடல் பொங்கினுல் உலகம் அழிந்து படும் என்ற அச்சம் அறிஞர்க்கு எழும். அதனையறியாது நாம் உண்பதும் உறங்குவதுமாகக் கவலையின்றிக் கிடக்கின்ருேம். கடல் கோள் மூன்று முறை நிகழ்ந்ததாக அறிஞர் கருதுகின்றனர். அதனுல் ''கொடுங்கடல்'' என்று கூடக் கடலை நிந்திக்கின்றனர்.

இளம்பெரும் வழுதி என்று ஒரு புலவர் இருந்தனர். அவர் சங்க காலத்தில் இருந்த பெரிய அறிஞர். அவருக்கு இந்த ஐயம் உண்டாகியது. ''இந்தவுலகம் எதனுல் உளது?'' என்ற ஐயந்தான். தன்னந்தனியாக இருந்து ஆராய்ந்தார். மாசில்லாத கண்ணுடியில் எல்லாம் பிரதி பலிப்பது போல், தெளிந்த உள்ளத்தில் உண்மைக் கருத்துகள் தோன்றும். அவருடைய மாசில்லா உள்ளத்தில் அடியிற் கண்ட கருத்து தோன்றியது. அவர் புலவரல்லவா? உள்ளத்திற் தோன்றிய கருத்து உரையாக இல்லை. அழகிய பாடலாக வெளிப்பட்டது.

''தமக்கென வாழாமல் பிறர்க்கென்றே வாழ்கின்ற வலிய முயற்சியையுடைய மாட்சிமை தங்கிய ஆன்ருேர் இவ்வுலகில் வாழ்கின்றனர். அதனுல் இந்த வுலகம் நிலைபெற்றிருக்கின்றது'' என்கின்ருர். ஆன்ருேர் என்ருல் அவர் எப்படிப்பட்டவர்; அவர்பால் என்ன என்ன குணங்கள் இருக்கின்றன; எதனுல் அவர் ஆன்ருேராயினர் என்ற வினுக்களுக்கு விடையிறுப்பான் போன்று உலகம் எந்த ஆன்ருேரால் நிலைநின்று இருக்கின்றதோ அந்த ஆன்ருேர் குணங்களை மிகமிக சுவையுடைய தீந்தமிழ்ச் சொற்களால் நவில்கின்ருர்.

> தமக்கென வாழாமல்பிறர்க்கென வாழ்வர் ஆன்ருேர்
>
> ஃ ஃ
>
> அமிழ்தமேயாயினும் தனித்து உண்ணுர்கள் அந்த உத்தமர்கள்
>
> ஃ ஃ
>
> ''இருநிலம் பொறைதாங்கி நிலைபெற்றிருப்பது சான்றவர் உண்மையால் என அறிக''

அந்த ஆன்றோர்க்கு உயிர்போன்ற ஒரு பெரிய இலக்கணம் ''தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல்''

இத்தகைய ஆன்றோர்பால் ஆறு அருங் குணங்கள் இருக்கின்றன என்றார்.

1. இந்திரன் தேவாசுரர்களுடன் கூடி அரும்பாடு பட்டுப் பாற்கடலைக் கடைந்து எடுத்த அமிழ்தமே கிடைப்பதானாலும் தனித்து உண்ணமாட்டார்கள்: கிடைத் தற்கரிய அமிழ்தத்தையும் பலர்க்குப் பங்கிட்டு உண்பார்கள்.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று
— திருக்குறள்

2. யார் மாட்டும் எதன் பொருட் டும் வெறுத்து முனிவு கொள்ள மாட் டார்கள்.

3. சாமானியமான மனிதர் அஞ்சுவதுபோல் செயற்கருஞ் செயல்களுக்கு அஞ்சி மனம் மடிந்து சோம்பியிருக்கமாட் டார்கள்.

4. புகழுக்கு உரிய செயலாயின் உயிரையும் வழங்குவர்.

5. உலகம் பழிக்கத்தக்க செயலாயின் உலகமுழுவதுங் கிடைப்பதாயினும் மேற்கொள்ளமாட்டார்கள்.

5. முயற்சிகளில் அயர்ச்சி அடைய மாட்டார்கள்.

இந்த ஆறுவகையான மாட்சிமைகளை டையவர்களே ஆன்றோர்கள்.

இந்தக் கருத்துகளை செஞ்சொற்களால் தொடுத்து இனிமையாக இளம் பெரும்வழுதி பாடிய அரிய பாடல் வருமாறு

உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சி;
புகழெனின் உயிரும் கொடுக்குவர்:
பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்;
அயர்விலர்;
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.

[அன்ன - அப்படிப்பட்ட, நோன்றாள்- வலிய முயற்சியையுடைய, உண்மையான்- இருத்தலால்]

அமிர்தமேயாயினும் தனித்து உண் ணாமை; யார் மீதும் வெறுப்பு இன்மை; செயற்கரும் செயலுக்கு அஞ்சாமை: புகழ் எனின் உயிரும் வழங்குதல்; பழியெனின் உலகம் பெறினும் விரும்பாமை: முயற்சியில் அயர்ச்சியின்மை. இந்த ஆறு மாட்சிமைக் குணங்களையும் அணிகலமாகப் பூண்டு தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெரியோர்கள் இருப்பதால் உலகம் இருக்கின்றது.

இத்தகைய பெரியோர்கள் அன்றும் இருந்தார்கள்; இன்றும் இருக்கின்றார்கள். என்றும் இருப்பார்கள். அவர்கள் இல்லையாயின் உலகம் அழிந்துவிடும்.

இவ்வரிய கருத்தைச் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் செந்நாப்போதாராகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவரும் கூறுகின்றனர்.

சான்றவர் சான்றாண்மை குன்றின்
இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை

பரிமேலழகர்,
''அவர்க்கது குன்றாமையும்
அதற்கது தாங்கலும் இயல்பாம்'' என்பர்

இருநிலம் பொறைதாங்கி நிலைபெற்றிருப்பது சான்றவர் உண்மையால் என அறிக

விதமாகக் கதைச்சவை. நான் நம்பேல்லை கடவுளே பிள்ளையாரே நீதான் மன்னிக்க வேணும் எனக்கிந்தப் பெம்பிளைகளைப் பற்றி கதைக்கிறதெண்டால் கொஞ்சம் பயம். பிறகு பாவம்தான் கிடைக்கும்.

பிள்ளையாரிடம் ரகு அப்பீல் போட்டு விட்டுத் தொடர்ந்தான்.

அங்காலேயும் இங்காலேயும் பார்த்து விட்டுக் காதுக்குள்ள குனிந்தான். 'அவள் பிள்ளைத்தாச்சியாமடாப்பா. இங்கதான் கொண்டு வந்து ஏதோ செய்து பிள்ளையை அழிச்சுப் போட்டினம். இப்ப தணிகாசலம் மகளுக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போகுதாம். ஒரு லட்சம் சீதனமாம் உது உங்க எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சுது. உவளை இனி ஆர் முடிக்கப் போருங்கள். பெண்களை இந்தக்காலத்தில் நம்ப ஏலாது. ''இப்பிடி உலகம் கெட்டுப் போச்சுது. இந்தக் காலத்தில் யாரை நம்புறது? என்டே தெரியவில்லை''

''இஞ்சை பார் கணேசு! நான் சொன்னனான் உன்னட்டை இந்தப் பொம்பிள்ளைளைப்பற்றி அநியாயமாக் கதைக்காத உனக்குப் பாவம் கிடைக்கும் எண்டு. உன்க்கு வேற வேலை இல்லயே. கந்தோருக்கு வந்தால் உதுதான் கதை. அங்கை பார் அந்தாளை. ஏதோ உன்னட்டை அலுவலா வந்து இப்ப எவ்வளவு நேரமா உதுலை நிற்குது பார்''

''நீ நம்பாட்டில் இரு சுந்தரம். இந்த முறை நான் சொன்னது முழுக்க உண்மை. வேண்டுமென்றால் எங்கடை ஊர்க்காரர் ஆரையெண்டாலும் கேட்டுப்பார் சொல்லுவினம். அதோட அதுக்குள்ள முசுப்பாத்தி என்னெண்டால் இவை போன டாக்குத்தரிட்ட வேலை பார்க்கிற நேசை எனக்குத் தெரியும். அவள்தான் எனக்குச் சொன்னாள். சத்தியமாச் சொல்லுறன் இது நடந்தது உண்மை.

உண்மைதான். கணேசனுக்குச் சகோதரிகள் இல்லை. அவன் என்ன வேண்டுமானாலும் கதைக்கலாம். ஆனால் சுந்தரம் அப்படிக் கதைக்கலாமா?

''மிஸ்டர் சுந்தரம்! ஒரு சின்னவிஷயம்! இப்ப கேட்கலாமா?

தயங்கித் தயங்கி அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள் நளினி. அவள் சுந்தரத்துடன் வேலை செய்பவள். இமைகள் சிறகடித்துப் பறக்க, கைவிரல்கள் மேசையின் ஓரத்தில் அங்குமிங்குமாக அலைய அவன் முன்னே நின்றாள். சுந்தரம் நிமிர்ந்தான் ஒரு கணம். ஒரே ஒரு கணம் தான். அந்த ஒரு கணத்தில் ஆயிரமாயிரம் சிந்தனைகளை சுந்தரத்தின் உள்ளத்திலே உண்டாக்கி, ஏதோ ஒரு கேள்வியை மாத்திரம் அவனிடம் கேட்டுவிட்டு அவள் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள். வழமை போலச் சுந்தரம் சிந்தனையில் ஆழ்ந்தான். அவளின் தயக்கம், அவளின் அடக்கம், அவளின் அழகு. அவள் ஆயிரத்தில் ஒருத்தி. அவன் ஆயிரத்தில் ஒருவன். அவள் சுதந்திரமாக இயங்கக் கூடியவளாக இருந்தாள். ஆனால் சுந்தரம் அப்படித் தனிமனிதனாகத் தனது சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள முடியுமா?

அவனால் முடியவில்லை. எத்தனையோ நாட்கள் அந்த சலனத்தை எதிர்த்து அவன் போராடினான். அவன் இருக்கும் நிலையில் அவன் ஒருத்தியைக் காதலிக்க முடியுமா? எந்த நேரத்திலும் சகோதரிகளுக்காகத் தன்னையே அர்ப்பணிக்கவேண்டியவனாக இருக்கின்றான். இந்த நிலையில் அவன் காதலிப்பதா? அவன் காதலிக்கவில்லையே! ஏதோ ஒரு உணர்ச்சி நளினியை அவனுடன் இணைத்துக் கொண்டேயிருந்தது. அதை எதிர்த்துத்தான் அவன் தீர்க்கமாகப் போராடினான். ஆனால் அவனால் முடியவில்லை. இறுதியில் அவன் ஒரு முடிவு எடுத்தான். கல்யாணம் செய்வதானால் அவளைத்தான் செய்வது என்று. அந்த முடிவில் அவனுக்கே நம்பிக்கையில்லை. ஆனால் ஏதோ ஒரு போலிப்பிரமையில் அவன் அந்த முடிவோடு இருந்தான். தனது முடிவை அவன் அவளுக்குத் தெரிவிக்கவேயில்லை. தன்னால் அவளுடைய வாழ்வு பாழாகி விடக்கூடாது என்ற உறுதி அவனை ஆட்கொண்டிருந்தது.

ஆயிரமாயிரம் சிந்தனைகளையும் ஆசைகளையும் கற்பனைகளையும் மெல்ல மெல்லக் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருந்தான் அவன். முடியாது! அவனால் இன்பமாக ஒருகணமேனும் செலவழிக்க முடியாது செலவிடக்கூடாது. அவன் முன்னே கமலத்தையும், சரோவையும் கொண்டு வந்து நிறுத்துவதற்கு அவன் முயற்சிக்கின்றான். மெல்ல மெல்ல நளினியின் முகம் அவனிடமிருந்து மறைகின்றது. இனி நாளை இந்நேரம் வரை அவன் நளினியின் சிந்தனையை எடுக்கமாட்டான். அவளைத் தான் மணப்பேன் என்று முடிவு செய்த பிறகு இந்த நேரத்தில், இந்த ஒரு கணத்தில் மாத்திரம் அவனின் உள்ளம் மலரும். பிறகு மெல்ல மெல்ல இருண்டு விடும். இப்படி எவ்வளவு நாட்களுக்குத் தான் அவன் செய்யப் போகின்றான்?

அவன் மெல்லச் சிரித்தான் ''யெஸ் கம் கேளுங்கள் யூ மிஸ் நளினி''

சுந்தரம் டயறி எழுதிக்கொண்டிருந்தான்.

'' நண்பன் ஒருவன் கடிதம் எழுதியிருந்தான், வாழ்க்கை எப்படிப் போகின்றது. என்று கேட்டு. எனக்குச் சிரிப்புத் தான் வந்தான். ஒவ்வொரு கணமும் நான் படும் வேதனையை அவனுக்கு எழுதுவதா?

இன்று காலை படம் பார்த்தேன். படம் பார்த்தேனா? ஆம் பார்த்தேன்! எனக்கு முன்னே ஒரு சோடி, புதுமணத் தம்பதிகள் போலத் தோன்றியது. அவர்களின் இரகசியச் சிரிப்பும், பேச்சும் என்னுள் ஏதோ அந்தரங்க உணர்ச்சிகளை, கிலுகிலுப்பை ஏற்படுத்தியதா? இல்லை. இல்லவே இல்லை. என் நெஞ்சத்தினுள் ஏதோ ஒன்று ஊர்வது போன்ற உணர்ச்சி தான் ஏற்பட்டது. திடீரென நான் பல வீனமானவனாகி விட்டேன் போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. நான் அழுதேன். ஏன்? எங்கு பார்த்தாலும் மல்லிகை மணம் கமகமத்தது. எங்கு பார்த்தாலும் ஊடல்.......... ஊடல்........... ஊடல்........ ஆனால் என் வீட்டிலோ? நான்? ஏன்? என் சகோதரிகள் மல்லிகை மணம் கமகமக்க உல்லாசமாகக் கைப் பிடித்தவனுடன் படம் பார்க்க வரவே மாட்டார்களா? அவர்களின் வாழ்க்கையில் வசந்தம் வரக்கூடாதா? அப்படி என்ன பாவத்தை அவர்கள் செய்து விட்டார்கள்!

படத்திலே ஒரு நகைச்சுவை கட்டம் போலிருக்கின்றது. எங்கும் ஒரே சிரிப்பொலி. என் கண்கள் பொல பொல வென நீரைக் கொட்டிக் கொண்டிருந்தன. நான் வெளியே வந்துவிட்டேன்.

வெளியில் வந்தால் நிம்மதி கிடைக்குமா? வீதிகளிலே அதே காட்சி. பஸ்ஸில் அமர்ந்தேன். முன்னுக்கு அவன் தோள்மேல் தலையைச் சார்த்தியபடி, ரவிசங்கர் சித்தார் இசை வாசித்தது போலக் கலகல வென சிரித்துச் சிரித்து ஏதோ விடாமல் கதைத்துக் கொண்டிருந்தாள் அவள். கடற்கரைக்குப் போனேன் எங்கும் ஆணும் பெண்ணும் இணைந்திருந்ததைத்தான் காணமுடிந்தது. நடைப்பிணமாக எதையோ பறி கொடுத்தவன் போலக் கால்போன போக்கில் நடந்தேன். ஐயா! ஐயா! என்ற சத்தமும் காசு குலுங்கிய சத்தமும் என்னை நினைவுக்குக் கொண்டு வந்தன. கோவில் போலிருக்கின்றது. இயந்திரமாக இயங்கினேன். கால் கழுவினேன். உள்ளே போனேன். மனதை ஒரு வழிப்படுத்தி இறைவனை வணங்க முயன்றேன்.

''இஞ்சருங்கோ! அந்தப்பிள்ளையைப் பாருங்கோ என்ன வடிவாக் கிடக்குது பார்க்கப் பார்க்க ஆசையாய் இருக்கு எனக்குத் தூக்கிக் கொஞ்ச வேணும் போலக்கிடக்குது''

''ஆரை!'' அவன் கேட்டான் அவளை நோக்கி கண்களிலே குறும்பு விளையாடியது அவள் திரும்பினாள். பொய்க்கோபத்தோடு அவனைப் பார்க்கின்றாள் அந்தப் பார்வை அவர்களுக்கிடையே இருந்த உறவை விளம்பரப்படுத்தியது. நானும் பார்த்தேன். நான் ஆண்டவனைக் கேட்டு அழுதேன். கடவுளே எனக்கு மச்சானாக வருகின்றவன் எப்படியாகிலும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் ஒரு நாள்

ஒரே ஒரு நாளைக்கு என் சகோதரிகளுக்கு இதோ இந்தப் பெண் நிற்கின்றளே அந்த நிலையை அநுபவிக்கச் செய் அது ஒன்றே போதுமப்பா. அந்தப் பெண்போல குங்குமப் பொட்டோடு, தாலியோடு, புருஷனேடு இதோ உன் முன்னே இந்தப்பெண் எப்படி நிற்கின்றளோ? அதே போல அவர்களையும் நிற்கவை. அது போதும், அது போதுமப்பா. அது போதுமப்பா...... அது போதும்''

மறுபடியும் யாழ்ப்பாணம் வந்துவிட்டான். அதே மூகங்கள்; அதே கோலங்கள்; அதே காட்சிகள்; அதே உரையாடல்கள்'

படலை திறக்கும் சத்தம் கேட்டது: கள்ளுச் சீவுவதற்குக் கந்தன் வந்துகொண்டிருந்தான். சுந்தரத்திற்கு மல்யுத்த வீரனெருவனைப் பார்ப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டது. முறுக்கேறிய உடல் திரண்டு கிடந்த தோள்கள், உரமேறிய புஜங்கள் பரந்து கிடந்த மார்பு. கம்பீரமாக நடந்து கொண்டிருந்தான்.

சுந்தரம் சேட்டை எடுத்து மாட்டினன். அப்போது தான் நினைவு வந்தது கிழிந்த சேட் ஒன்று தைக்க வேண்டும். கமலாவைத் தேடிக்கொண்டு போனன்.

கமலம் பின்புறத்து யன்னலிலே நெஞ்சைப் பதித்தபடி, கைகளை இரண்டும் யன்னல் கம்பிகளைப் பிடித்திருக்க வைத்த கண் வாங்காமல் கந்தனைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

சுந்தரம் அவசரமாகத் திரும்பினன்.

அம்மா! அம்மோய்!

அம்மா சமையலறைக்குள் இருந்து வந்தாள்.

''அம்மா அந்தச் சிவக்காகாமுந்து வின்ற மகனைப் பேசினீங்கள் இல்லை: உடனே போய் அதை ஒழுங்கு பண்ணி எழுத்துக்கு நாளைக் குறியுங்கோ. கேட்ட சீதனம் தாறண்டு சொல்லுங்கோ''

''என்னடா உனக்கென்ன விசரா? காசுக்கு என்ன செய்ய போருய்? களவெடுக்கப் போறியே!

காசைப்பற்றி ஒன்றும் யோசிக்காதேங்கோ அதெல்லாம் நான் பார்க்கிறேன். நீங்கள் இப்ப வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுங்கோ. நான் ஒரு கிழமைக்குள்ளே வாறன்'' சுந்தரம் உறுதியாகக் கூறினன்: தாய் வியப்புடன் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றுள்.

மழை பெய்கின்றது. ஆற்றுக்கு அணை கட்ட வேண்டும்.

சுந்தரம் தணிகாசலத்தின் ஒரு லட்சத்தையும், சுந்தரியையும் தன்னுடைமையாக்கிக் கொள்வதற்காக அவர்களின் ஊரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். கணேசனும் உடன் போனன்.

வீட்டில் ''இவன் எங்கு போனவன் சொல்லாமல் கொள்ளாமல்'' என்று சுந்தரத்தின் தாயும், அவனது சகோதரிகளும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

# அலைகடலில் விதிஅலைகள்

''தாமணையான்''

— ஆழ்கடல் சென்று அலைகடலுடன் போராடும் மீனவர்களின் வாழ்க்கைப் படகுடன் விதி அலைகளும் மோதுவதுண்டு.

அது ஒரு சிறு கிராமம். சுமார் நூறு அல்லது நூற்றிருபத்தைந்து குடிசைகளும் சிறுவீடுகளுமாக உள்ள அக்கிராமத்தில் வாழ்வோரில் ஒரு சிலரைத் தவிர்த்து ஏனையோர் கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள்.

அன்றொரு நாள்...... காற்று சற்று மிதமாக வீசிக்கொண்டிருக்கிறது. கடலலைகள் கரையை நோக்கி வந்து வந்து முத்தமிடுகின்றன. மேற்குப்புற கடற்கரை ஓரமானதால் அக்காலைவேளையில் வெயிலின் கொடுமை அதிகரிக்கவில்லை. காலை நேரத்துக்கே உரிய கலகலப்பு. அதிகாலையில் மீன் பிடிக்கச் சென்றோர் ஒவ்வொருவராகக் கரையை நோக்கி திரும்பியவாறிருக்கின்றனர். அவர்களை எதிர்கொண்டழைக்கவும் அவர்கள் பிடித்து வரும் மீன்களை விற்பனைக்கு எடுத்துச்செல்வதற்காகவும் அவர்களது மனைவிமார் குழந்தைகள் ஆகியோரால் சலசலப்பு அடைகிறது. அவர்களோ தம் வயிற்றுப் பசியைப் போக்க ஆழ்கடலுக்குச் செல்கின்றனர். ஆனால் காகங்களும் நாய்களும் தம் வயிற்றுப் பசியைப் போக்க கடற்கரையை நாடி வருகின்றன. காகங்களின் கரைதலும், மனிதரின் சத்தங்களும் கடலலைகளின் ஓசையையும் மீறி ஒலிக்கின்றன. இடையிடையே காகங்களை நாய்களை விரட்ட ஹூய்! சோ! என்ற சப்தங்கள்.

தெப்பங்கள் வள்ளங்கள் ஆகியவற்றில் உள்ள வலைகளிலிருந்து ஆண்களும் பெண்களும் மீன்களை கழற்றி கூடைகளில் போட்டுக் கொண்டிருக்கின்றனர். இவற்றில் எல்லாம் ஈடுபடாமல் யோசப் கடற்கரையை அடுத்துள்ள தென்னை மரங்களின் நிழலில் அமர்ந்து பழைய வலைகளின் ஓட்டைகளைப் பின்னிக்கொண்டிருக்கிறார். அவரைப் பார்த்தால்,... அவரின் முகத்தில் அவருக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட போன்று மேடு பள்ளங்கள். அகன்ற தோள்களும், விரிந்த மார்பும், தண்டு வலித்து உரமேறிய கைகளும், உப்பு நீர் பட்டு உரமான உடம்பும், அவரின் அநுபவத்திற்கு சாட்சியமாகக் காட்சி அளிக்கின்றன. சற்று நேரத்துக்கொருமுறை தன் கவனத்தைத் திருப்பி கடலை நோக்கி கண்களைச் சுருக்கி கைகளை நெற்றிக்கு மேலே வைத்து பார்க்கின்றார். பின்னர் மீண்டும் தம் வேலையில் கவனத்தைச் செலுத்துகின்றார்.

ஆடி அசைந்து முன் தள்ளிய வயிற்றுடன் கடற்கரையை நோக்கி வரும் முதியவர் யோசப்பின் நெருங்கிய நண்பர். யோசப்பு! வருதிதம் எப்பிடி. இன்னம் வல பொத்தரு. என்று கேட்டு விட்டு யோசப்பின் அருகில் அமர்கின்றார். மீண்டும் அவரை நோக்கி பீட்டர் வந்தா கீரிமீனுக்கோ போன?

''இல்ல! அவன் கூட வலை கொண்டு போன'' என்று வலையிலிருந்து தன் கவனத்தைத் திருப்பாது பதில் தருகின்றார்.

''தான் கள்ளுக் குடிக்கப் போய்ட்டு வந்த! அவன் டேவிட்டிட்ட இண்டக்கி கள்ளு மெத்த நல்லம். நீ போப்போரு'' என்கிறார் அந்தோனி.

— யோசப் தன்னை மறந்து, தன் வயதை மறந்து, நீரில் பாய்ந்து தெப்பத்தின் கொம்பைப் பிடித்து இழுக்கிறார். ஓ! ......... யேசுவே!! என்ற கூக்குரல் அங்கு ஒலிக்கிறது. யோசப்! உனக்கும் இக்கதியா ?

இவன் கிறுக்கன் பீட்டரை இன்னம் காணம்...... மெத்த நேரமாப் போன யோசப் சற்றுக் கவலேயுடன்.

யோசப்பு! இண்டைக்கி அவன் மார்ட்டினுக்கு மெத்த கீரிமீன் பட்டிருச்சி கீரி மீன் நல்ல விலப்படும்.

அப்பொழுது அங்கு ஏதோ கலவரம் ஏற்பட்டது. போன்ற ஒரு பதட்டநிலே. ஆண்களினதும் பெண்களினதும் சப்தங்கள். அங்கிருந்த ஒருத்தி... ஓ! அன்ன பஸ் வார! சுருக்கா வாங்கோ. பல பெண்கள் தலேகளின் மேல் பெருங்கூடைகள் நிறைய மீன்களுடன் பாதையை நோக்கி ஓடுகின்றனர். கால் புதையும் மணலில் தலேமேல் பெருங்கூடைகளில் நிரம்பிய மீன்களோடு ஓட அவர்களால்தான் முடியும். இவ்வளவு பரபரப்பும் பதட்டமும் அங்கு வரும் பஸ்ஸில் மீன்களே ஏற்றிக் கொண்டு சுமார் நான்கு மைல் தூரத்தில் உள்ள சிறிய நகரின் சந்தைக்குக் கொண்டு போகத்தான். அந்த பஸ்ஸைத் தவற விட்டால் இனி ஒரு மணிக்குத்தான் அடுத்த பஸ். மீனேயும் விற்க முடியாது. முண்டியடித்தபடி கூடைகளே பஸ்ஸினுள் ஏற்றுகின்றார்கள். பஸ்ஸின் உள்ளே ஒவ்வொரு ஆசனத்திலும் இரண்டு ஆசனங்களின் நடுவிலுமாக கூடைகள்... சில ஆண்களும் பல பெண்களுமாக நின்றவாறு பிரயாணம் தொடங்குகின்றது, கண்டக்டர் கூடைகளுக்கும் பிரயாணிகளுக்கும் சிட்டுகள் வழங்குகின்றார்.

இவற்றையெல்லாம் கவனித்த யோசப் அந்தோனியை நோக்கி பஸ்ஸும் வந்த. மணி பத்து இருச்சும் போல இவனேக் காணம் என்று கூறிவிட்டு வலேகளே ஒரு பக்கமாக ஒதுக்கிவிட்டு எழும்புகின்றார். பின்னர் இருவரும் கடற்கரையை நோக்கிச் செல்கின்றனர். கடற்கரையில் புதிய மீன்களின் வாடை. அழுகிய மீன்களின் வாடை, இன்னும் பலவித வாடைகள். இவற்றையெல்லாம் பற்றி அவர்கள் சிரத்தை எடுக்கவில்லே. அவர்களுக்கோ பழகிப்போனவை. யோசப் வலேகலே மீண்டும் தெப்பத்தில் ஏற்றிக்கொண்டிருக்கும் தோமசை நோக்கி;...

அடே! நீ பீட்டரக் கண்டா? நாங் காணல்ல என்று தோமஸ் கூறியதும் அவனே அடுத்து நிற்கும் லாசரஸ் மாமோ நான் அஞ்சாம் பாவத்தடியில அவனேக் கண்ட. அவன் வலய ஒலுக்கிக் கொண்டிருந்த. மீனும் கொஞ்சம் பட்டிருந்த.

அப்ப அவன் ஏன் இன்னம் வராத என்றவாறு யோசப் வானத்தை நோக்குகின்றார். பின்னர் ''சூடக்கிப் போனு இம்பட்டு நேரம் தேவயில்ல. சுருக்கா வர இருந்த'' என்கிறார்.

இச்சமயத்தில் ஒரு பெண் குழந்தையொன்றை இடுப்பிலும் இன்னுமொன்றை கையில் பிடித்தவாறு யோசப்பை நோக்கி வருகின்றாள். அப்பெண்ணின் கையைப் பிடித்து வரும் குழந்தையின் கையில் போத்தலொன்று காணப்படுகிறது. கடல் சென்று திரும்பும் தன் தந்தைக்குத் தேநீர் எடுத்து வருகிறாள் சிறுமி.

யோசப் அப்பெண்ணே நோக்கி 'புள்ள ரீடா என்ன இன்னம் அவனக் காணம். அப்பெண் அவரின் மகன் பீட்டரின் மனேவி. அவளின் முகத்திலும் கவலேக் குறிகள். அவள் ''நேத்து ரா அவநுக்கு காச்சல். நான் தொழிலுக்கு போக வேணுமெண்டு சொன்ன'' கடற்கரையிலும் கூட்டம் சற்றுக் குறைகின்றது. ஆனுலும் கடற்கரையை விட்டு செல்லும் ஒவ்வொருவரும் யோசப்பிடம் பீட்டரைப் பற்றி வினவி விட்டுச் செல்கின்றனர். நேரமும் சிறிது சிறிதாகக் கரையத் தொடங்குகிறது.

ஆதவனும் நடுவானுக்கு வந்துவிட்டான். சுட்டெரிக்கும் வெயிலேயும் பொருட்படுத்தாது யோசப், அந்தோனி ரீடா குழந்தைகள் ஆகியோர் அங்குள்ள தெப்பங்களில் அமர்ந்தவாறு கடலே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். யோசப் தன்னே மறந்த நிலேயில் நெஞ்சில் சிலுவைக் குறியிடுகிறார். தன் மகனுக்கு ஏதும் நேரக்கூடாது என்று யேசுவை வேண்டுகின்றார். ரீடாவின் கண்கள் கலங்குகின்றன. கலங்கிய கண்களுடன் யோசப்பையும், அந்தோனியையும் மாறி மாறிப் பார்க்கின்றாள். அவள்

பார்வை ஏதாவது ஏற்பாடு செய்து அவரைத் தேடிப் பாருங்கள் என்று கூறுவது போலிருந்தது. ஆழ்கடல் சென்று, ஆபத்தை நாடிச்சென்று, தம் உயிரைப் பணயம் வைத்துச் சென்று மீன் பிடித்து வந்த அநுபவசாலிகளான யோசப், அந்தோனி ஆகியோரின் மனங்களும் சற்றுக் கலவரமடைகின்றன. இவற்றையெல்லாம் பற்றிக் கவலைப்படாது குழந்தைகள் மண்ணில் இறங்கி விளையாடத் தொடங்குகின்றன. ரீடாவும் அதனைச் சட்டை செய்யவில்லை.

ஒரு மணிக்கு வரும் பஸ்ஸூம் வந்து போய்விட்டது. ஆனால்...... பீட்டரைக் காணோம். மீண்டும் பலரும் கடற்கரையை நோக்கி வர ஆரம்பிக்கின்றனர். அனைவரும் யோசப் ஆகியோர் இருக்கும் இடம் நோக்கி வருகின்றனர். அனைவரின் கேள்வியும் பீட்டர் வர இல்ல எலா. ஏன் இம்பட்டு சுணக்கம் என்பதே. முடிவில் சிலர் தம் தெப்பங்களைக் கடலில் இறக்கி இயந்திரங்களைப் பூட்டி பீட்டரைத் தேடிச் செல்லப் புறப்படுகின்றனர். நான்கு தெப்பங்களில் எட்டுப்பேர் செல்கின்றனர். காற்றின் வேகமும் சற்று அதிகரிக்கின்றது. வழமையாக மாலை நேரங்களிலே காற்று சற்று வேகமாக வீசும். கடலலைகளும் அவர்களின் எண்ண அலைகளைப் போல் சற்று வேகமாகவே வந்து வந்து செல்கின்றன.

சென்ற நான்கு தெப்பங்களும் கண் பார்வையை விட்டும் மறைந்து விட்டன அனைவரும் ஆவலுடனும் கவலையுடனும் கடலை நோக்கிப் பார்த்தவாறு இருக்கின்றனர். எமது வாய்க்கு ருசியான மீன்களைக் கொண்டு வந்து தரும் அவர்களின் வாழ்க்கையில் தான் எத்தனை கசப்பு!... எத்தனை சிரமங்கள்!... என்னே கடவுளின் விந்தை!... அவர்களின் வாழ்க்கைதான் எவ்வளவு சோகமயமானது ஆபத்தானது.

நேரம் செல்லச் செல்ல அக்கிராமம் முழுவதுமே கடற்கரையில் திரண்டு விட்டது. ஒருவருக்கு ஆபத்தென்றால் அத்தனை பேரும் உதவ முன்வருகின்றனர். அவர்கள் ஒற்றுமைக்கே பெயர் பெற்றவர்கள் பிறர் துன்பத்தைத் தம் துன்பத்தைத் தம் துன்பமாக்க கருதி மற்றோருக்கு உதவுபவர்கள் தூரத்தே இரு தெப்பங்கள் தெரிகின்றன. கூட்டத்தில் சற்று சலசலப்பு. சற்று நேரத்தில் கரையை நெருங்கியதும் அவை பீட்டரைத் தேடிச் சென்ற தெப்பங்கள் என்று தெரிகின்றது சலசலப்பு தோன்றிய இடந்தெரியாமல் மறைந்து அமைதி ஏற்படுகின்றது. கடலலைகளின் ஓசையும் வேதங்களை ஓதும் பெண்களின் ஓசையும் சேர்ந்து ஒலிக்கின்றன.

நேரம் சுமார் நான்கு மணி... மூன்று தெப்பங்கள் தூரத்தே தென்படுகின்றன. அப்பொழுது அங்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவற்றினூடே அவர்கள் தமக்குதவிய யேசுவிற்கு நன்றி கூற மறக்காமல் நெஞ்சில் சிலுவைக் குறிகளை இட்டுக் கொள்கிறார்கள். தெப்பங்கள் கரையை நோக்கி நெருங்குகின்றன. கரையிலிருந்து சென்ற தெப்பங்களில் ஒன்று பீட்டரின் தெப்பத்தை கயிற்றால் பிணைந்து இழுத்து வருவது தெரிகின்றது யோசப்பின் மனது எல்லையில்லாப் பரவசமடைகின்றது. தன் ஒரே மகன், தன் பெயர் சொல்ல உள்ளவன் திரும்பியது அவரைப் பரவசமடைச் செய்கின்றது. அவர்களோடு சேர்ந்து கொண்டாற்போல் அலைகளும் ஆரவாரம் செய்கின்றன ஒன்றன்பின் ஒன்றாக வேகமாகக் கரையை நோக்கி வருகின்றன.

ஒவ்வொரு தெப்பமாகக் கரையை அடைகின்றது அவர்கள் அலைகளோடு சேர்ந்தாற்போல் தெப்பங்களைக் கரை சேர்ப்பதனைப் பார்க்கவே மிகவும் அலாதி கடைசியாக பீட்டரின் தெப்பம் வரும் அலையோடு சேர்ந்து வருகின்றது. மகிழ்ச்சி அதிகமாகியதால் யோசப் தன்னை மறந்து, தன் வயதை மறந்து நீரில் பாய்ந்து தெப்பத்தைக் கரைக்கு இழுக்கச் செல்கின்றார். அவர் தெப்பத்தின் ஒரு புறமாகச் சென்று தெப்பத்திலிருந்து குறித்து பின்னிருந்து தள்ளுகிறான். ஆனால் இடப்புறமாக வந்த அலையொன்று தெப்பத்தை யோசப்பின் பக்கம் தள்ள தெப்பத்தின் கொம்பு அவர் நெஞ்சைத் தாக்க ஓ!... யேசுவே என்ற கூக்குரலுடன் நிலை

தடுமாறி கீழே விழுந்துவிட்டார். விழுந்த அவர் அலையால் இழுத்துச் செல்லப்படாமல் பலரும் பாய்ந்து பிடிக்கின்றனர் அவர் சுய நினைவை இழந்து விட்டார். மகிழ்ச்சி தாண்டவமாடிய அங்கு இப்பொழுது அமைதியும் சோகமும் தலை தூக்கி நின்றன.

போக்குவரத்து வசதிகள் குறைந்த அக்கிராமத்திலிருந்து அவரை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல கார் ஒன்றைக் கூட்டி வர ஒருவன் நாலுமைல் தூரத்தில் உள்ள நகரத்திற்குச் சைக்களில் செல்கிறான் இன்னொருவன் கோயில் பாதிரியாரை அழைத்து வர ஓடுகின்றான் பீட்டரும் கதறி அழுதவண்ணம் நனைந்த உடம்போடு தந்தையை மடியில் கிடத்தி அவர் நெஞ்சைத் தடவி விடுகின்றான். பீட்டரின் மனைவி மறுபுறம் அமர்ந்து கண்ணீர் விட்டவாறு யோசப்பின் நெஞ்சைத் தடவுகிறாள் மற்றெல்லோரும் என்ன செய்வதென்று அறியாது கவலையுடனும் விசனத்துடனும் சூழ்ந்து நிற்கின்றனர்.

பாதிரியார் வந்து யோப்பின் நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு காதில் வேதம் ஓதுகின்றார். பின்னர் யோசப்பை அவர்களின் குடிசைக்குக் கொண்டு சென்று பாயில் கிடத்துகின்றார்கள். யோசப் கண்ணைத் திறந்து தன் மகனை ஒரு முறை அன்புடன் பார்த்ததும் அவர் கண்கள் கலங்குகின்றன கலங்கிய கண்களை மூடுகின்றார். மூடிய கண்கள் மீண்டும் திறக்கவேயில்லை அப்போ!..........
ஏண்ட அப்போ...... என்று பீட்டர் கதறி அழுகின்றான். அவர் உடம்பில் விழுந்து புரளுகிறான் அங்கிருந்து அனைவரின் கண்களையும் கண்ணீர்த்திரை மறைக்கின்றன.

கார் கொண்டு வரச் சென்றவன் காரோடு வருகின்றான் ஆனால் அவர் அக்காரில் செல்லவில்லை. அதேகாரில் அவனுன் சவ அடக்கத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கச் செல்கின்றனர்.


உங்கள் மோட்டார் பழுதாகிவிட்டதா ?
நம்பிக்கைக்குகந்த நல்லதொரு ஸ்தாபனம்
நாடுங்கள்
'வேல்முருகன் கரேஜ்'
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
Prop. M. P. Nathan

# ஈழமும் தமிழும்

ஈழநாடு முடியுடை வேந்தரின் ஆதிக்கத்திற்குட்பட்ட சேர, சோழ பாண்டிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையது அதன் பயனாகப் பல ஈழத்தோர் தென்னிந்தியாவிற் சென்று குடியேறினர் இத்தொடர்பு வாணிக முறையிலும், வாழ்க்கை முறையிலும் வழிபாட்டுமுறையிலும் தோற்றம் அளிப்பதோடமையாது, கலையறிவிலும் மொழியறிவிலும் காட்சி அளிக்கின்றது.

ஈழத்துப்பேனா நண்பர்கள் ஈழத்து ஒளிவிளக்குகள். அவர்கள் ஆக்கிய நூல்கள் சொல்லணியும் பொருளணியும் மிக்கனவாய் இருப்பதுடன் கருத்தாழமுமுடையவை, ஈழத்தில் முத்தமிழ் வளர்ச்சியின் வரலாறு கூறுகிறார் செல்வி யோகேஸ்வரி தர்மலிங்கம்

ஈழமும் தமிழ் மொழியைப் பேணிவளர்த்து வந்திருக்கின்றது ஈழநாட்டுப் பெரியோர் பலர் தென்னிந்தியத் தமிழர் பலருக்கு வழிகாட்டியிருந்தனரென்றால் அது மிகையாகாது அதுமட்டுமன்றித் தமிழ் வளர்ச்சிக்குத் தம்முயிரையும் தர அவர்கள் தயங்கியதில்லை. சங்ககாலத்திற்குப் பின் செந்தமிழ்ச் சங்கம் நிறுவியவரும், இறக்கும் நிலையிலும் ஏட்டுச் சுவடிக்கு உயிர்கொடுத்தவரும் ஈழநாட்டரசர்களேயாவார். தமிழ் மக்களின் பண்டை நாகரிகச் சிறப்பை முதன்முதல் பாரோர்க்குப் புலப்படுத்தித் தமிழின் பெருமையை எடுத்துரைத்து தமிழிலக்கிய ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் ஈழநாட்டவர் ஒருவரே ஈழத்துப் பேனா மன்னர்கள் ஈழத்து ஒளிவிளக்குகள் தமிழில் முதலில் வெளியிட்ட கலைக்களஞ்சியத்தின் ஆசிரியர் யாழோசையாலுயர்ந்த யாழ்ப்பாணத்தவரேயாவர். ஈழத்தவர் தமிழுக்கு இன்னும் பல தொண்டாற்றி உள்ளனர். மேனாட்டு முறையிற் தமிழகராதி வெளியிட்டவரும், இசைத்தமிழ் வரலாற்றைப் பாரோர்க்கு அளித்தவரும் ஈழத்தவர்களேயாவர் பேச்சுத் தமிழை எழுத்திற் பொறித்து உலகோர்க்களித்தவர் ஈழத்துப் பேராசிரியர் ஒருவரே. இவ்வாறான பல துறைகளிற் தமிழன்னைக்கு ஊன்றுகோல் கொடுத்து அவளைத் தாங்கி வந்திருக்கின்றது ஈழநாடு.

சங்ககாலத்தில் பாவன்மை சான்ற பாவலர் பலர், தமிழ்நாடு சென்று தாமியற்றிய கவிதைகளை அரங்கேற்றினர் என்பதையும் நாமறியலாம். இவ்வாறு தமிழ் நாட்டில் தம் தமிழ்ப்புலமையை வெளியிட்டவர்களுள் ஒருவர் ஈழத்துப் பூதந்தேவனார் ஆவார் காலத்திலும் அதனையடுத்த பல்லவர், சோழர் காலத்திலும் ஆக்கப்பட்ட நூல்கள் கிடைக்கப் பெறாவிட்டாலும் ஏனைய காலத்தில் ஈழத்தில் தமிழ் வளர்ந்ததை நாம் வேற்று நூல்களால் அறியலாம்.

பன்னிரண்டாம் நூற்றுண்டில் யாழ்ப்பாணத்தில் ''யாழ்ப்பாண அரசு'' நிறுவப்பட்டபின் பற்பல செந்தமிழ் நூல்கள் தோன்றின

மூவேந்தர் தமிழ்நாட்டில் தமிழை வளர்க்க உதவியது போல் ஈழ நன்னாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் ஆரிய வம்சத்தினர் நல்லூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வரும் காலத்திற் தமிழ் மொழி நன்கு தழைத்தோங்க இவர்கள் காலத்திற்றான் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் போன்ற வரலாற்று நூல்கள் தமிழில் எழுதப்பட்டன. இவ்வரச மரபிலே தோன்றிய பரராசசேகரன், செகராச சேகரன்என்போர் செந்தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவித் தமிழ்க்கல்வியை விருத்தி செய்தனர். இக்காலத்தில் ஈழத்திருநாடு செந்தமிழணங்கிற்குத்திருவரங்காயிற்று இவ்வரசர்கள் சங்கப் புலவர்களைக் கொண்டு சிறந்த பல தமிழ் நூல்கள் எழுதிய தோடமையாது தத்தம் பெயரைக் கொண்டும் ஒவ்வொரு நூல் வெளியிட்டனர் இவ்வாரியர் கால அரசரும் அமைச்சரும் தமிழ்ப்புலமை மிக்க சான்றோர் எனப் பெயர் பெற்றனர் ஈழத்தில் 'அரசகேசரி யார்' காலத்திற் பாடிய 'இரகுவம்சம்' என்னும் சிறப்புடை நூல் சொல்லணியும் பொருளணியும் மிக்கனவாய் இருப்பதுடன் அமையாது கருத்தாழமுமுடையது. இவர் அரச மாளிகைக்கருகே உள்ள செந்தாமரைக் குளத்துக்கண்மையில் இருந்து இந்நூலைப் பாடினார் என்று கூறுவர். இக்குளம் இன்னும் (நாயன்மார் கட்டில் காணப்படுகின்றது.

இலங்காபுரி என்னும் பெயர் பெற்ற ஈழத்தில் இலக்கண பெயர் இலக்கியங்களில் வல்லுனரான தஞ்சைமான் வட்டத்தில் வாழ்ந்த கூழங்கைத் தம்பிரான் வந்து வாழ்ந்த காலத்தில் அவரிடம் இலக்கணம், இலக்கியம் என்பன பயின்ற பல புலவர்கள் சிறந்த பல நூல்களை ஆக்கினர் இத்தகைய நூல்களுல் ஒன்றே "மருதப்பக் குறவஞ்சி" ஆகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் தமிழாரணங்கு வளர்ச்சி அடைந்துள்ளாள் என்பதற்குச் சான்றாக அக்காலத்தில் வாழ்ந்த வில்லவராய முதலியார், சின்னத்தம்பிப் புலவர் போன்றோரையும் அவர்கள் இயற்றிய நூல்களையும் கூறலாம். இக்காலத்திற் கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, பறாளைவிநாயகர் பள்ளு, நல்லைவெண்பா போன்ற நூல்கள் ஆக்கப்பட்டன. ஈழநாடு ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டதும் அதன் வடபாகமாகிய யாழ்ப்பாணத்தில் கிறீஸ்தவமதம் வேரூன்றத் தொடங்கியது. ஆங்கிலேயரின் விடாமுயற்சியின் காரணமாகத் தமிழர் பலர் மதம் மாறிக் கிறீஸ்தவராயினர். இதனைக் கண்ணுற்ற நாவலர் அவர்கள் கிறீஸ்தவ நூலான பைபிளின் தமிழ் மொழிபெயர்ப்பைத் திருத்தியமைத்தார். தமிழ்க் கல்வி நிலைகுலைந்து தள்ளாடுவதைக் கண்டு தமிழருக்கு அதன் மேன்மையையும் தொன்மையையும் விளக்கிக் காட்டி அவர்களைத் தட்டி எழுப்பினார். அதுமட்டுமன்றித் தமிழிலே மக்களின் மனங்கவரும் வண்ணம் விரிவுரையும் பிரசங்கமும் ஆற்றலாம் என்பதையும் தமிழ்நாட்டவருக்குத் தனது செயலிலே எடுத்துக் காட்டினார். கற்றோரும் கல்லாதோரும் எளிதில் விளங்கக்கூடிய முறையில் எளியநடையிற் தெளிவாகச் செந்தமிழ்ச் சொல்லமைந்த வசன நடையையும் தானியற்றிய நூல்களில் கையாண்டனர்.

அதுமட்டுமின்றி பொருட்டெளிவின் காரணமாக மேனுட்டார் வழங்கிவந்த குறியீடுகளையும் வசனங்களிற் கையாண்டு தமிழ்ப்புலவர்களின் வீடுகளில் பனையோலைச் சுவடிகளிற் சிறைப்பட்டிருந்த தமிழை அச்சூர்தியில் ஏற்றி நாடெங்கும் பரவச் செய்தார். 1858–ம் ஆண்டில் முதன் முதலாக நடத்தப்பட்ட கலைமானிப் பட்டத்தேர்விற்குத் தோற்றியவருள் முதன்முதலாகத் தேறியவர் ஈழத்தவரான நாவலரே எனக் கூறும்போது நாம் கழிபேருவகை அடைகின்றோம்.

தென்னிந்திய வரலாறு திராவிட நாகரிக வரலாறு ஆகியவற்றிற்கு அடிகோலி வழிகாட்டியவர் ஈழநாட்டுப் பெரியார் கனகசபைப் பிள்ளை அவர்கள் ஆவார். இவரது ஆராய்ச்சியின் பயனாக, ''ஆயிரத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர்'' என்னும் நூல் வெளியிடப்பட்டது. இவருக்குப் பின் புலோலியில் வாழ்ந்த நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமிழும் வடமொழியும் கற்றுப் புலமையுடன் விளங்கினர். இதனுல் சைவ சித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம் போன்ற பல நூல்களுடன் ஒரு அகராதியையும் எழுதி வெளியிட்டார்.

1830–இல் பருத்தித்துறையைச் சேர்ந்த சிசெம்புப் புலவர் அவர்கள் நல்லூர் சரவணமுத்துப் புலவர் முதலாய பல புலவர்களிடம் தமிழ்க் கல்வி பயின்று பல நூல்களை இயற்றிப் புலவர் பலர் கூடிய அவையில் அரங்கேற்றினர். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர் மீதும், தமிழ்நாட்டு சிறப்புடை ஆலயங்கள் மீதும் முறையே நான்மணிமாலை, பிரபந்தங்கள் முதலியன பாடினுர். இவர்களின் பின் ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட யாழ்ப்பாண அமெரிக்கன் மிசனுல் முதன் முதல் 'உதயதாரகை' என்னும் நூல் தமிழில் வெளியிடப்பட்டது. இவ்வாறு இச்சபையினரால் வேறு சில மாத வெளியீடுகள் வாரவெளியீடுகள், தினவெளியீடுகள், வெளியிடப்பட்டன.

கலைக்களஞ்சியத்தைத் தமிழில் முதன் முதல் வெளியிட உதவியவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள். இவர்களுடன் ''உலகம் தோன்றியபோது உண்டான மொழி தமிழ்மொழி'' என வாதாடிய சுவாமி ஞானப்பிரகாசரும், யாழ்நூல் ஆசிரியர் உயர் திரு. விபுலானந்த அடிகளாரும், செந்தமிழ்ச் செல்வியைப் பாடிய பாவேந்தன் நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர் வர்களும், ''தமிழே உலகத் தாய்மொழி'' எனப் பறையடித்தோதிய பன்மொழிப் பண்டிதர் சுத்தானந்தரும் தமிழன்னை தனிச்சிறப்புடன் மிளிர்வதற்குத் தம்மால் ஆன தொண்டுகள் பல புரிந்தனர். பேச்சு வழக்கில் வழங்கும் தமிழை எழுத்திற் பொறித்து முதன் முதல் நாடகநூலை இயற்றியவர் பருத்தித்துறையைச் சேர்ந்த பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆவார்.

இவ்வாறு தமிழ்மொழியின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியோர் பலர் தமிழ் நாட்டவர்க்கு வழி

காட்டினர். தமிழ்நாடு தமிழன் உயர்வினை மறந்த காலத்தில் அதனை நினைவூட்ட, தமிழ்மொழி மீண்டும் துளிர்விட்டுப் புத்தெழிலுடன் மிளிர ஈழநாட்டிலே பல அறிஞர்கள் தோன்றினர். இவ்வாறு பாவன்மை சான்ற பாவேந்தர் பலரும், நாவன்மை மிக்கோரும் தம்முடைய அரிய பெரிய தொண்டாற்றியுள்ளார்கள். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வளர்ச்சியடைந்துள்ள ஈழம் எதிர்காலத்தில் தமிழில் மேலும் வளர்ச்சியடைய ஈழத் தமிழர் முன்வரவேண்டும்.

**செல்வி யோகேஸ்வரி தர்மலிங்கம்**
சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்
பயிற்சிநெறி (ஆங்கிலம்)

*With the Best Compliments of*

**A WELL WISHER**

**IN THE**

**VALUATION PROFESSION**

# அன்புள்ள மகனுக்கு ஆசையில் ஓர் கடிதம்

உ
சிவமயம்

உடையார் வளவு
புன்னாலைக்கட்டுவன்
3-6-73

பட்சமுள்ள தம்பி தெய்வேந்திரத்திற்கு, அப்பா அம்மா தங்கச்சி அன்புடன் எழுதிக் கொள்வது யாதெனில்,

நல்லூர்க்கந்தனின் கருணையாலும், கோடிக்கரை சூலவைரவர் துணையாலும் நாங்கள் சுகமே உள்ளோம். அது போலஉன்னையும் கப்பியாவத்தைப் பிள்ளையார் காப்பாற்றுவாராக.

நிற்க, இத்துடன் அனுப்பும் இருநூறு ரூபாவுக்கான மணி ஓடரைப் பெற்றுக்கொள். சின்னச்சி வளவுப் பனை ஓலையும் மட்டையும் விற்ற காசுதான் உது மணிஓடரை மாற்றி, சின்னத்தம்பிச் சிறுப்பரிடம் கொடுத்து வைத்துத் தேவைக்கு வேண்டவும்.

மேலும் போனகிழமை கணபதிப்பிள்ளைச் சட்டம்பியார் கொழும்புக்கு வந்தவர். வெள்ளவத்தைக்கு வந்தபோது உன் னறைக்கும் வந்தவராம். நீ அங்கு இல்லையாம். 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணா' என்ற பாட்டுக் கச்சேரிக்குப் போய் விட்டாயாம். அப்படியான சமய விஷயங்களுக்குத் தவறாமற் போய்வா. முக்கியமான விடயம்: கால்பேஸ் கடற்கரையால் அவர் பஸ்ஸில் போகும்போது நீ சிலுப்பாக் கூந்தலும், ஒரு ஜாதி முழுப்பாவாடையும் உடுத்த ஒரு குமரியுடன் தோளில் கைபோட்டுக் கொண்டு நிற்பதாகத் தெரிந்ததாம். ஒரு வேளை கந்தையரின் பேரன் விஜயனாக இருக்கலாமென்று சந்தேகமாம். அது யாரென்று உடனடியாக எழுது. இதைக்கேட்டு உன் அம்மா இரண்டு நாட்களாகப் பட்டினி. நீயும் தலைமயிர் கூடுதலாக வளர்த்திருக்கிறாயாம். சோதனை கிட்டுவதால் கதிர்காமக்கந்தனுக்கு நேர்த்திக் கடன் என்று நினைக்கிறோம்.

சோதனையை முடித்துக் கொண்டு அம்மன் கோவில் தேருக்கு வந்துசேர். நீதான் சுவாமி தூக்கவேண்டுமென்று ஐயர் சொன்னார்.

அடுத்த கிழமை நாகலிங்கத்தான்ரை மச்சான் சுந்தரம் வரும்போது முட்டை மாவும், நல்லெண்ணையும் கொடுத்து விடுகின்றோம்.

வேறு புதினமில்லை

இப்படிக்கு
பட்சமுள்ள
*அப்பா, அம்மா, தங்கச்சி*

பி. கு: நீ படிக்கும் தொழில் நுட்பக் கல்லூரியில் பெண்களும் படிக்கினமாம். சுந்தரம் சொன்னான். கவனம். உனக்கு இப்ப ஏழரைச்சனி 'நீயும் உன் படிப்பும்' என்று இருந்துகொள்.

முத்து குணரத்தினம்
(விலைமதிப்பீட்டுத்துறை IV)

# நீ

கோ

அன்னை நீ,
ஆதரவு தந்தவள் நீ
இன்னல்தன்னைத் துடைத்தவள் நீ
ஈந்தபெரும் அன்பால் காத்தவள் நீ..............

'உண்மை பேசு ; நேர்மை சேரு ;
ஊக்கங்கொண்டு உள்ளத் துணிவாலேறு,
எங்குமின்பக் கருணை கூரு ;
ஏற்றங்காண் வாழ்வில்' என்றெல்லாம் சொன்னவள் நீ............

'ஐயம் வேண்டாம் ; அச்சமும் வேண்டாம் ;
ஒரு ஜெயம் உண்டு ; — கவலை வேண்டாம் ;
ஓருலம் — புத்துலகம் காண்பாய்' — என்றவள் நீ
ஔவையே ! அணங்கே !! ஆருயிரே !!! அம்மா !!!!

ஏன் இன்று இப்படி இல்லை நீ?,
ஏன் இன்னும் நல்தொழில் நுட்ப அருவியாயில்லை நீ?
ஏன் இன்னும் உயர் மருத்துவத்தில் வளரவில்லை நீ?
ஏன் இன்னும் சட்டத்தில் வளர்ச்சி காணவில்லை நீ?

ஏன் உனக்குள் ஆயிரம் சாதி மத பேதம்?
ஏன் உனக்குள் ஆயிரம் ஆதிப்பழி வேதம்?
ஏன் உனக்குள் ஆயிரம் சமூக பேதம்?
ஏன் உனக்குள் ஆயிரம் தகுதியீனக் கோசம்?

ஏன் உனக்கொரு கலைச்சங்கம் இல்லை?,
ஏன் உன் பிள்ளைகள் அதிலங்கத்துவம் இல்லை?
ஏன் உனக்கொரு விலைமதிப்பு இல்லை?
ஏன் உன் பிள்ளைகள் நிலை குலையாது இல்லை?

தமிழருவியே !

உன் ஜலத்திலே
ஆயகலைகள் அல்ல
அகிலத்தின் கலைகளெல்லாம்

சேரவேண்டும் — தரணியிலே — சுவை
ஓடவேண்டும் — கறைப்பானங்களை — அவை
உருட்டவேண்டும் — கரையிலே அவற்றை
ஒதுக்க வேண்டும் — ஒதிக்கி — நீ

தெளிந்த நீராய் ; — ஒருமை
ஒளிரும் ஜலமாய் ; — பொதுமை
மிளிரும் ஊற்றாய் ; — பெருமை
கனிந்த பானமாய் ஓடவேண்டும் —

நீ ஓடுகையிலே..................

எங்கள் தலைகள் தோய வேண்டும் !
எங்கள் நெஞ்சங்கள் ஒன்றாக வேண்டும் !!
எங்கள் பொதுவாழ்வு மலரவேண்டும் !!!
எங்கள் தாய் நீ — நீ ஆவாய்.


மலையகத்துப் பாட்டாளியின்

நிலையறிய வேண்டுமா ?

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் வார வெளியீடான

"காங்கிரஸ்"

இதழை வாசியுங்கள்

Ceylon Workers Congress,

72, Ananda Coomarasamy Mawatha,
Colombo — 7

உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள்
செலுத்தும் பரிபூரண அஞ்சலி

# ஏ.எப்.ரேமண்ட்ஸ்

ஈமக் கிரியை ஏற்பாடுகள்

புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.

147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.



ஏ எப் ரேமண்ட்ஸ்

0231


*With Compliments from*

# Emmanuel Muttukumaru & Co.

28, Queen Street,

COLOMBO 1.

## தமிழ் மன்ற விவாதக்குழு 1973—1974



இருப்பவர்கள் :

(இடமிருந்து வலம்) திரு. கந்தையா சிவசுப்பிரமணியம், திரு. க. கோபாலன் (விவாதக்குழுத் தலைவர்), திரு. ஜே. எம். டி. பெரேரா (அதிபர்), செல்வி. அ. மெல்றூஸ்.

நிற்பவர்கள் :

(இடமிருந்து வலம்) திரு. ஜி. எஸ். நிர்மலானந்தன். திரு. எ. இராஜநாயகம், திரு. மு. அ. ல. மு. சலீம்.

# ஐந்தாண்டுத்திட்டம்
# விவசாயப்பகுதிச் செயற்றிட்டம்

**பொ. சங்கரப்பிள்ளை**, B.A. (Lond.), B.Com. (Lond.). M.Sc Econ. (Lond ) A.M. Inst. I

விரிவுரையாளர்

''இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
மென்னு நல்லா ளகும்'' [நில
திருக்குறள்

''உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனே செய்வோம்''
—பாரதியார்

உணவு இல்லை, பஞ்சம் ஏற்படப் போகிறது என்ற அச்சத்தினுல் மக்கள் கலங்கும் இந்நாளிலே அவர்களுடைய கலக்கத்தைக் கண்டு நிலம் எனும் மாது சிரிக்கிருள் என வள்ளுவர் கூறுகின்ருர். உழவுக்கும் தொழிலுக்கும் நாம் வந்தனே செய்தால் - அதாவது உரிய மரியாதையையும், வருமானத்தையும் அளித்தால்— எந்நிலைமையையும் சமாளிக்கலாம் என பாரதியார் கூறுகிருர்.

மூன்று வருடங்களுக்கு முன்னரே திட்டமிடல் அமைச்சு ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்து அதில் விவசாயப் பகுதிச் செயற்றிட்டத்துக்கு முக்கிய இடம் அளித்துளது. எனினும் விவசாயத்திட்டம் போதிய அளவுக்கு விளம்பரப் படுத்தப் படவில்லை. அதிலுள்ள ஒவ்வொரு பிரிவையும், ஒவ்வொரு சொல்லையும், இந் நாட்டு மக்கள் திரும்பத் திரும்ப நினைவு கூர வேண்டும். வானெலியிலும் நாளிதழ்களிலும், சஞ்சிகைகளிலும், திட்டத்தின் விபரங்களே விளம்பரப்படுத்த வேண்டும், இத்திட்டத்தில் தனது பங்கென்ன, அதை நிறைவேற்றுவதற்குத் தான் என்ன செய்ய வேண்டும். என்பனவற்றை ஒவ்வொருவனும், ஒவ்வொரு அமைச்சும், ஒவ்வொரு அரசாங்க அலுவலகமும், உணரவேண்டும். தனது பங்கை நிறைவேற்ற அவை தாமதமின்றி விரைவில் முன்வர வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் போதியளவுக்குப் பேசிவிட்டோம்; எத்தனேயோ, எத்தனேயோ கருத்தரங்குகள் நடத்திவிட்டோம். நாம் பேச்சு வீரர் அல்லவா? ஆனுல் உள்ளபடியாகத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

(1) எமது நாட்டின் தற்போதய பிற நாட்டுச் செலாவணிப்பற்ருக்குறை

(2) உணவுப் பொருட்களுக்கு உலகத்திற் பஞ்சம்.

(3) உணவுப்பொருட்களின் பெரும்விலே யேற்றம்.

1976இல் அடைய எதிர்பார்த்த குறியிலக்குகளே 1974 இலேயே அடைய வேண்டும். அதாவது இரண்டு வருடங்கள் முன் கூட்டியே திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு செய்யும் போது பல நெடுந்தவணைச் சூழ்ச்சி முறைகளே மாற்றி உடனுக விளைவுகளே அளிக்குங் குறுந்தவணை சூழ்ச்சி முறைகளேக் கையாள வேண்டியிருக்கும். திட்டத்தை வகுத்தோர் தமது தொழிலே நன்ருகச் செய்திருக்கின்றனர். மூன்று வருடத்துக்கு முன்னரே தற்போதைய நெருக்கடியைத் தாமுந் தமது ஊகத்தினுல் கண்டனர். ஆனுல் இம்மூன்று வருட காலமும் எமது அமைச்சுக்களும், அலுவலகங்களும் வாளா விருந்தன. அசைஇயிருந்தன என வள்ளுவர் கூறுகிருர். இப்போதாவது கண்விழித்து ஐந்தாண்டு விவசாயச் செயற்றிட்டத்தை விரைவில் நிறைவேற்றுவாராக.

குறியிலக்குகள் பின்வருவன :

| பண்டம் | | 1970 | 1976 (இப்போது 1974) |
|---|---|---|---|
| நெல் | (மில்லியன் புசல்கள்) | 77.0 | 116 0 |
| சீனி | (தொன்) | 8,000 | 50,000 |
| மிளகாய் | (அந்தர்) | 125,000 | 600,000 |
| வெங்காயம் | (அந்தர்) | 716,000 | 2,400,000 |
| துவரை பயறு வகைகள் | (அந்தர்) | 50,700 | 265,000 |

| பண்டம் | | 1970 | 1976 (இப்போது 1974) |
|---|---|---|---|
| சோளம் | (அந்தர்) | 409,200 | 660,000 |
| கிழங்கு வகைகள் | (அந்தர்) | 7,102,389 | 11,000,000 |
| சோயா அவரை | (அந்தர்) | — | 63,000 |
| நிலக்கடலை | (அந்தர்) | 131,800 | 266,000 |
| அன்னுசி | (அந்தர்) | 68,750 | 155,300 |
| தோடை வகை | (மில்லியன் இரு) | 10 | 75 |
| கஜு | (அந்தர்) | 18,000 | 67,000 |
| கொக்கோ | (அந்தர்) | 50,700 | 59,500 |
| மலர்ச்செடி வளர்ப்பு | (மில்லியன் அலகுகள்) | 1.3 | 14.5 |
| பால் | (நாளுக்கு மில்லியன் பையின்ற்) | 0.850 | 1.4 |
| முட்டை | (மில்லியன் அலகுகள்) | 278.0 | 342 |
| இறைச்சி | (மில்லியன் இரு). | 93.0 | 119 |
| மீன் | (தொன்) | 115.000 | 175,600 |
| பருத்தி | (தொன்) | 380. | 18,000 |
| இயற்கைப்பட்டு | (இருத்தல்) | — | 557,000 |

**திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிருவாக ஒழுங்குகள் :**

அடுத்து வரும் இரண்டு வருடங்களிலும் அரசாங்கப்பொறி முழுவதையும் விவசாயத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்த வேண்டும். இதை எந்த தனிப்பட்ட அமைச்சோ, அலுவலகமோ வெற்றியுடன் செய்து முடிக்கலாமென நம்ப முடியாது. இப்பொறுப்பு பல அமைச்சுக்களிடையில் பங்கிடப்பட வேண்டும். பின்வருவன சிறந்த ஒழுங்காக இருக்கலாம்.

(1) விவசாய அமைச்சு :

நெல், மிளகாய், வெங்காயம், துவரை, பயறு வகைகள், சோளம், குரக்கன், மற்றைத் தானியங்கள், கிழங்குவகைகள், சோயா அவரை, நிலக்கடலை, பால்

(2) தோட்டப்பகுதி அமைச்சு :

அன்னுசி, தோடை, மாங்காய், ஏனைய பழங்கள், கஜு, பனை, கொக்கோ, மலர்ச்செடி வளர்ப்பு

(3) மீன்பிடி அமைச்சு :

மீன், இறைச்சி, முட்டை

(4) கைத்தொழில் அமைச்சு :

சீனி, பருத்தி, இயற்கைப்பட்டு

விவசாயத்தில் மிக்க அனுபவமுடைய அமைச்சர் நீர்ப்பாசன அமைச்சர் என்பதை அரசாங்கத்துக்கு நினைவுறுத்தவும் இச்சந்தர்ப்பத்தில் விரும்புகிறேன்.

நாடுமுழுவதிலும் மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்கனவே நிறுவியுள்ளோம். ஒவ்வொரு சபைக்கும் தனிப்பட்ட திட்டங்களும், குறியிலக்குகளும் விதிக்கப்பட வேண்டும். குறித்த குறியிலக்குகளை அடைவது சபையின் பொறுப்பாகும். இது வரையும் பேச்சளவில் காலம் கழித்த இச்சபைகள் இனிமேல் நிருவாக அமைப்புக்களாகத் தம்மை மாற்ற வேண்டும். அரசியல் காரணங்களுக்காக ஆட்களைக் கண்டபடியாக இச்சபைகளுக்கு நியமிக்காது அறிவும், ஆற்றலும், நிருவாக சக்தியும் உடையோரை — விசேடமாக இளைப்பாறிய அரசாங்க வர்த்தகப்பகுதி ஊழியர்களை — இச்சபைகளுக்கு நியமிக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு மாகாணத்திலும் திட்டம் நிறைவேற்றப்படுவதைக் கண்காணிக்க ஒரு அமைச்சரை நியமிக்க வேண்டும். அவ்வாறு செய்யின் எல்லா அமைச்சர்களுக்கும் விவசாயத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பங்குபற்ற வாய்ப்பு உண்டு.

இக்காலத்திலே தனியார்துறை முயற்சி குறைந்து விட்டது. பொது யாக்கங்களிலும் வேலைகள் மந்தமாகி விட்டன இத்தொழிற்றுறைகளிலுள்ள தொழிற்சங்கங்கள் விவசாயத்துறையில் ஈடுபட வேண்டும். விவசாயத்தில் முதலிடம் இவற்றுக்குப் போதிய பண வசதிகள் உண்டு. ஆட்பலமும் உண்டு. தொழிற் சங்கத் தலைவர்கள் பல திட்டங்களையும் உருவாக்கி அவற்றைத் திறனுக நடத்த வல்லவர். விவசாயத்தில் ஈடுபட்டால் தமது அங்கத்தவர்களில் வேலையில்லாமல் இருப்போருக்கு வேலை கொடுப்பது சுலபம்.

**அன்னிய செலாவணி உரிமை சான்றிதழ்களும் (F. E. E. Cs) சுங்க வரிகளும், ஏனைய வரிகளும் :**

கொழும்பில் வசிக்கும் நாம் விவசாயிகள் கப்பல் ஓடுகிறார்கள் என நினைக்கிறோம். உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து விட்டபடியால் விவசாயிகள் பெரும் பணம் உழைக்க வேண்டுமென அநுமானிக்கிறோம். இது உண்மையா? மறுதலையாக நாம் விவசாயிகளைக் கேட்டால் — விசேடமாக வறிய உழவர்களைக் கேட்டால் — அவர்கள் வேறொரு கதை சொல்லுகிறார்கள் விவசாய உற்பத்திச் செலவுகள் பன்மடங்கு அதிகரித்துவிட்டபடியினால், விவசாயம் செய்வதினால் போதிய பயன் இல்லை என்கிறார்கள். சில முதலாளி விவசாயிகள் விவசாயத்தில் பெரும் பணம் ஈட்டலாம். ஆயினும், உழவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய கஷ்டங்கள் நீங்கவில்லை. அவ்வாறாயின் நாம் நினைக்குமளவிற்கு விவசாய உற்பத்தி நூக்கிகள் பலமானவை அல்ல. விவசாயக் கருவிகள், உள்ளீடுகள் முதலிய யாவற்றிலும் அதாவது உழவுயந்திரம், அதன் உதிரிப்பாகங்கள், பம்புகள், உதிரிப்பாகங்கள், முட்கம்பிகள், தெளிவாளிகள், துடைப்பத்தூரிகைகள், மண்வெட்டிகள், உரங்கள், விவசாய இரசாயனப் பொருட்கள், கிருமிநாசினிகள் முதலிய யாவற்றிலும் — விதிக்கப்படும் பீக்கும் வரிகளும் யாவும் நீக்கப்பட வேண்டும். இப்பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டால், அவற்றிற்கு வேண்டிய மூலப்பொருட்களை, பீக்கும் வரிகளும் இல்லாது இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும். மேலும் விற்பனை வரிகள்தானும் இப்பொருட்களில் விதிக்கப் படாது. எமது திறைசேரி இதனால் அற்ப நட்டம் அடையலாம். ஆனால் விவசாயத் துறையில் ஏற்படும் நயம் திறைசேரி அற்ப நட்டத்தைப் பல்லாயிரம் மடங்கு ஈடு செய்யப் போதியதாக இருக்கும். எமது வரி விதிப்பு முறைக்கு அத்திவாரமான பொருளியலை நோக்கும்போது அது பொருளியலை அல்லது அவப்பொருளியலா என்ற ஐயம் தோன்றுகிறது.

**விவசாயக் கடன் :**

எப்பொழுதும் எக்காலத்திலும் எம் நாட்டு விவசாயிகள் கடன்பாரம் தாங்க முடியாது கஷ்டப்படுகின்றனர். விவசாயத்தில் முதலிடுதற்குப் போதிய கடன் கிடைப்பதில்லை. விவசாயிகளுக்குக் கடன் அளிப்பது எந்நாட்டிலும் மிகக் கடினமான பிரச்சினையாகும். அஃது எவ்வாறாயினும் ஐந்தாண்டு விவசாயத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய கடன் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

1972ம் ஆண்டில் கிராமவங்கிகள் விவசாய உற்பத்தி நோக்கங்களுக்குக் கொடுத்த கடன்கள் 1.25 மில்லியன் ரூபாய். இவை கொடுத்த மொத்தக் கடன்களில் 15.2% மட்டுமே. வீடுகள் அமைப்பதற்கு 31 8% உம் பழைய கடன்களைத் தீர்ப்பதற்கு 42.1% உம் கொடுக்கப்பட்டன.

கிராம வாசிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு பலவகைப்பட்ட நிறுவகங்களும் அமைப்பாண்மைகளும் உண்டு; கூட்டுறவுக் கிராம வங்கிகள், புதிய விவசாய ஈ கடன் திட்டம், குறித்த நோக்கங்களுக்குக் கடன் கொடுக்கும் அரசாங்கத் திணைக்களங்கள், வணிக வங்கிகள், விசேட ஈ கடன் நிறுவகங்கள்; எனினும் விவசாயத்துக்குக் கொடுக்கப்படுங் கடன்கள் போதியவையன்று என்பதையும், விவசாயத்தில் மேலும் முதலிட்டால் அதிக பயனடையலாமென்பதையும் மறுக்க முடியாது.

விவசாயிகள் வறிய மக்கள். அவர்களுடைய தொழில் நாட்டுக்குப் பெரும் நன்மையுடையது, அவர்களுக்குக் கொடுக்கும் கடன்களில் கடும் வட்டி விதித்தல் தகுமா? விவசாயக் கடன்களுக்கு வட்டி 4%இலும் குறைவாக இருக்க வேண்டும். புதுப்பணத்தை அடித்துத்தானும் இக்கடன்களைக் கொடுக்கலாம். அரசாங்கம் புதுப்பணத்தை அச்சடித்து மேற்கூறிய நிறுவகங்களிடம் ஒப்படைத்து கடன்களைக் கொடுக்கும் செலவுக்கு மேலதிகமாக வட்டி விதிக்கப்படாது எனக் கட்டளையிட வேண்டும். விவசாயிகள் நேர்மையாக நடந்தால் அறுவடைக்குப் பின்பு கடனைக் கட்டுவர். இஃது ஒரு சுழல் நிதியாகப் பயன்படும். விவசாயக் கடன்கள் கொடுப்பதற்கு பற்றாக்குறை நிதியியல் ஏற்கத்தக்க வழிமுறை என்பதைப் பல பொருளியலாளர் ஒப்புக்கொள்வர்.

**விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்தல் :**

அபிவிருத்தி அடையும் நாடுகளிலே விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் முறை திறனற்றது சிக்கனமானதன்று. வறிய விவசாயிகளைப் பணக்கார முதலாளி வியாபாரிகள் சுரண்டுகின்றனர். விவசாயப் பொருட்களின் உயர்ந்த விலைகளிலிருந்து போதிய நயத்தை விவசாயிகள் பெறுவதில்லை. தற்காலத்தில் விவசாயப் பொருட்களைக் கொள்வதற்குப் பலவகைப்பட்ட அரசாங்கக் காரகங்கள் உண்டு. ஆனால் துரதிட்டமாக இக்காரகங்களில் ஊழல்கள் பரவிவிட்டன. காரகப்பணியாளர் விவசாயிகளைச் சுரண்டுகின்றனர். அனுப்பும்

பொருட்களை, சாக்குப்போக்குச் சொல்லி ஒப்புக்கொள்ளாது திருப்பியனுப்புகின்றனர். சில வேளைகளில் காசில்லை என்கின்றனர். சிலவேளைகளில் அரசாங்கப் பண்டகங்களில் இடமில்லை என்கின்றனர். சில வேளைகளில் பொருட்கள் தரத்திற் குறைந்தவை என்கின்றனர். ஆனால் காசு கையில் வந்தவுடன் எல்லாம் சரி வரும். எல்லா விவசாயப் பொருட்களையும் வாங்குவதற்கு அரசாங்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதிய பணம் கொடுக்க வேண்டும். இப்பொருட்களை வைப்பில் வைத்திருப்பதற்குப் போதிய பண்டகங்கள் கட்ட வேண்டும். மேலும் கொள்வனவுக் காரகங்களிலுள்ள நேர்மையற்ற பணியாளர்களை நீக்கி அவற்றுக்கு நேர்மையும் திறனுமுடைய பணியாளர்களை நியமிக்கவேண்டும்.

நீர்ப்பாசனமும் கிணறுகளும் :

நீர்ப்பாசனமே விவசாயிகளின் மிகவும் சங்கடமான பிரச்சினையாகும். ஐந்தாண்டுத்திட்டத்தில் இரண்டு மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உண்டு ஆனால் பெரும் திட்டங்கள் மிகச் செலவானவை. அவற்றைக் கட்டி முடிக்க பல வருடங்கள் செல்லும். அடுத்த ஆண்டிலேயே நாம் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால், புதிய கிணறுகள் தோண்ட வேண்டும். பழைய கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும். ஆனால் பற்பல அற்ப சங்கடங்களினால் கிணறுகள் தோண்டுவது இப்போது இயலாதாகிவிட்டது. சென்ற மூன்று வருடங்களில் எத்தனை புதிய கிணறுகள் தோண்டப்பட்டன என்பதைக் கணக்கிட்டால் இது புலனாகும். புதிய கிணறுகளை வெட்டிக் கட்டுவதற்கு வெடிப்பொருட்கள், சீமெந்து, நல்ல மண்வெட்டிகள் முதலியன வேண்டும். அவசர காலச்சட்டத்தினால் வெடிப்பொருட்களைப் பெறுவது கஷ்டம். சீமெந்தின் விலை என்ன? இவ்விலையிலும் அதைப் பெற முடியாது. எம்நாட்டில் உற்பத்தி செய்த மண்வெட்டிகள் வெட்டுவதில்லை. அவற்றைக்கொண்டு கிணற்றை எவ்வாறு வெட்டலாம்? இப்பொருட்களை விவசாயிகளுக்கு நீதியான விலைகளில் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் அரசாங்கம் அளிக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஒழுங்குகளை உடனே செய்ய வேண்டும்.

விவசாயம், விவசாயம் என்பதே எமது வானொலியில் பேச்சு. சில விவசாயிகளை அழைத்து வானொலியில் பேட்டி காண்கிறார்கள். ஏதோ பொழுதுபோக்காக நாமும் கேட்கிறோம். அதுவும் விவசாயம் தெரியாத கொழும்பில் வசிக்கும் நாம் எனக. இப்படிப்பட்ட பிரசாரத்தினால் நாம் மன ஆறுதல் அடையலாம். ஆனால் பயன் என்ன? தற்போது நீர்ப்பம்பின் விலை என்ன? உதிரிப்பாகங்களின் விலை என்ன? இந்தியாவில் இவற்றின் விலை என்ன? இவற்றை எமது விவசாய அமைச்சில் உள்ள யாராவது சிந்தித்ததுண்டா? விவசாயிகளுக்குப் போதிய பம்புகள் மலிந்த விலைகளில் அளிக்கப்பட வேண்டும்.

விவசாயிகள் புதிய கிணறுகள் வெட்டுவதற்கும் பழைய கிணறுகள் ஆழமாக்குவதற்கும் விவசாயிகளுக்குப் போதிய ஊக்கம் அளிக்க வேண்டும். வருமான வரி கொடுப்போர் இச்செலவுகள் முழுவதையும் தமது வருமானத்திலிருந்து கழிக்க அனுமதிக்கப்பட வேண்டும். மற்றவர்களுக்குக் குறைந்த வட்டியில் நெடுந்தவணைக் கடன் கொடுக்க வேண்டும். மிக வறிய விவசாயிகளுக்குச் செலவில் ஒரு பகுதியை அரசாங்கம் உதவிப்பணமாகக் கொடுக்க வேண்டும். கிணற்று நீரை பயன்படுத்தும் வழிவகைகளைக் காண்பதற்குத் தனிப்பட்ட அதிகாரம் ஒன்றை நீர்ப்பாசன அமைச்சு நிறுவப் போவதாக அறிகிறோம். அவ்வாறு செய்வதனால் நாடு நன்மை அடையும் என்பதில் ஐயமில்லை.

மண்வெட்டிகள் :

இந்த அற்ப விடயத்தில் எமது அரசாங்கம் பண்ணும் கேலியைப் பாருங்கள். எமது வென்கலயாக்கம் உற்பத்தி செய்யும் மண்வெட்டிகள் விவசாயச் செய்முறைகளுக்கு உகந்தவையன்று என விவசாயிகள் எங்கணும் முறையிடுகின்றனர். வானொலிக்குச் சென்று எமது யாக்கம் உற்பத்தி செய்யும் மண்வெட்டிகள் உலகிலே மிகச் சிறந்தவை எனக் கூறுவதினால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இந்த மண்வெட்டிகள் உகந்தவை அல்லயாயின், நல்ல மண்வெட்டிகளை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். விவசாயத்துறை உற்பத்திப் பெருக்கம் முக்கியமானதன்றி இந்த அற்ப யாக்கத்தின் இலாபம் முக்கியமானதன்று. மேலும், எமது யாக்கத்தினால் ஏன் நல்ல மண்வெட்டிகளை உற்பத்தி செய்ய முடியாது என்பதையும் விசாரணை செய்யவேண்டும்.

விவசாயப் பூட்கை. (Policy)

ஐந்தாண்டுத் திட்டத்தின்படி உழவர் பயிர்ச் செய்கையும், சிறுநில உடைமையும், அரசாங்கப் பூட்கைகளாக வலியுறுத்தப்படுகின்றன. நெடுந்தவணையில் இப்பூட்கைகளே சிறந்தவை என்பதில் ஐயமில்லை. விவசாயத்தில் தனியார் முதலாளித்துவம் வேண்டாம். அரசாங்க முதலாளித்துவமும் வேண்டாம். ஆனால், தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைச்

சமாளிப்பதற்கும் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும் எல்லாத் துறைகளின தும் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. அதாவது பின்வரும் துறைகள் யாவும் விவசாய உற்பத்தியில் உடனடியாக ஈடு படவேண்டும்.

(அ) வழக்கமான உழவர் துறை.

(ஆ) தோட்டத் துறை.

(இ) அரசாங்க அலுவலகங்களும், பொது யாக்கங்களும்.

(ஈ) கூட்டுறவுத் துறை.

(உ) தொழிற் சங்கங்கள்.

(ஊ) தனியார் வணிகத்துறை.

(எ) தனியார் கைத்தொழிற்றுறை.

தனியார் கைத்தெழிற்றுறை - தற்கா லத் துறைகளில் ஒன்ருகும். மிகத்திறனு டையது. போதிய பணமும் நிருவாக முகாமை ஆற்றலும், அனுபவமும் இத் துறைக்கு உண்டு. பல காரணங்கள் பற்றி இத்துறை தற்போது தீவிரமாகச் செயற் படாது கிடக்கிறது. இத்துறையிலுள்ள சக்திகளெல்லாவற்றையும் தற்போதைக்கு விவசாய உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தகுந்த திட்டத்தை அரசாங்கம் வகுக்க வேண்டும்.

நெருக்கடிகளும், சங்கடங்களுமே முன் னேற்றத்துக்குக்கால். தமது ஆற்றலின லும் முயற்சியினலும் மக்கள் சங்கடங்களை வென்று முன்னேறுகின்றனர் ஆதலால் இச்சந்தர்ப்பத்தில் நாம் கலக்கமடையப் படாது. அச்சமில்லை, அச்சமில்லை. ஏனென்ருல் இச்சங்கடத்தை வெல்ல எமக் குப் போதிய ஆற்றலுண்டு. நாடு தழைக்க நாம் வாழ்க, நாம் யாவரும் விவசாயத் தில் ஊக்கத்துடன் ஈடுபடுவோமாக.



# தலைப்பிரசவம்

"லோகா"

**தலைப் பிரசவம் நெருங்குகிறது கையில் காசில்லை.
என்ன செய்ய முடியும் தலைமை வாத்தியாருக்கு?
தோட்டத்துப் பிள்ளைகளைச் சுரண்டுவதுதான் வழக்கமாயிற்றே!**

பொழுது புலரும்வேளை. பல்வேறு பறவை ஒலிகள் நாதம் புரிகின்றன. காலைக்கதிரவன் வந்து விட்டான். ஆனால் அவன் வரவைத் தடை செய்து முகில் கூட்டம் பூமியில் நடக்கும் கொடுமைகளைப் பார்க்க வேண்டாம் என்றுதானே தெரியவில்லை. மங்கிய ஒளி. கார்த்திகை மாதம். கடும்குளிர். மலைச்சாரல் எல்லாம் மூடுபனி. புலத்கோபிட்டிய தேயிலைத் தோட்டம் இன்னும் தெரியவில்லை. நேரம் ஓடுகிறது. தேயிலைத்துளிரில் பனித்துளிகள் சூரிய ஒளிபட்டு முத்துகளாகப் பிரகாசித்து மறைகின்றன. மூடுபனி விலகுகிறது. பச்சைப்பசேலென கம்பளம் போர்த்தது போன்ற மலைச்சாரல். அதனிடையே நெழிந்து வளைந்து கலகலவென ஓடும் சிற்றருவி. அதில் காலைக்கடன் கழிக்கும் மக்கள். வளைந்துவளைந்து செல்லும் தெருவீதிகள். தோட்டத்தில் செங்கோடுகளாக தெரியும் ஒற்றையடிப் பாதைகள். பார்ப்போர் மனத்தைப் பறித்துவிடும். இயற்கை எழில் கொஞ்சும் அங்கேதான் எத்தனை சோகவரலாறுகள். வாழ்க்கைப் போராட்டங்கள்.

அந்த மலையுச்சியில் தெரிகிறதே ஒரு கட்டிடம். அதுதான் அந்தத் தோட்டத்திற்கு சொந்தமான பள்ளிக்கூடம். தோட்டத்துப்பிள்ளைகளுக்கு அறிவூட்டும் அகம். அதனருகில் தெரிகிறது அதுதான் பள்ளிக்கூடவாத்திமாரின் ''குவட்டர்ஸ்'' அது தோட்டத்திற்கு சொந்தமானது. அங்கேதான் தலைமைவாத்தி பொன்னையா குடும்ப சகிதமாக வாழ்கிறார். யாழ் நகரிலிருந்து தோட்டத்துப் பிள்ளைகளுக்கு அறிவு புகட்ட வந்திருக்கும் அறிவுச்செம்மல்கள். தோட்டத்தைச்சேர்ந்த பல படித்த இளைய தலைமுறை இருப்பர். அவர்களுக்கு இப்பதவிகள் கிடைக்கா. தமது செல்வாக்கால் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தவர் படிப்பிக்க வழி செய்து கொண்டிருக்கும் படித்த மேதாவிகள். தோட்டத்துப்பிள்ளைக்கு ஏன் படிப்பு நாலு எழுத்துப்படித்தால் தங்களை மதிக்கமாட்டான். கையெழுத்துப்போடத் தெரிந்தால் போதும் என்று நினைப்பவர். நாலு எழுத்து படித்து முன்னேற விரும்பாத கும்பல். இவர்கள் தான் இளம் தலைமுறையினரை வழி நடத்துபவர்கள்.

தலைமை வாத்தியார் வீட்டில் சிறிது ஆரவாரம். பொன்னையா கதவைத் திறந்து வெளியே வருகிறார். குளிர் தாங்க முடியவில்லை. போட்டிருந்த பனியனுக்கு ஊடாக சுளிரென குளிர் குத்துகிறது. மேலே வானத்தை நோக்கினார். பலத்த யோசனையில் ஆழ்ந்துவிட்டார்.

"தலை பிரசவம் நெருங்குகிறது. கையிலே காசில்லை. என்ன செய்ய முடியும்." அவருக்கோ ஒன்றும் புரியவில்லை. ''ஆளுதவிக்கு தோட்டத்தில் ஒருத்தியை பிடிக்கலாம். பணத்திற்கு என்ன செய்வது'' நேரம் போவது தெரியாமல் நின்று விட்டார்.

கண்மணி அதுதான் தலைமை வாத்தியாயர் மனைவி. கணவனின் அருகில் சிரமப்பட்டு வருகிறாள். அவள் வந்ததைக்கூடக் கவனிக்கவில்லை. ஆழ்ந்த யோசனை.

''என்ன பலத்த யோசனை. இன்றைக்கு பள்ளிக்கு போகவில்லையா" என்றாள். தலைமைவாத்தி இந்த உலகிற்கு மீண்டார். ஒரு புன் சிரிப்பைத் தவழவிட்டார்.

''பள்ளிக்கூடம் போனால் என்ன வீட்டில் இருந்தால் என்ன இரண்டும் ஒன்றுதான் இங்கு என்ன சுப்பிரிண்டன் வந்தா பார்க்கப் போகிறார்" என்றார். தலைமை வாத்தியாருக்கு மேல் யார் அங்கு அதிகாரம் செலுத்த முடியும்.

''அது சரி நீ இப்படிக் குளிரில் வராதே. உடம்புக்கு ஏதாவது வந்தால் கஷ்டம். உடம்பைக் கவனமாகப் பார். இன்றைக்கு சமயலுக்கு பெட்டையனை அனுப்புறன். நீ சும்மா இருந்து பார்த்துக்கொள்" என்றார் இருவரும் வீட்டினுள் சென்றனர்.

தோட்டத்துப்பிள்ளைகள் தான் என்ன செய்வார்கள். படிக்கவேண்டுமானால் வீட்டு வேலையும் செய்ய வேண்டும். முடியாவிட்டால் தலைமை வாத்தி தோலை உரித்துப்போடும். சம்பளமற்ற வீட்டுவேலைகள். அது அவர்கள் தலைவிதி என்றால் நம்ப வேண்டுமா.

வறுமையின் கொடுமையில் சிக்கித் தவிக்கும் பெற்றார். புத்தகம் வாங்க வழி ஏது. நேரத்திற்கு உணவு ஏது. நல்ல உடுப்பிற்கே பஞ்சம் இந்த ஏழ்மை நிலையில் எப்படிப் படிக்க முடியும். ஏழ்மையிலும் செம்மை காண முடியவில்லை வாத்திமாருக்கு இது பற்றி என்ன தெரியும். அவர்களுக்கு சம்பளம் வேண்டும். பேருக்கு படிப்பு. இதுதான் வழமை.

அன்று வழமைபோல் பாடசாலை தொடங்கியது. நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள். எல்லாமாக மூன்று ஆசிரியர்கள். அதில் ஒருவர் பெண். தலைமை வாத்தி இன்னும் வரவில்லை. வகுப்புக்கள் தொடங்கின. பாடம் தொடங்கவில்லை.

அங்கு படிப்பித்த உதவியாசிரியர்கள் மணமாகாதவர்கள். அவர்களிடையே ஒரு உறவு இருந்தது. அதைக் காதல் எனும் புனிதமான வார்த்தைக்குள் அடக்கி விடுவர். புத்தகத்தை வாசிக்கச் சொல்வார்கள். தாங்கள் புதியபாடம் படித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் இந்த உலகில் இருப்பார்களா என்பது சந்தேகம். எதில் தொடங்கி எங்கு முடியுமெனத் தெரியாது. பாவம் பிஞ்சுள்ளங்கள் என்ன செய்யும்.

பொன்னையா வாத்தி வந்தார் பத்து மணிக்கு. பள்ளிக்கூடம் களை கட்டிவிட்டது. பாடங்கள் தொடங்கின. தலைமைவாத்தி பெரிதும் யோசனையில் காணப்பட்டார். பாடத்திற்குச் செல்லவில்லை.

சேற்றில் செந்தாமரை மலர்வதும் சிற்பி வயிற்றில் முத்தும் பிறக்கின்றன. ஏழைவர்க்கத்தில் திறமைசாலிகளும் இருக்கிறார்கள். அந்த மாணவன் ஒரு திறமைசாலி. அவனுக்கு வாத்தியாருடைய போக்கு பிடிக்கவில்லை. வாய்விட்டு சகமாணவனுக்கு சொல்லிவிட்டான். ''இவர்கள் படிப்பிக்க வரவில்லை'' என்றுதான்.

வாத்திமாருக்குப் பந்தம் பிடிக்கும் மாணவரும் இருப்பார்கள். எந்த இடத்திலும் காட்டிக் கொடுக்கும் இனம் இருக்கத்தானே செய்யும். அந்தச் செய்தி தலைமை வாத்திக்கு எட்டியது.

அந்த மாணவன் தலைமை வாத்தியாரால் அழைக்கப்பட்டான். பிரம்பு அவன் முதுகில் தாளம் போட்டது. நோ தாழாமல் ஓலமிட்டான். அவன் குரலுக்கு செவி சாய்க்க யார் அங்கே. தலைமைவாத்தி கையோய அவனும் விடுதலையானான். உடம்பிலே வரிகள். வீட்டுப்பிரச்சினை. அப்பாவி மாணவனுக்கு தண்டனை. பாடசாலையே நிசப்தமாகியது.

விசும்பி விசும்பி அழுதான். அழுகை ஓய்ந்தது. கண்ணீர் வற்றியது. விக்கல் ஓயவில்லை. ஏழையழுத கண்ணீர்

கூரிய வாள் என்பார். ஆனால் ஆயிரமாயிரம் ஏழைகள் அழுகின்றனரே.

இச்சம்பவம் நடந்தபின் தலைமை அமைதியடைந்தார். அவருக்கு சிந்தனை வலுத்தது. தன் பிரச்சினைக்கு வழிகாண வழியும் கிடைத்தது. கார்த்திகை மாதம். சரஸ்வதி பூசை வரும் மாதம். அப்போதுதான் ஞாபகம் வந்தது.

பாடசாலை யாவும் சரஸ்வதி பூசை கொண்டாடுமே. தோட்டப்பள்ளி அதற்கு விதிவிலக்கல்லவே. சரஸ்வதி பூசைக்கு பணம் தேவை. பணத்திற்கு வழி பள்ளிப்பிள்ளைகள். தலைமை வாத்தியார் எல்லோரையும் ஒருங்கு கூடும்படி கட்டளையிட்டார். பொன்னையா ''சரஸ்வதி பூசை வருகிறது. எல்லாம் இம்முறை சிறப்பாகக் கொண்டாட வேண்டும்'' ஆகவே ஆளுக்கு ஐந்து ரூபா கொண்டு வர வேண்டும்'' என்று அறிவித்தார்.

தலைவாத்தியின் மூளையே மூளை. ஒரு வீட்டில் நான்கு ஐந்து பேரும் படிக்கலாம். அவர்கள் எல்லோரும் காசு தரமாட்டார்கள். ஆகவே குடும்பத்திற்கு ஒருதராகப் பார்த்தாலும் இருநூறு ரூபாக்குமேல் தேறவேண்டும் என்று கணக்குப் பார்த்துத்தான் அறிவித்திருந்தார்.

பள்ளிப்பிள்ளைகளுக்கு கொண்டாட்டம். பெற்றாருக்குத் திண்டாட்டம். காசு கொண்டு வராமல் பள்ளிக்கூடம் வர முடியாது. அன்று விழுந்த அடியே அவர்களுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியது.

மாதத்தில் கிடைக்கும் சொற்ப கூலியில் குடும்பம் நடத்த முடியாமல் தவிக்கும் ஏழைத்தொழிலாளிகள் என்ன செய்வார்கள். பெற்றாரின் வேதனை பிள்ளைகளுக்கு என்ன தெரியும். அவர்களுக்கு வேண்டியது பணம். அழுது குளறியோ வேண்டடம்.

பெற்றார் வந்து தலைமை வாத்தியை கேட்க நேரமேது. கேட்க வந்தால் ஒருநாள் கூலி வெட்டு. கேட்டும் கொடுக்கவே வேண்டும். பிள்ளைகளின் தொந்தரவு பொறுக்காமல் கொடுத்தார்கள். சும்மா கொடுப்பார்களா. வாத்தியாருக்கு வயிறு எரிய நல்ல வசை பாடிக் கொடுத்து விட்டார்.

வயிறு எரியக் கொடுத்து விட்ட காசெல்லாம் தலைமை வாத்தியின் கையில் சேர்ந்தது. கணக்கிட்டுப் பார்த்தார் இருநூற்று ஐம்பதுக்கு மேல் தேறியது. அவர் மனம் கணக்குப் போட்டது. ஒரு எழுபது ரூபா போதும் பூசைக்கு. மீதி தன் சொந்தச் செலவிற்குப் போதும்.

சரஸ்வதி பூசை வந்தது. பாடசாலை அலங்கரிக்கப்பட்டது. பூசைக்குரிய பொருள்கள் யாவும் இடம் பெற்றன. அவல் கடலை பயறு பிள்ளைகள் வாய் ஊறச் செய்தது. அன்றைக்கு வயிறு நிறையச் சாப்பிடப் பிள்ளைகள் காத்திருந்தார்.

தலைமை வாத்திதான் பூசாரி. வெற்றுடம்புடன் விபூதிப்பூச்சும் முழுப்பக்தனைக் காணப்பட்டார். தேவார திருவாசகம் பாடி பூசை இனிது நடைபெற்றது. பூசை முடிந்தது. தலைமைவாத்தி மனைவியும் வந்திருந்தார்.

தலைமைவாத்தி நல்லவற்றை எல்லாம் எடுத்தார். தோட்டத்துரை சுப்பிரீண்டனுக்கு பெரிய தாம்பாளத்தில் அவற்றைக் கொடுத்து விட்டார், தனக்கும் உதவி வாத் மாருக்கும் எடுத்து வைத்தார்.

எஞ்சியவை அங்கு நின்ற பிள்ளைகளுக்கு போதுமோ என்பது சந்தேகம். நைந்துபோன வாழைப்பழம் இருந்தது. இதைப் பெறவே அவர்கள் கண்களிலி நந்த ஆவல். தலைமை வாத்தி வரிசையாக வரும்படி கட்டளையிட்டார்.

தம் பங்கைப் பெற சட்டையை மடித்து நீட்டினர். என்ன பரிதாபம். அவர்கள் எதிர்பார்த்தளவு கிடைக்க

வில்லை. ஏதோ கிடைத்தது. அவர்கள் கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைந்து வாழப் பழகிவிட்டார்கள். பூசை முடிந்து வீடு நோக்கி எல்லோரும் விரைந்தனர்.

தலைமை வாத்தியும் மனைவியும் திரும்பினர். அவர் மனைவியைப் பார்த்து புன்முறுவல் பூத்தார். ''உன் வயிற்றிலிருக்கும் குழந்தை மிகவும் யோகக்காரன். தலைப்பிரசவத்திற்கு என்ன செய்வதென்று யோசித்தேன இவ்வளவு சீக்கிரம் பணம் கிடைக்கும் என்று நினைக்கவில்லை'' என்ருர்.

மனைவி முகத்தில் மந்தகாசம். அதில் தன்னை மறந்து அணைத்துக் கொண்டார். கொண்டு வந்த அவலில் கொஞ்சத்தை கண்மணிவாயில் ஊட்டிவிட்டார், அவர்கள் வாழக் கற்றுக்கொண்டு விட்டார்கள்.




# கருத்தோட்டத்தில் கவிதை

**இர. சிவலிங்கம்,** M. A., Dip-in-Edu.
கல்வி அதிகாரி, கல்வி அமைச்சு.

**பண்டைய நூல்கள் கவிதை நடையிலேயே அமைந்திருந்தன என்பதையும் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களையும் விளக்குகிறார் கட்டுரை ஆசிரியர் இர. சிவலிங்கம் அவர்கள்.**

ஒரு மொழியின் மழலைதான் கவிதை என்பது ஆய்ந்தோர் கூற்று. உலக இலக்கியங்கள் அனைத்தினதும் முதற்தோற்றம் கவிதையாகவே இருந்தது. பூர்விக மனிதர்களின் உணர்வுகள் எல்லாம் இசையிலும், நாட்டியத்திலுமே கூறப்பட்டன. இயற்கை ஒலிகளான நீரோட்டம், காற்றசைவு ஆகியவற்றில்கூட ஒரு இசைத்தன்மை காணலாம். பழங்கால மனிதர்களின் பேச்சுக்கூட கவிதைப் பாங்கிலே அமைந்திருந்தது குறவர் பாடல், வேட்டுவர் குரவை, நாடோடிப் பாடல்கள், தாலாட்டு, ஒப்பாரி ஆகியவை இசையோடமைந்து கவிதை அமைப்பாகவே இருக்கின்றன. சின்னஞ்சிறு குழந்தைகளைப்போல பண்டைய மனிதர்களும், ஆடியும் பாடியும்தான் தமது உணர்ச்சிகளை வெளியிட்டார்கள். இன்றுகூட நமது மகிழ்ச்சியையும் துக்கத்தையும் தெரிவிப்பதற்கு பறை முழக்குதல், நாதஸ்வரம் முழங்குதல் போன்ற இசை ஒலிமுறையைப் பின்பற்றிவருகிறோம்.

அதேபோன்று பண்டைய உலகில் எல்லாவகையான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் கவிதை நடையையே நாடியுள்ளார்கள். கவிதை நடை மொழியின் இயற்கை நடையாகவும் கருதப்பட்டு வந்துள்ளது. பண்டைய சமய நூல்கள் கவிதை நடையிலேயே பெரும்பாலும் அமைந்துள்ளன. மிகப் பழைய ரிக்வேத சுலோகங்களும், எபிரேய மொழி நூல்களும், சீன நூல்களும் கவிதை நடையிலேயே யாக்கப்பட்டுள்ளன இக்கூற்று நமது மொழிக்கும் சிறப்பாகப் பொருந்தும், நாம் இழந்துவிட்ட அகத்தியம் முதல் போற்றிப் புகழும் சங்க இலக்கியம், காவியங்கள், பிரபந்தங்கள், உலா, ஊஞ்சல் ஆகிய அத்தனை இலக்கிய, இலக்கண நூல்களும் கவிதையாகவே அமைந்துள்ளன. இலக்கியம் என்றாலே கவிதைதான் என்ற எண்ணம் அண்மைக்காலம் வரை மேலோங்கியிருந்தது. கவிதை இலக்கண இலக்கியத்திற்கு மட்டுமல்ல, வைத்திய சோதிட நூல்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது மன்னர்கள் கவியரங்குகள் வைப்பதும், பொற்கிழிகள் வழங்குவதும் பண்டைக்கால நிகழ்ச்சிகளாக விளங்கியுள்ளன. மன்னர்களின் அறிவுறுத்தல்கள் ஆகியனகூட கவிதையிலேயே அமைந்தன. உதாரணமாக ஒரு குடிநீர்க் குளத்தருகே, சோழர் காலத்தில் பின்வரும் எச்சரிக்கை ஒன்று கல்லில் செதுக்கப்பட்டிருந்தது,

> ''நீரைப் பிழைக்கின் நெடுமுடி
> மன்னன் கடுங்கோபங் கொள்ளும்''

அறிவியல் நூல்களும், இலக்கண நூல்களும், நீதி நூல்களும் கவிதை நடையில் தோன்றியதற்குப் பல காரணங்கள் காணலாம். மொழியின் இயற்கை நடை கவிதை நடையாகக் கருதப்பட்டது, கவிதை நடை மனனம் செய்வதற்கு ஏற்றதாக அமைந்தது. நூல்கள் அதிகமில்லாத காலங்களில், நூல்களே இல்லாத காலங்களிலும் வாய்மொழியாக இலக்கியங்கள் உலவிவந்த காலங்களிலும், இலகுவில் மனனம் செய்வதற்கு ஏற்றதாய் கவிதை நடையிலேயே கருத்துக்களும், சமய கோவைகளும் அமைந்தன. நூல்கள் வந்த பிறகும் கூட, நன்கு பண்பட்ட கவிதை நடையே மொழியின் முச்கிய நடையாய் அமைந்துவிட்டது. பல மக்களுக்குப் பாடி, விளங்க வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் நூல்கள் இன்மையினாலும், கல்வியறிவின்மையினாலும் ஏற்பட்டிருக்க வேண்டும். அதற்கும் கவிதைநடையே, இசையோடு பாடுவதற்கு ஏற்றதாய் அமைந்தது. கல்வி, இலக்கிய அறிவு போன்ற பண்புகள் ஒரு சிலருக்கே, உயர் குடியினருக்கே, ஏற்றதாகக் கருதப்பட்ட காலத்தில் கடின கவிதை நடையே புலவோர்க்கு ஏற்ற மொழிநடையாய் அமைந்தது. எனினும் ஒரேவகையான கவிதை நடை எல்லாவிதக் கருத்துக்களை கூறுவதற்கும் ஏற்றதாய் இருக்கவில்லை. ஆதலின் பலவகைப் பா முறைகள் வகுக்கப்பட்டன. வெண்பா, விருத்தம். அகவல் எனப் பல முறைகள்

தோன்றின. ஆகவே, பண்டைய மரபின் படி, இலக்கியம் என்றால் அது கவிதையாகத்தான் இருக்க வேண்டும். கட்டுரைகளிலோ சொற்பொழிவுகளிலோ மேற்கோள்கள் காட்டுபவர்கள் எல்லோரும் கவிதை மேற்கோள்களையே எடுத்தாளுவார்கள். கவிதையின் தாக்கத்தினால் உரைநடையை வாசிக்கும்பொழுதுகூட, இராகத்தோடு வாசிப்பவர்கள் இன்றுமிருக்கின்றார்கள்.

கவிதை மொழியின் மழலைப் பருவந் தொட்டு, காவியங்களினூடாக, யமகம் அந்தாதி காலங்கள் வரை மட்டுமல்ல பாரதியின் பள்ளுவரை எழுத்துலகில் செலுத்தி வந்த தன்னாதிக்கம் இப்பொழுது குன்றி விட்டது. அருகி வருகிறது என்பதே எனது கூற்று. நாம் வாழ்ந்து வருகிற காலம் உரை நடைக்காலம். ஏதோ சில தேவைகளுக்கும், உணர்வுகளுக்கும் இன்னும் கவிதை நடை பயன்பட்டு வந்தாலும், இன்றைய காலநிலைக்கும். கருத்து வளர்ச்சிக்கும் ஏற்ற மொழிநடை உரை நடையேயாகிறது.

இன்று கல்வி பொதுச் சொத்தாகி விட்டது. ஒவ்வொருவரதும் உரிமையாகி விட்டது எந்தக் கருத்தை எவ்வளவு எளிதாக, எழிலாகக் கூற முடியுமோ, அவ்வாறு கூறுவதே மொழியின் நோக்கமாய் இருத்தல் வேண்டும் என்ற எண்ணமே இன்று நின்று நிலவி வருகிறது. மந்திரங்கள், யமகங்கள், புரியாத கடுந்தமிழ் நடை ஆகியன இன்று ஒதுக்கப்பட்டு வருகின்றன. இக்கருத்தின் தாக்கத்தை இன்றைய கவிதைகளில் கூடக் காணலாம். கவிதைகள் உரைநடையில் எழுதப்படுகின்றன என்ற பிரமை தோன்றுமாறு, புதுக்கவிதைகள் வந்து கொண்டிருக்கின்றன. கல்லாத மக்களின் மொழிநடையில் கூட கவிதைச் சுவையோடு பாடலாம் என தென்னிந்தியத் தமிழ் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு நிரூபித்திருக்கின்றார். இயந்திரங்களும், அளவிலா நூல்களும், எல்லோருக்கும் இலவசக் கல்வியும் ஏற்படுத்தியுள்ள புரட்சிமிக்க புதுயுகமாற்றங்களுக்கு ஏற்ற மொழிநடை உரை நடைதான்.

இன்று வெளிவருகின்ற நூல்கள் பெரும்பாலும் உரைநடையிலே வெளிவருகின்றன. உயர்ந்த கருத்துக்கள், உலகு வக்கும் கருத்துக்கள் அனைத்தும் உரை நடையிலேயே வெளிவருகின்றன. கவிதையே இலக்கியம் என்ற காலம் கரைந்து விட்டது. இன்று கவிதை சில துணுக்குகளாக பத்திரிகைகளில் மினுக்கிடுகின்றன. சினிமாப்பாடல் துறையே தஞ்சமென்று கவிதை சரணடைந்துள்ளது. கவிஞர்கள் கூட பெரும்பாலும் உரைநடை எழுதுபவர்களாகவே இருக்கின்றார்கள். இருந்திருந்து உரை நடைப்பாணியிலே கவிதை பாடுபவர்களாகத்தான் பெரும்பாலான கவிஞர்கள் இருக்கின்றார்கள். அனுபவ வாயிலாகக் கூறின் அதிகம் எழுத முடியாதவர்கள், கருத்துப் பஞ்சக்காரர்கள், நிறைய எழுத அவகாசம் இல்லாதவர்கள், கிண்டல்காரர்கள், சில கிளர்ச்சிக்காரர்கள் போன்றோரே இன்று பெரும்பாலும் கவிதை எழுதிவருகின்றார்கள். ஆதலின் கவிதை தனது முக்கியத்துவத்தை முற்றாக இழந்து விட்டது.

கவிதையிலே பத்திரிகைகள் நடத்த முடியாது சில ஏடுகள் நடத்திப்பார்த்தவர்கள் ஏமாந்து போனார்கள். கவிதை மூலம் இன்று அறிவுலகில் ஏற்பட்டிருக்கின்ற எல்லாமாற்றங்களையும், வளர்ச்சிகளையும் எடுத்துரைக்க முடியாது. சில அறிவியல் கவிதைகளை எழுதும் முயற்சி ஏற்பட்ட தெனினும் அது முயற்சி நிலையிலேயே தளர்ச்சி அடைந்துவிட்டது. கல்வித்துறைக்கோ புதுயுக நூல்வெளியீட்டுத் துறைக்கோ பெரிதும் உதவாத கவிதையின் நிலை என்னவாயிருக்கும்?

கவிதை முற்றாக அழிந்துவிடும் என்று கூறுவதற்கில்லை. அதன் முக்கியத்துவம் உண்மையிலேயே குன்றிவிட்டது. ஆனால் சில ஆழ்ந்த உணர்ச்சிகளைச் சுருக்கமாகவோ, சுடச்சுடவோ கூறுவதற்கு கவிதை தொடர்ந்து பயன்படும், காதல் மொழிதற்கும், கடவுளர்பால் பக்தி மொழிதற்கும் கவிதை நடை தொடர்ந்து பயன்படும். இசையுலகில் கவிதை தொடர்ந்து நடமாடும். மொழியின் எல்லையற்ற வாறாக உரைநடை வளர்ந்து வரும் இக்காலத்தில் இருந்திருந்து பளிச்சிடும் மின்னற் பூக்களாக கவிதைகள் சுடர் விடும் என்று கூறலாம்.

# பெறுமானக் குறைவைக் கணக்கிடல்

(இளவாலை ஆ. குமாரவேல், செலவின நிர்வாகக் கணக்காளர் துறை)

தொழிற்சாலைகள் போன்ற நிலையங்களில் நாள்தோறும் ஏற்படும் தொழிற்பாட்டினால் இயந்திர சாதனங்களில் தேய்வு ஏற்படுவதனால் இவற்றின் பெறுமதி சிறிது சிறிதாகக் குறைகிறது இதனால் பேரேட்டில் (LEDGER) பதிந்துள்ள பெறுமதியிலிருந்து இயந்திரங்களின் தற்போதைய பெறுமதி குறைந்தே காணப்படும். எனவே இச்சாதனங்களின் உண்மையான பெறுமதியை நாம் காணவேண்டுமெனில் பேரேலுட்டிள்ள பெறுமதியிலிருந்து தேய்வினால் ஏற்பட்ட பெறுமதிக் குறைவை கழித்தல் வேண்டும். அன்றேல் ஐந்தொகையை (BALANCE)க் கணக்கிடும் பொழுது இவற்றின் உண்மையான பெறுமதியை அறியமுடியாது. வருமானத்தைப்பெறும் நோக்குடனே இயந்திர சாதனங்கள் உபயோகிக்கப் படுவதனால் தேய்வினால் ஏற்படும் பெறுமானக் குறைவை வருமானத்திலிருந்தே கழித்தல் வேண்டும்.

பெறுமானக் குறைவு பின்வரும் முறைகளில் கணிக்கப்படும்.

(1) மாறுப்பாக முறை (Fixed Instalments Methods)

ஒரு இயந்திரம் நன்றாகச் செயற்படும் கால எல்லையால் அதன் பெறுமதியை பிரித்து ஒரு வருடத்திற்கு ஒரு பகுதியாகச் செலவில் எழுதப்படும் முறையே மாறுப்பாக முறை எனப்படும். உதாரணமாக ரூ. 10,000/- பெறுமதியுள்ள இயந்திரமொன்று 1-1-70 இல் வழங்கப்பட்டது. அதன் பெறுமானத் தேய்வு வருடத்திற்கு 10% ஆகக் கணிக்கப்பட்டது. மாறுப்பாக முறைப்படி முதல் மூன்று வருடங்களுக்குரிய பதிவை எழுதல்:—

## இயந்திரக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.1.70 | கையிருப்பு | 10,000 | 31.12.70 | பெறுமானக்குறைவு 10 % | 1,000 |
| | | | | கையிருப்பு | 9,000 |
| | | 10,000 | | | 10,000 |
| 1.1.71 | கையிருப்பு | 9,000 | 31.12.71 | பெறுமானக்குறைவு 10 % | 1,000 |
| | | | | கையிருப்பு | 8,000 |
| | | 9,000 | | | 9,000 |
| 1.1.72 | கையிருப்பு | 8,000 | 31.12.72 | பெறுமானக்குறைவு 10 % | 1,000 |
| | | | | கையிருப்பு | 7,000 |
| | | 8,000 | | | 8,000 |

## பெறுமானக் குறைவுக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31.12.70 | இயந்திரக்கணக்கால் | 1,000 | 31.12.70 | இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியதால் | 1,000 |
| 31.12.71 | இயந்திரக் கணக்கால் | 1,000 | 31.12.71 | இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியதால் | 1,000 |
| 31.12.72 | இயந்திரக் கணக்கால் | 1,000 | 31.12.72 | இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியதால் | 1,000 |

2) ஒடுங்கு மீதி முறை (Reducing Balance Method)

நீண்ட காலம் பாவிக்கக்கூடிய பொருட்களின் பெறுமானக் குறைவு இம் முறையினுல் எழுதப்படும். குறிக்கப்பட்ட விகிதத்தை சொத்துக் கணக்கின் இருப்பிலிருந்து வருடம் வருடம் கழித்து வருவது ஒடுங்கு மீதிமுறை எனப்படும் உதாரணமாக,

ரூபா 10,000/- பெறுமதியான ஒரு இயந்திரத்தின் பெறுமானக் குறைவை வருடம் தோறும் 1 % படி கணித்து இதற்கான பதிவை ஒடுங்கு மீதி முறைப் படி எழுதல் :—

## இயந்திரக் கணக்கு

முதல் வருடம் :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.1.70 | கையிருப்பு | 10,000 | 31.12.70 | பெறுமானக்குறைவு 10 % | 1,000 |
| | | | | கையிருப்பு | 9,000 |
| | | 10,000 | | | 10,000 |
| 1.1.71 | கையிருப்பு | 9,000 | 31.12.71 | பெறுமானக்குறைவு 10 % | 900 |
| | | | | கையிருப்பு | 8,100 |
| | | 9,000 | | | 9,000 |
| 1.1.72 | கையிருப்பு | 8,100 | 31.12.72 | பெறுமானக்குறைவு 10 % | 810 |
| | | | | கையிருப்பு | 7290 |
| | | 8,100 | | | 8,100 |

(3) பெறுமானக்குறைவு நிதிமுறை (Depreciation Fund Method)

குறிக்கப்பட்ட பெறுமதியைக் குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்குள் புதுப்பிக்கக் கூடியதாய் ஒரு நிதியை ஏற்படுத்தும் முறை "பெறுமானக் குறைவு நிதி முறை" எனப்படும். இம்முறையின்படி வருடா வருடம் பெறுமானக் குறைவாக எழுதப்படும் தொகையைப் பெறுமானக் குறைவு நிதிக்கணக்கின் வரவில் பதிதல் வேண்டும். இத்தொகையை குறிக்கப்பட்ட காலத்திற்கு உத்தரவாதமுடைய பிணைப் பத்திரத்தின் பேரில் (Gilt Edged Securities) வட்டிக்குக் கொடுத்து இதினுல் கிடைக்கும் வட்டியும் முதலுமாக புதிய இயந்திரங்கள் வாங்கலாம்.

(4) நட்ட ஈட்டுப் பத்திர முறை (Insurance Policy Method)

இம்முறையினுல் உண்டாகும் பெறுமானக் குறைவை உத்தரவாதமுடைய பிணைப்பத்திரத்தின் பேரில் வட்டிக்குக் கொடுக்காமல் நட்ட ஈட்டுப் பத்திரத்தின் பெயரிலும் கொடுக்கலாம்.

பதிவு செய்யும் முறை

i வரவு :— இலாப நட்டப் பகிர்க்கணக்கு (Profit and Loss Account)
செலவு :— பெறுமானக் குறைவு நிதிக் கணக்கு

ii வரவு :— நட்ட ஈட்டுப் பத்திரக் கணக்கு
செலவு :— காசு ஏடு (Cash Book)

iii வரவு :— நட்ட ஈட்டுப் பத்திரக் கணக்கு
செலவு :— பெறுமானக் குறைவு நிதிக் கணக்கு

மீண்டும் விலை மதித்தல் முறை (Re-Valuation Method)

வருடா வருடம் உபயோகிக்கப்படும் சாதனங்களை விலை மதிப்பீடு செய்து ஏற்படும் பெறுமானக் குறைவை அறிதல் ''மீண்டும் விலை மதித்தல் முறை,'' எனப்படும் உதாரணமாக ரூபா 10,000/- பெறுமதியான சாதனம் ஒன்று வருட இறுதியில் ரூபா 9,000 என மதிபபீடு செய்யப்பட்டால் ஏற்படும் பெறுமானக் குறைவு ரூபா 1,000 எனலாம். இத் தொகையை இயந்திரக் கணக்கிலும் பெறுமானக் குறைவுக் கணக்கிலும் பதிதல் வேண்டும்.

(6) வருடத் தொகை முறை (Annuity Method)

இம் முறையின் படி சாதனங்களின் பெறுமதிக்கு குறிக்கப்பட்ட வீகிதத்தில் வட்டி வித்திது அத்தொகையில் ஒரு பகுதியை வருடா வருடம் பெறுமானக் குறைவிற்காகக் கழித்து வருதல் வேண்டும்.

உதாரணமாக :-

ஓர் ஸ்தாபனம் ஓர் இயந்திரத்தை குறிப்பிட்ட தொகைக்கு வாங்குவதால் இத் தொகையால் வியாபாரத்தில் ஏற்படும் பலன்களையும் இதற்கான வட்டியையும் இழக்கின்றது. ஆதலால் வட்டியை கணக்கிட்டு பெறுமதியுடன் சேர்த்தல் வேண்டும். பின்னர் வருடத் தொகை அட்டவணையில் (Annuity - Table) உள்ள தொகையை வட்டியும், பெறுமதியும் சேர்ந்த தொகையிலிருந்து கழித்தல் வேண்டும்.

# சாந்தி நிகேதனம்

திருமதி ம. செல்வரத்தினம், B. A. (Lond.)

> இலக்கியச் சோலையில் உலவி
> இலட்சிய நாயகர்களை உவமையாக்கி
> உத்தமமான வாழ்க்கைக்கு வழிகாட்டு
> கிறார் கட்டுரை ஆசிரியை
> திருமதி. ம. செல்வரத்தினம்

உலகில் பெரியோர்களின் வரலாற்றை அலசிப்பார்ப்போமானால், ஓர் மாபெரும் உண்மையைக் காணலாம் அதாவது யாவ ரும் இலட்சிய வாழ்க்கை நடத்தினர் தமக்கெனக் கொள்கை ஒன்றைத் தெரிந்து உயிர்போகினும் அக்கொள் கையை மட்டும் கைவிடாது நின்ற சான் றாண்மையை நாம் உணரக்கூடியதாயுள் ளது. திருநீலகண்டர், சிறுத்தொண்டர் போன்ற சமயத்தலைவர்களும், அரிச்சந்தி ரன் போன்ற புராணநாயகர்களும், தத் தம் வாழ்க்கையை ஒரு அரிய பெரிய கொள்கைக்காக அர்ப்பணித்தமை நாம் அறிந்ததே. பலவேறு துறையிலும் பல் வேறு விதமாகக் கொள்கைகள் விரியும். எனினும் சில அடிப்படைக் கொள்கை களையேனும் அனுசரித்து வாழ்ந்து வரப் பழகிக் கொள்ள வேண்டும்.

தமிழ்மாதின் இனிய உயர்நிலை எனப் போற்றப்பெறும் முப்பாலிலே ஒருவருக்கு அணியெனப் பேசப்படுவது பணிவுடை யும் இன்சொல்லும் ஆகும். எமக்குக் கடுஞ் சொற்களால் கடுகளவு இன்பமும் கிடையாமையைக் கண்டும் பிறன்மாட்டு நாம் கடுமையாக நடந்துகொள்ளும் பேதைமை தான் என்னே? அன்பும், அற மும் தழைக்க வேண்டிய பூமியிலே இன் சொல், பணிவு ஆகிய பயிர்கள் வளர்க் கப்பட வேண்டும். இல்லையேல் பொறா மையும் பூசலும் நெருஞ்சி முட்களாக ஓங்கி வளர்ந்து, மறம் பெருகிப் புவி மூதேவியின் இருப்பிடமாகி விடும். வளர்ந்து வரும் இளஞ் சந்ததியினரின் நெஞ்சங்களிற் பசுமையாகப் பதியவேண் டிய இன்னோர் மகத்தான இலட்சியம் குருபக்தியாகும். தமிழ் இலக்கியச் சோலை யிலே சிறிது உலவி வந்தோமானால், கர் ணன் ஏகலைவன் என்ற இருவரைச் சந்திப் போம் குந்திதேவிக்குச் சிரேஷ்ட புத்திர னைப் பிறந்த கர்ணனுக்குக் குலம் தெரி யாது வளரவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற் படுகின்றது. தேரோட்டி மகனாக வளர் கின்றான். பரசுராமர் என்ற அந்தணப் பெரியாரிடம் கல்வி கற்று வரும்போது ஒருநாள் ஆசிரியர் இவன் மடிமேல் துயில் கொள்கின்றார். இவன் காலை நச்சுப்புழு ஒன்று குடைகின்றது. இரத்தம் பெருக் கெடுத்தோடுகின்றது. அந்நிலையிலும் தன் குருவின் நித்திரைக்குப் பங்கம் வரக் கூடாதென்று வேதனையைப் பொறுத்து அசைவற்று இருக்கின்றான் கர்ணன் அவன் குருபக்திதான் என்னே? இன்னோர்பாங்கு ஏகலைவன் என்பவன் வேடன் என்றகார

> எத்தனை வருடம் வாழ்ந்
> தோமென்பதல்ல எப்படி
> வாழ்ந்தோம் என்பதே
> சிறப்பு.
>
> உலகமாகிய களத்தில் செந்
> நெறி கண்டு வாழ்ந்தால்
> அது
> சாந்தி நிகேதனமாகும்

ணத்தால் துரோணரால் சீடனாக ஏற்றுக் கொள்ள முடியாதென மறுக்கப்பட்டவன் அவரது சிலையையே குருவாகப் பாவித்து வித்தை கற்கின்றான். பின் துரோணரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய தன் பெரு விரலைத் தறித்துக் குருதட்சணையாகக் கொடுக்கின்றான். இங்ஙனமாகக் குருபக்தியால் உயர்ந்தோர் வரலாறுகள் அளப்பரியன.

உயர்ச்சி என்பது உள்ளத்தாலுயர்வதைக் குறிக்கும் மனிதகுலத்தின் தேவைகளைக் கூறுகின்றார் புலவர்—

''உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம், படுப்பது ஆறடி நிலம்''

இத்தேவைகளைப் பெற்று அறவழி நின்று, "A Simple living and high thinking'' என்பதற்கிணங்க வாழ வேண்டியவன் மனிதன் 'மன்' என்ற சமஸ்கிருத வினையடிக்குச் சிந்திப்பவன் என்று பொருள். முப்பத்து முக்கோடி உயிர்களுள்ளும் பகுத்தறியும் திறன் பெற்றவன் மனிதன் ஆனால் படாடோபமும், வீண்செருக்கும் கொண்டு பட்டம் பதவிகளில் மோகங்கொண்டு அறனல்லா வழிகளிலே நின்று தன் கோடியமனத்தால் எத்துணை இம்சைகளைப்புரியவும் தயங்காமல் நிற்பவனை விலங்கெனல் மிகையாகாது. ''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்'' என்பது வள்ளுவம்.

''பல்லாவுள் உய்த்துவிடினும் வல்லதாம் குழக்கன்று தாய் நாடிக் கோடலை—பழவினையும் அன்ன தனகத்தே'' என்ற நாலடியார் கருத்துக்கிணங்கப் பழவினையும் செய்தோரைநாடிப் பயன் கொடுக்க வல்லன. முத்தமிழ் விரவிய சிலப்பதிகாரம் கூறிய உண்மையும் இதுவே எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் கணியன்பூங்குன்றனார் என்பவரின் செய்யுளில் ''பேரியாற்று நீர் வழிப்படூஉம் ஆருயிர் முறை வழிப்படு உம்'' என்று உயிர் ஊழின் வசப்பட்டது எனக் கூறப்படுகின்றது. எமது கர்மங்களின் பலனே ஊழாகி எம்முயிரின் வழியை நிர்ணயிக்கும் என்பதை உணர்ந்து ''நல்லவை நாடி அல்லவை ஒதுக்கி வாழ்தல் தலையான அறமாம்.

செய்நன்றி மறவாமையும் ஒரு சிறந்த அறமாகும்.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
செய்நன்றி கொன்ற மகற்கு'' —குறள்

கங்கையாற்றைக் கடக்கும் போது உதவிய படகோட்டியான குகனைப் பார்த்து நன்றி தெரிவிக்கின்றார் சக்கரவர்த்தித் திருமகன் ''இன்று நாம் ஐவரானோம்'' என்று அவனுடன் சமத்துவம் பேசுகின்றார். வேடனாகிய குகனிடத்தே சமத்துவம் பேசவைத்தது செய்நன்றிக் கடப்பாடு அறத்துக்கு மாறுபட்ட செயலைச் செய்த தமையனிடம் கும்பகர்ணன் தன் கடப்பாடு கருதி உயிர் கொடுத்துப் போர் செய்கின்றேன் என்று உறுதி கூறுகின்றேன் நீராடு துறையில் குறிப்பறிந்து திரௌபதியாற் கொடுக்கப்பட்ட சிறுதுணிக்காக பின்பு துச்சாதனன் என்ற கயவனால் துகிலுரியப்பட்டபோது அவளுக்குக் குறையாத துகில் அளித்தார் பார்த்தசாரதி. எடுத்துவளர்த்த நன்றிக்காகத் தருமர் தன் தம்பி என்று தெரியவந்தபோதும், துரியோதனனுக்காக உயிர்கொடுத்துப் புகழ் பெற்றான் கர்ணன் பெற்ற நன்றிக்காக உயிர் கொடுத்தோரின் வாழ்க்கை எமக்கோர் உன்னத இலட்சியத்தைப் போதிக்கின்றது.

''போதும் என்ற மனமே பொன் செயும் மருந்து'' திருப்தி என்பதை வாழ்க்கையின் உயிர்நாடியாக மதிக்க வேண்டும். ''பாலுக்குச் சர்க்கரை இல்லை யென்பார்க்கும்'' எனத் தொடங்கும் பழம் பாடல் எல்லோர்க்கும் விசனம் ஒன்றே எனத் தெரிவிக்கின்றது மாடமாளிகையில் வசிப்போரைப் பார்த்துக் குடிசை வாசி ஏங்கவேண்டியதில்லை. குடிசையிற் பிறந்ததால் கிறீஸ்துநாதர் தாழ்ந்து விட்டாரா? எல்லோர்க்கும் வேண்டற்பாலதாம் திருபதி மாணவ உலகிற்கு உரியதன்று.

''தம்மின் மெலியோரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்கு நாம் என்று''

தம்மினும் கல்வியால் மேம்பட்டோரைக் கண்டு அவரனைய கல்வி பெற முயற்சித்தல் வேண்டும்.

''கற்கை நன்றே, கற்கை நன்றே
பிற்கை நிலை முனியாது கற்கை நன்றே''

என்பது சங்கப் பாடல். சமணமுனிவர்கள் ஆக்கி அளித்த இலக்கியப் படைப்பாம் நாலடியாரில். ''குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்'' என்ற பாடல் கல்வியின் சிறப்பைக் கூறுகின்றது ஆதலால் தேவையற்ற பொருள்களை நாடிக் குவித்துவைத்திருப்பதிலும், கல்வியாகிய பெருநிதியைத் தேடி வைத்திருத்தல் சிறப்புடைத்தாகும். ஏழுபிறப்பும் தொடர்ந்து வரும் பெரும் பேறும் கல்வியறிவையீட்டுவதிலும் சிறந்த குறிக்கோள் தான் யாது? அறிவாற் சாதிக்கமுடியாதது எது?

இவ்வுலகில் வேற்றுமைகள் நிறைந்திருக்கின்றன. சாதிமத வேற்றுமைகள் ஓர் புறம் நினைப்பிலே, கருத்திலே, செயலிலே, உள்ள வேற்றுமைகள் ஓர் புறம். இறைவன் படைப்பிலே எத்தனை விதம்! ''வண்ண வண்ணக் களஞ்சியமாக'' உலகையாக்கிய இறைவன் வேற்றுமையுள் ஒற்றுமையைக் கற்பிப்பது உற்றுணரற்பாலது உடையிலும் உணவிலும் வேறுபாடு இருக்கின்றது, ஏழைக்கும், கனதனவானுக்கும். ஆனல் உண்ணும்போது சகல்ரும் வாயாற்தானே உண்ண வேண்டும் 'தான் ஆயிரம் கூலியாட்களுக்குப் படியளப்பவன். அவர்களைப் போல் கேவலம் வாயால் உண்ணலாமா' என நினைத்து மூக்கினல் உண்டால்;! சந்திர ஒளியும், தென்றற்காற்றும் கௌரவத்தையும், குலத்தையும் மதித்துத் தண்மைதருகின்றனவா? இறைவனும் இயற்கையும் காட்டும் நெறியை நீக்கி வேற்றுமைகளையே வளர்த்துக் கொண்டு போவது மடமையல்லவா? கருத்து வேற்றுமைகளிருக்கலாம். ஆனல் மற்றவர் கருத்தையல்ல கருத்துரிமையைப் பெருந்தன்மையுடன் ஏற்க வேண்டும் வோல்ரயர் ஓரிடத்தில்:

''I disapprove of everything you say,
But I will defend to death your
right to say it''

என்கிறர். யாவர்க்கும் ஒப்ப, மனிதாபிமானத்துடன் உரிமைகளை மதித்துநடந்தால் சிக்கல் எது? மனச்சஞ்சலம் தான் ஏது?

பகுத்துண்ணும் பழக்கமுடைய காகத்தையும், நன்றி மறவா நாயையும், இணையை நீங்கில் உயிர்தரியாத அன்றிலையும் பார்த்து நாம் கற்கவேண்டியன பலவுள. தனக்கெனக் கொள்கை ஒன்றை வகுத்து ''எத்தனை வருடம் வாழ்ந்தோமென்பதல்ல எப்படி வாழ்ந்தோம்'' என்பதே கருத்தாக வாழ்வதே சிறப்பு. கொள்கையால் மனக்கோணல் நீங்கும் மனம் சீரானல் யாவும் சீராகும் மனம் தன்னறிவு இழந்தபின்னும் கோடாது நிற்பதைப் பரீட்சித்த அப்பையதீட்சிதரின் வரலாறு சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். அவர் பைத்தியமான நிலையிற் பாடிய 'உன்மத்த பஞ்சசத்' என்ற நூலில் ஆத்மார்த்த துதியாக அமைந்த பாடல்களின் சிறப்பைக் காண மெய்சிலிர்க்கின்றது. சத்தியசோதனை செய்து வாழ்ந்த காந்தியடிகளின் நாவில் உயிர்பிரியும் தறுவாயில் வந்த ''அரே ராம்'' என்ற வார்த்தைகள் நமக்குக் காட்டுவன யாது? அவரது வாழ்க்கையே சத்தியம், சத்தியமே வாழ்க்கை, நேரிய சிந்தனையே இரண்டுமாக வாழ்ந்தார் என்பதையல்லவா? மனமாசை அகற்ற உயர்ந்த சிந்தனை வேண்டும் கோடிய மனத்தாற் தேடிய பாவங்கள் அனந்தம் விலங்கினங்களைப் போல் உண்டுகளித்து உறங்குவது மாத்திரம் வாழ்க்கையாகாது தனக்கும் பிறருக்கும் பயனுடைத்தாக வாழ்வது தான் உலகியல் எம்மதமும் சம்மதமாகத்

தன்னலம் பேராசையாகிய களைகளை நீக்கி அறமும் அன்பும் செழித்தோங்கப் பயிர் செய்வதற்குரியது உலகமாகிய களம். காந்தி மகானும், புத்தர் பிரானும், கிறீஸ்து நாதரும், போதித்த அகிம்சையும் அன்பும் எமக்கெல்லாம் பொருத்தமான நெறியாகும். இந்நெறி சென்றால் அகிலமெல்லாம் 'சாந்தி நிகேதனம்' ஆகும் என்பது திண்ணம்.

பிறரைத் திருத்தக் கிளம்பும் சீர்திருத்தவாதம், பிறர் துன்பம் கண்டு சிரித்து மகிழும் அகம்பாவம், தன்னலத்தையே குறிவைத்து எவ்வேளையிலும் தந்திரமாக இருக்கும் சந்தர்ப்பவாதம், நினைத்ததைச் சாதிக்காவிடிற் கௌரவமில்லை எனத் துடிக்கும் பிடிவாதம் ஆகிய சமூகத்தின் முடக்கு வாதங்கள் அகல வேண்டும். தானே புத்திசாலியென்றும், தன்புகழே எவர் புகழையும் மிஞ்சவேண்டும் என்று கண்ணுயிருக்கும் எண்ணம் தாழவேண்டும் யாவரும் இன்புற்றிருக்க வேண்டுமெனின் தக்க செந்நெறி கண்டு வாழ வேண்டும்.

---

துஸ்ட அகங்காரம் என்பது யாது? "என்னைத் தெரியாதா? எனக்கு எவ்வளவு செல்வமிருக்கிறது; என்னிலும் மேம்பட்டவர் யார்?" என்று சொல்லுகிற அகங்காரந்தான்.

— ஸ்ரீ ராமகிருஸ்ணர் உபதேசம்

* ☼ *

தாழ்த்தப்பட்டவர்களும், அறிவற்ற மூடர்களும், கல்வியற்றவர்களும், சண்டாளர்களும், தோட்டிகளும் உன் உடன் பிறந்தவர் என்பதை மறவாதே. உன் உதரக் கலப்புள்ளவர்கள் என்பதையும் மறவாதே!

— விவேகானந்தர்

* * *

எல்லா மக்களையும் சிறிது நாளைக்கும், சிறு மக்களை எல்லா நாளைக்கும் முட்டாளாக ஆக்கமுடியும்; ஆனல் எல்லோரையும் எல்லா நாளைக்கும் முட்டாளாக்க முடியாது.

— ஆபிரகாம் லிங்கன்

# பௌர்ணமி நிலவில்......

பால் போன்ற நிலவு; பரந்த வெண் மணல்; மயக்கும் வேளை. அந்த இன்பப் பொழுதினிலே ஏக்கத்துடன் படுத்திருந்தான் அவன்; அவனையும் அறியாது அவன் மனதில் ஏற்பட்ட ஏதோ ஒருவித உணர்விஞல மணலில் எதை எதையோ எழுதி அழித்துக்கொண்டிருந்தான் சாந்தன். அவனுள்ளத்திலேதான் எத்தனை ஏக்க உணர்வுகள்? நீண்ட நெடுஞ்சாலையிலே, பௌர்ணமி நிலவிலே, கை கோர்த்து உலாவும் இளம் சிட்டுகளைக் கண்டு நீண்ட பெருமூச்சொன்றை வெளியிடுவதை தவிர வேறென்ன செய்யமுடியும் அவனுல்? புரண்டு புரண்டு படுத்தான்; வெண்ணிலா அவனைப் பார்த்துப் பரிகசித்தது; நெஞ்சிலே நிறைந்த ஏக்கம், புரியாத இனம் தெரியாத ஒரு வேதனை வார்த்தைகளால் சரி விளங்க வைக்க முடியாத அந்த ஏக்க உணர்வுக்கு வேதனைக்கு என்னதான் பெயரோ? இந்த நிலையில் தான் தன் கடந்த காலத்தை சற்று நோக்குகின்றுன்;

காதலென்னும் கடலிலே காலெடுத்து வைக்கும் காலம். அந்த கடலிலே நீந்தி விளையாடுவதற்கு அவன் மட்டும் விதி விலக்கல்ல. அந்த நீச்சல் காலம். அவனால் மறக்க முடியாத ஓர் இன்பக்கனவு போன்று எந்நேரமும் அவன் கண்முன் தோன்றி சித்திரவதை செய்தது. ஆசை யென்னும் செடி அரும்பு விடும் பருவம். அதற்கு நீர் வார்க்க வந்ததைப்போல் தோன்றிஞள் நீலா. பாடசாலை முடிந்து வீடு சென்ற சாந்தன் சற்றும் எதிர் பாராத இரு இளம் புதுமுகங்களைக் கண்டான். ஆம், அவனது சொந்த மச்சாளான நீலாவும், அவள் அக்கா மாலாவும்தான். மாலா இன்ரர்வியூ ஒன்றிக்காக வரும் போது தங்கை நீலாவையும் கூட்டிக்கொண்டு வந்தாள். திடீரென வந்தவர்களிடம் என்ன பேசுவது எப்படிப் பேசுவது என்றே தெரியவில்லை அவனுக்கு. என்ன அத்தான் ஒருமாதிரி பார்க்கின் றீர்களே என்ருள் நீலா. இல்லை திடீரென வந்துவிட்டீர்களே......... அதுதான்......... என்று சமாளித்து விட்டாலும் அந்த அத்தான் என்ற அவனின் சொல் அவன் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்தன. அதே நேரத்தில் தம்மை மிருகக்காட்சி சாலைக்குக் கூட்டிகொண்டு போகுமாறும் வேண்டுகின்றனர் நீலாவும் மாலாவும். எனவே கரும்பு தின்னக் கூலியா வேண்டுமென நினைத்துக்கொண்டு இருவரையும் அழைத்துக்கொண்டு செல்கின்ருன் சாந்தன்.

இரவு சுமார் 8 மணியளவில் உங்கட்கு பாட வருமாம். பாட்டொன்று பாடுங்களேன் என்ருன் சாந்தன். எனக்குப் பாட வராது நீங்கள்தான் பாடுங்கள் என்ருள் நீலா. அவளது சொல்லை மறுத்துரைக்க முடியாமல் பாடுகின்ருன்......

உன்னை நினைத்தேன என்னைக் கொடுத்தேன்
உள்ளம் முழுதும் உன்னை நினைத்தேன்
உன்னை நினைத்தே
உலகில் இருந்தேன்.........
என்று பாடி முடித்தான்.

அவனது செய்கைகள் மூலமும் அவன் தன்னையே விரும்புகின்ருன் என்பதை புரிந்துகொண்ட நீலாவின் கண்களில் அன்பு, வெட்கம், அமைதிகாணப்பட்டது. நீலாவோ மெய் மறந்த நிலையில் தன்னையும் அறியாமல், என் உள்ளத்தை பறித்து விட்டீர்கள் அத்தான்! என்ருள். ஆம் என் உள்ளத்தையும் தான் நீங்கள் என்ருன் அவன். அப்போது தான் சாப்பிட வாருங்கள் என்று சாந்தனின் அம்மாவின் குரல் கேட்டு இருவரும் பிரிந்து சென்றனர். இரவு எல்லோரும் அமைதி

யுடன் உறங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் அந்த இரு உள்ளங்கள் மட்டும் உறக்க மின்றி தவித்தன.

காலை 5-45. நீலாவையும், மாலாவை யும் சுமந்து கொண்டு தன் நீண்ட பிர யாணத்தை தொடர்ந்தது யாழ்தேவி. அது மறையும் வரையும் அதையே வெறித்து பார்த்துக் கொண்டிருந்தான் சாந்தன். ரயில் மறைந்ததும் தான் எதையோ பறிக்கொடுத்தவன் போல் சோர்வுடன் வீட்டை நோக்கி நடந்தான். அடுத்தடுத்த நாள் கல்லூரியில் நீலாவிட மிருந்து அவனுக்கென வந்திருந்த கடிதம் ஒன்றைக் கண்டதும் அவனது முகம் சூரி யனை கண்ட தாமரை போல மலர்ந்தது. ஆவலுடன் கடிதத்தை வாசித்தான்' அத னடியில் பாட்டொன்று காணப்பட்டது.

பட்டுபோல மின்னும் பாவை என்
இதழைச் சுவைத்திடவே
தொட்டு தீண்ட நினைத்த உங்களை
தொடாதே என்று தடுக்கவில்லை
தட்டுப்போல மனம் சுழன்று தவித்து
நானும் நிற்கின்றேன
எட்டி கழுத்தினிலே மாலையை
போட்டுவிட எப்பத்தான் நாள்வருமோ

பாட்டை பார்த்ததும் அவன் உள் ளம் மகிழ்ச்சியால் மகிழ்வுற்றது. என்ன கற்பனை! என்ன ரசனை! அவளா இயற்றி னள்! நம்பவே முடியவில்லை; அந்த தங்க கைகளால் எழுதிய முத்து முத்தான எழுத்துகளை ஒருமுறையல்ல ஓராயிரம் முறை முத்தமிட்டான். தன்மீது அவள் கொண்ட அன்பு, பரிவு, பாசம், அத்தனை யும் வானத்து சந்திரனைபோல் பிரகா சித்தன. அதற்கான பதில் ஒன்றை உட னேயே எழுதவேண்டுமென்று விரும்பி எழுத தொடங்கினன்.

நீலா! மின்னிடும் வானிலே வெண்ணி லவைப் போல் இன்முகம் காட்டி இனிக்க இனிக்கப் பேசி என் உள்ளத்தை கவர்ந்த உயிரோவியமே! உன் வண்ணமடல் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். யாருக் குத்தான் நன்றி செலுத்துவது என்றே தெரியவில்லை. நீலா! அன்றொரு நாள் சுமார் உனக்கு 14 வயது இருக்கும் போது உங்கள் வீட்டுக்கு வந்தேன். கொழும்பில் இருந்து அன்றுதான் உன்னை முதன் முதலாக சந்தித்து கதைத்தேன்; அதுமட்டுமின்றி உன் அழகையும் அன்ன நடையையும் கனிச்சிரிப்பையும் கண்டு தட் டுப்போல் மனம் சுழன்று தவித்தேன். சிந்தை சின்னபின்னமாகி நிலையிழந்து நின் றேன். அந்த ஒரே வினடியில் ஒரே பார் வையில் என்னை பறிகொடுத்து விட்டேன் உன்னிடம். ஆனல் அன்று என் நிலை மையை எப்படி விளங்க வைப்பது உனக்கு அத்துடன் என்னைப்பற்றிய உன் அபிப்பி ராயத்தையும் எப்படி புரிந்து கொள்ள முடியும். எனவேதான் இதற்கு ஒரு தீர்க்க மான முடிவு காணமுடியாமல், ஆனல் இதைப்பற்றி எடுக்கும் முயற்சிகளை கால வரையின்றி குத்திப் போட்டேன். என் தீர்மானம் வெற்றி பெறப்போகிறது என் முடிவு கட்டிவிட்டேன் கடந்த கிழமை உன்னை புரிந்து கொண்டபின், எனக்கு இந்த உலகில் வேறு என்ன வேண்டும் நீலா! உன்னைத்தவிர என்று கடிதத்தை முடித்தான். இது மட்டுமின்றி இப்படி ஆயிரம் கடிதங்கள் பரிமாறப்பட்டன இரு வருக்குமிடையில். நாட்களோ நகர்ந்தன. அவனது எண்ணமெல்லாம் அவளிடம் தான். இதனல் அவனுக்கு பசி, நித்திரை சிநேகம் இப்படி சகலதும் குறைந்து கொண்டே போயிற்று.

இன்று சாந்தன் எதையோ நீண்ட நேரமாக யோசிக்கின்ருன். எத்தனையோ தடவை வாசித்தும் மீண்டும் ஒரு தடவை வாசிக்கவேண்டும் போல் இருந்தது. நீலா ஆஸ்பத்திரியில் இருந்து எழுதி இருக்கும் கடிதத்தை; அத்தான் நினைத்ததெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதும் இல்லை. நடந்ததெல்லாம் நினைத்து விட்டால் அமைதியெங்குமில்லை; ஆயிரம் வாசல் இத யம்; அதில் ஆயிரம் எண்ணங்கள் உதயம்; யாரோ வருவார்; யாரோ போவார்; வருவதும் போவதும் தெரியாது. இன்று வீடு போகிறேன், நாளை வீடுபோகிறேன என்று எத்தனை கடிதம் போட்டிருந்தும் இற்றைவரை போகவில்லை. 6 மாத கால மாகியும் அத்தான்! நான் இனிமேலும் போக மாட்டேன்; நான் போவதை டாக டர் அனுமதிக்கவில்லை! அனுமதிக்கவும்

மாட்டார்!! அனுமதிக்கப்படவும் கூடாது!!! அனுமதிக்கும்படி கேட்கவும் மாட்டேன்! நடந்தது என்ன தெரியுமா? எனக்கு நெஞ்சிலே கான்சர் அத்தான். நான் கட்டிய மனக் கோட்டைகளெல்லாம் வீழ்ந்து விட்டன. இற்றைவரை துன்பத்தை கண்டு ஒரு சொட்டு கண்ணீர் விடாத என் கண்களிலிருந்து கண்ணீர் ஆருக பாய்கின்றது. அம்மா இதை அறிந்து கண்ணீர் விட்டா! கதறினு!! அம்மா படும் அவஸ்த்தையை என்னுல் எழுத்தின்மூலம் விளங்க வைக்க முடியாது. நேரில் பார்க்கும் ஒருவரால்தான் அதை புரிந்து கொள்ள முடியும். அத்துடன் அடுத்த திங்கட்கிழமை என்னை மஹரகம ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதாகவும் இருக்கிருர்கள்.

அத்தான் இறுதியாக எழுதுகின்றேன் நான் நிச்சயமாக சாகவேண்டிய ஒருத்தி. எனவே இன்றிலிருந்து என்னை மறந்து விட்டு இன்னெருத்தியுடன் பூரண சந்தோஷமாக வாழுங்கள். அதுதான் எனக்கு நிம்மதியை கொடுக்கும். அத்துடன் நீங்கள் எனக்கு எந்த விதத்திலும் கடிதம் எழுதாதீர்கள் இனிமேல். அதுமட்டுமின்றி நான் எழுதியபடி இன்னெருத்தியுடன் வாழ்வதானுல் மட்டும் என்னை வந்து பாருங்கள். இன்றி தனிமையாக இருந்தால் என்னைத் தயவு செய்து வந்தும் சரிபார்க்க வேண்டாம். இதுவே என் அன்பான இறுதிக்கட்டளை.

சாந்தன் கடிதத்தை வாசித்தான். உலகமே சுழல்வதுபோன்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது அவனுக்கு. நீலாவுக்கு கான்சர்! இதுதான் அவனுடைய சதா யோசனை. ஊன் உறக்கமின்றி மீண்டும் மீண்டும் யோசித்தான். இதன் விளைவு பிதற்றவே தொடங்கி விட்டான். உண்மையில் இன்று அவன் ஒரு பித்தன். நீண்டகால யோசனையும், தாங்கமுடியாத மன அதிர்ச்சியும் அவனை அங்கொடை மன நோயாளர் ஆஸ்பத்திரிக்குதான் எடுத்து சென்று விட்டன. கான்சர் வந்ததன் காரணமாக ஏற்கனவே நீலா மன முடைந்தவளாதலால் சாந்தனுக்கு நடந்த முழு விபரமோ, அன்றி அவன் தற்பொழுது அங்கொடை ஆஸ்பத்திரியில் இருப்பதோ அவளுக்கு தெரியாது.

நீலாவின் நோய் கான்சர் இல்லையென நிரூபித்துவிட்டார் அவளின் மேல் பலப்பல பரிசோதனை நடத்தியவாறே விஷேச டாக்டர் கணேசன். ஆனுலும் அது ஒரு கான்சரை ஒட்டிய ஒரு விதமான நோய் என்றுதான் கூறுகின்ருர். அவளுக்கு றேடியம் சிகிச்சை அளிக்கப்படவில்லை. பதிலாக கான்சர் என்று கூறப்பட்ட அந்த இடத்தின் ஒருபகுதியை அப்படியேவெட்டி எடுத்துவிட்டார்கள். தற்போது நீலாவின் நெஞ்சில் சுமாரான தாழ்ப்பம் கொண்ட ஒரு பகுதியைத்தான் காண முடிகிறது. மேலும் மூன்று மாத காலமாகியும் ஒப்பரேசன் செய்த அந்தப்புண் மாருததால் தோல் மூலமான சிகிச்சையொன்று அளிக்கப்படுகிறது. அவளின் தொடையில் மிகவும் மெல்லிய தோல் ஒன்றை எடுத்து அதன் மூலமான இன்னுமொரு ஆப்ரேசன் செய்யப்படுகிறது (Skin Crafting) இரண்டு வாரங்களுக்குள்ளேயே நீலாவிற்கு வெற்றி, பூரண வெற்றி... ஒன்பது மாத காலத்துக்கு மேலாக அவஸ்தைபட்டு அவளுக்கு இன்று பூரணசுகம். நெஞ்சிலே ஒரு பகுதியில் சதை இல்லையே ஒழிய அவள் மரணத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டாள். வைத்திய உலகிலேயே இது ஒரு புதுவிதமான நோய் என்றும் ஆனுல் அதில்தான் பூரண வெற்றி அடைந்து விட்டதாகவும் டாக்டரே பெருமிதப்பட்டுக் கொண்டு நீலாவை வீட்டுக்கு அனுப்புகின்ருர். அடுத்த ஒருமாத காலம் தன்னை அடிக்கடி அடிக்கடி வந்து சந்திக்குமாறு டாக்டர் கூறிய வைத்திய ஆலோசனைக் கிணங்க நீலா யாழ்ப்பாணம் போகாது சாந்தனின் வீட்டை அடைகிருள்.

''அத்தான் கடலிலே நீர் வற்றுவதும் பெருகுவதும் இயற்கை; சூரியன் மறைவதும் உதிப்பதும் இயற்கை; இரவும் பகலும் இயற்கை... இதேபோல் எங்கட்கும் சந்தோஷமும் துக்கமும் இயற்கை, ஆனுல் எனக்கு வந்தது கான்சர் வியாதி என்றும் கான்சருக்குப்பின் வாழ்வே இல்லையென எண்ணிக்கொண்டு தாங்களுக்கு எழுதக் கூடாததெல்லாம் எழுதிவிட்டேன்'' என்றெல்லாம் சாந்தனுக்கு கடிதம் எழுத வேண்டும்போல் இருந்தது ஆஸ்பத்திரியில் இருந்தது. இல்லை எழுதுவதிலும் பார்க்க

நேரே போய் சந்தித்து இதை எடுத்துக் கூறுவதுதான் சிறந்ததென தீர்மானிக்கின்றான். கடிதம் எழுதினாலோ அல்லது நேரே சொன்னாலோ அவன் விளங்கிக் கொள்ளமாட்டான் என்பது எங்கே அவளுக்குப் புரியப்போகிறது.

நீலா சாந்தனின் வீட்டை அடைந்து விசாரித்தபொழுதுதான் தெரிய வந்தது. சாந்தன் சிறிய விபத்தொன்றில் சிக்கி ஒருசில காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள் என்றும், எவரும் சரி நடந்த எதையும் விபரமாக கூறவில்லை நீலாவிற்கு. சாந்தனின் தாயாருக்கு தெரியும் சாந்தனின் தற்போதைய விபரம் நீலாவுக்குத் தெரியாது என்று. இன்னும் சரி ஏனோ தெரியவில்லை அவளின் மனம் சற்று தயங்கியது இதை நீலாவிற்குச் சொல்ல. சுமார் 11½ மணியளவில் இருவரும் புறப்பட்டார்கள் சாந்தனை பார்வையிட. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட நீலாவிற்கு அங்கொடை ஆஸ்பத்திரியைப் பற்றித் தெரியாதே! அங்கொடை ஆஸ்பத்திரியை அடைந்த பின்னரும் அதுதான் விபத்து சேவை ஆஸ்பத்திரி என்றே அவள் நினைத்தாள்.

சாந்தன் நீலாவை கண்டான். கண்டதும் இரண்டு மூன்று நிமிடங்கள் அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டு மௌனமாக நின்றான். நீலாவோ சாந்தன் குறும்புக்காகத்தான் இப்படி நிற்கிறான் என்று நினைத்தான். என்னை மறந்துவிடுங்கள் நான் மரணத்தை நோக்கி போய்கொண்டிருக்கிறேன் என்றெல்லாம் எழுதிய பின் நானே சாந்தனை தேடி வருவதினால் சாந்தன் குறும்புக்காகத்தான் இப்படி நிற்கின்றான் என்று நீலா நினைத்ததில் தவறில்லைத் தானே! திடீரென ''டாக்டர்...! நீலா என்னைக் கொல்ல வந்துவிட்டாள். நீங்கள்தான் துணை டாக்டர் ஓடி வாருங்கள் என்று கட்டிலிலிருந்து இறங்கி ஓடினான் சாந்தன். நீலாவோ ஒன்றும் புரியாது திருதிருவென விழித்துக்கொண்டு சாந்தனின் அம்மாவைப் பார்த்தாள். அம்மாவின் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகியது. ''நீலா மகன் சாந்தனுக்கு நீ விரும்பிய அவனுக்கு, நீண்ட யோசனையாலும் தாங்கமுடியாத மன அதிர்ச்சியாலும் மனநோய் பிடித்துவிட்டது. இதைச் சொன்னால் நீ தாங்குவாயோ? என்ற பயத்தினால்த்தான் உனக்கு இற்றைவரை சொல்லவில்லை. இங்கே கூட்டிக் கொண்டு வராவிட்டாலும் சாந்தன் எங்கே எங்கே என்று நீ கேட்பாய் என்றுதான் இன்று உன்னைக் கூட்டிக்கொண்டு வந்தேன்'' என்று நீலாவைக் கட்டி அணைத்தவாறு விம்மி விம்மி அழுதாள். இதற்கிடையில் ஆஸ்பத்திரி வேலை ஆட்கள் ''நீங்கள் நிற்பதனால் சாந்தனைக் கொண்டு வரமுடியவில்லை தயவு செய்து எங்குசரி மறைந்து நில்லுங்கள்'' என்று கூறினர். கண்களில் கண்ணீருடன் முகத்தில் முத்து முத்தான வியர்வையுடன் செய்வதறியாது கதைக்கமுடியாமல் ஆஸ்பத்திரி வாசலை நோக்கி தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருக்கும் நீலாவை, பார்வையாளர் ஒருவரின் கையிலிருந்த வானொலிப் பெட்டியில் இருந்துவரும் பாட்டொன்று..

''.. சருகான மலர் மீண்டும்
மலராதையா
கனவான கதை மீண்டும்
தொடராதையா
காற்றான அவள் வாழ்வு
திரும்பாதையா ''

அவளை மேலும் மேலும் சித்திரவதை செய்ததுடன் சிந்திக்கவும் செய்துவிட்டது. ''சரி நீலா மணி அடித்துவிட்டது வா போகலாம் என்று சாந்தனின் அம்மா கூட்டிக்கொண்டு போனாலும் அவள் மனம் போகவே விரும்பவில்லை. பலவந்தமாக யாரோ இழுத்துக்கொண்டு போவதைப் போல் உணர்ச்சிதான் ஏற்பட்டது அவளுக்கு. அவளின் இதயமோ சாந்தனுக்கு ஏற்பட்டவற்றையும் அத்துடன் ஆஸ்பத்திரியில் அவளை சித்திரவதை செய்த பாட்டையும் பற்றி சிந்திக்க வைத்து அவளை உணர்ச்சியற்ற மரம்போல் ஆக்கிற்று. அவளோ தன் சிந்தை குலைந்து சாந்தனின் அம்மாவிற்குப் பின்னால் முக்கியமான எதையோ, இழந்தவள் போலச் சென்றுகொண்டிருந்தாள். நீலா தெருவைக் கடப்பதற்கும் ஒரு டக்சி பலத்த சத்தத்துடன் பிரேக்போட்டு நிற்பதற்கும்

சரியாக இருந்தது. டக்சியினுல் தூக்கி வீசப்பட்ட நீலா இரத்த வெள்ளத்தில் கிடந்து துடிதுடித்தாள். இந்நிலையில் சாந்தனின் அம்மா அனலிலே அகப்பட்ட புழுப்போலத் துடிதுடித்தாள்; கதறினுள்; கண்ணீர் விட்டாள். ஆஸ்பத்திரியில் உள்ள யாவரும் ஓடிவந்தார்கள். அவர்களுள் சாந்தனும் ஒருவன். நீலாவைத் தூக்கும் பொழுது அவளின் தலை தொங்கிக்கொண்டிருந்தது. இறந்துவிட்டாளோ என்று கூடச் சிலர் ஐயமுற்றனர். இதை பார்த்து 2–3 நிமிடங்கள்வரை பேசாமல் நின்ற சாந்தன் திடீரென முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு 'நீலா...' என்று பலத்த குரலில் கதறிய வண்ணம் கீழே விழுந்துவிட்டான். நீலா உடனடியாக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டாள்.

நீலாவின் பின்பக்க மண்டையிலே ஏற்பட்ட பலத்த பிளவுக்கு காரணமாக உடனடியாக ரணசிகிச்சையின் பின் அவள் விஷேச அறையொன்றிற்கு எடுத்தும் செல்லப்பட்டாள். அவ்வறைக்கு யாருமே அனுமதிக்கப்படவில்லை. நீலாவின் உறவினர் ஒருவருக்கு டாக்டரின் மிக ஆறுதலான — அதிருப்தியான பதில் — என்னவெனில் சரியான முடிவுதெரிய இன்னும் 24 மணித்தியாலங்கள் எடுக்கும் என்பது. 24 மணித்தியாலங்கள் தேவையின்றி 4 மணித்தியாலயங்கட்குள் தெரிந்துவிட்டது நீலாவின் நிரந்தர முடிவு. கான்சர் வியாதியால்த்தான் மரணமடைவேன் என்று நினைத்த நீலா கான்சரினுல் அல்ல விபத்தினுலேயே மரணமடைந்து விட்டாள்.

என்னே வாய்ப்பு! விபத்தில் அகப்பட்ட நீலா தூக்கப்படும்போது அவளின் தலை தொங்கிக்கொண்டிருந்த காட்சியை பார்த்ததினுல் ஏற்பட்ட அந்தப் பேரதிர்ச்சி சாந்தனை மீண்டும் சுய உணர்வுள்ள மனிதனுக மாற்றிவிட்டது. ஆனுல் என்னே பரிதாபம்! அவன் காதலில் வெற்றிபெற நீலாதான் இல்லையே இவ்வுலகில்;

''நீ எங்கே என் நினைவுகள் அங்கே...'' என காற்ருேடு கலந்து வந்த கானம் சாந்தனைக் கனவுலகிலிருந்து நினைவுலகுக்கு கொண்டுவந்தது. பெருமூச்சுவிட்டவனுய் தன்வீடு நோக்கி நடக்கின்ருன் அவன். அன்றைய பௌர்ணமி நிலவிலே கை கோர்த்துலாவும் அந்த இளம் சிட்டுக்கள் போன்று அவனும் உலாவுவதற்கு இயற்கைதான் விரும்பவில்லை போலும்!

நா. சந்திரபோஸ்
விலைமதிப்புத் துறை
2ம் வருடம்.

---

இலக்கியம் என்பது வாழ்க்கையை மொழிவாயிலாகப் பிரதிபலித்துக் காட்டுங் கண்ணுடியாகும். அது வாழ்வினின்றும் பிறக்கின்றது; வாழ்விற்குரியது; வாழ்விற்காகவே நிலைத்திருக்கின்றது.

— கட்சன்

உருவகக் கதை

# மதமும் மனிதனும்

— கந்தையா சிவசுப்பிரமணியம் —

வயலருகே அமைந்த முருகன் கோயிலுக்கு முன்பக்கத்திலிருந்த பூவரச மரத்தில் ஆண்கிளியும் பெண்கிளியும் சல்லாபித்துக்கொண்டிருந்தன. அன்று திருவிழாவாகையால் முருகனை வணங்கும்பெயரால் தங்கள் சேலைகளின் பெயரையும், அழகையும், ஆபரணங்களையும் ஊரறியவைக்கவந்த பெண்களும், பெண்களின் அழகைப்பருகவும், மேனிகளுடன் உராய்ந்து உவகை பெற வந்த ஆண்களும் திருவீதியில் நிறைந்து காணப்பட்டனர். அன்பரும் அருள்வள்ளலுமென தன்பெருக்கு அடைமொழிவைத்த அழகேசனார் ''மதமும் மனிதனும்'' என்ற பொருள் பற்றிப் பொழிந்துதள்ளினார்.

பெண்கிளி, நாதா! ''இந்த மனிதர் என்னதான் பேசுகிறார். புரிகிறதா?'' என வினவியது. புரியாமலென்ன. சிறுவயதில் ஜெகதீஸ்வரன் என்னை வளர்க்கும்போது பாலும் பழமும் ஊட்டவில்லை. தேனினுமினிய தமிழையும் ஊட்டினான் ஒருநாள் இந்த அழகேசனாரின் மகன் என்னை பலவந்தமாக எடுத்துச் சென்று விட்டான். அழகேசன் வீட்டிலிருக்கும்போது அவரின் வண்டவாளங்களையும் அறிந்துகொண்டேன் அதே அழகேசனார் தான் இப்போது இங்கு பேசுபவர்.

அன்பே சிவமென்றும் அறனே தவமென்றும் அரியகருத்தைக் கூறும் இவர் செய்வதெல்லாம் நேர்மாறு தான். ஐயனார் கோவில் வேள்வியின் போது வருடாவருடம் வெட்டப்படும் தலைக்கடா இவருடையதுதான். மேளதாளங்களுடன் அழைத்து வந்து ஆலயவாசலில் கால்களையும், செவிகளையும் மாபாவிகள் பிடித்திழுக்க ஆட்டினை வெட்டி அது துடிதுடித்து மாளும் காட்சியில் இன்பம் காணும் அழகேசனார் போன்றவர்கள் அன்பையும் மதத்தையும் பற்றிப்பேச அருகதை உண்டா? பலியென்ற பெயரால் பணம் சம்பாதிக்கிறான்.

இவருடைய மகனோ, ஆலயம் தொழுவது வேலைமினைக்கேடு என்று கூறும் கும்பலைச்சேர்ந்தவன் நம்மைப்பார். பறக்கக்கூடியதாக அமைந்த இறக்கைகளை நமக்குத்தந்தது யார்? நமக்குமேலாக ஒரு இயற்கைச்சக்தியிருப்பது உண்மையல்லவா. விஞ்ஞானமே பெரிதென்று கூறுகிறார்களே! எப்போதாவது விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இறுதி முடிவு ஏற்பட்டுள்ளதா? ஏற்பட முடியாது காரணம் இயற்கைச்சக்தி முன்னே நிற்பதுதான். இயற்கைச் சக்தி தான் மதம்.

ஆண்டவன் முன் யாவரும் சமம் என்று நீதிபுகட்டுமிவர் நடைமுறையில் கைக்கொள்வதில்லை. பிறப்பால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று கூறி ஆண்டவன் சந்நிதிக்குள் ஒரு பகுதிமக்களை செல்லவிடாது தடுப்பவர் இந்த அழகேசன். இவர்களைத்தான் ஆறறிவு படைத்தவர்களென்றும், அரிய மானிடப்பிறவிகளுமெனக் கூறுகின்றனர்.

நாதா! நிறுத்துங்கள்! நாம் அந்தப் பிறவி எடுக்காதது நல்ல காலமே. எம்மதமும் சம்மதமாக தெய்வ நம்பிக்கையுடன், யாவரையும் சமமாக எண்ணி வாழத்தெரியாதவர்களால் மதம் என்ற உண்மை அழிந்து விடாது. இங்கிருந்து இவன் பேச்சைக்கேட்பதே தப்பு. வாருங்கள் கூட்டம் முடிந்ததும் வருவோமெனக்கூறி அழகேசனைப் பழித்த வண்ணம் கீ........ கீ........ எனக்குரலெழுப்பிப் பறந்து போயின.

---

Worry is the greatest time-waster, Especially about yesterday's mistakes or problems or tomorrow's possible adversities,

*—James B· Lee*

" You must be kind, as your Father in Heaven is kind. Don't judge other people and you will not be judged yourselves. Don't condemn and you will not be condemned· Make allowances for others and they will make allowance for you· Give and men will give to you-yes, good measure, pressed down, shaken together and running over will they pour into lap· For whatever measure you use with other people, they will use in their dealings with you."

*-Jesus Christ.*

The 'method of non - violence without the spirit of non violence may become a new kind of Violence.

*Martin Luther King*

# Awarenss For All Students

The present day students of Technical Colleges Universities and of other such institutions, have an onerous task ahead of them - viz to play their part in the successful management of the respective organis a tions, in which they may be members in the coming years. Leadership in their respective fields of activity will bring with it, the responsibility of management. Whether at top management levels or in sub-managerial grades, these students will play important roles in their respective fields of activity, in the years that follow. The cumulative contribution of a generation of such students is bound to have a tremendous effect on the shaping of the future of our country. It is therefore important that students on the threshold of completing their course of studies, ponder over the contribution that will be expected of them, in the years ahead, when they will be employed in the various spheres of the nation's activities. An awareness of what is expected of them will certainly enable the students to prepare and equip them selves now for the tasks ahead.

Any aspirant to an important appointment should of course endeavour to be up to date, in his own field of specialisation. Accountants Engineers, Bookkeepers or formen should no doubt, have a thorough grasp of the principles relating to their own fields of studies, especially as related to their specific duties. But this alone, will not be sufficient in future Sri Lanka, in the context of the social political and other changes now taking place. Management activities will be increasingly shared by more and more members in every organistion. Success of any enterprise will become dependent on the efficiency and initiative of many, rather than on the achievements of a commanding few. It is therefore important that each member contributes to the smooth and satisfactory management of an organisation. Success will depend more on collective joint effort than on brilliant performance of any individual.


The quality of performance of each individual in his own sphere of activity, certainly has its importance. The strength of a chain is limitted to that of its weakest link. But the inter-relationships among the individuals and the co-ordination of their efforts will be just as important. Proper management will be required to ensure that each individual contributes to the achievement of the common

objective. in the optimun manner. Members of an organis tien will in future be called upon to assist more and more in various management functions, in addition to their own specialist duties. Future staff cannot be content with discharging their own specialist duties without taking part in the formulation of objectives, in establishing satisfactory communication among all members, in the drive for increased productivity, in the welfare activies for all members etc.

Present day students will thus be well advisced to acquaint themselves with the important principles of modern management, The need for basic knowledge of such principles will be increasingly felt in future, in addition to one's own specialist knowledge. A grasp of even the elementary principles will help an intelligent student to understand and appreciate management techniques and systems that he may encounter later on. It is needless to stress that such an unberstanding and appreciation, by as many of the members as possible, is absolutely necessary for the successful operation of any system in an organisation. It is in promoting such understanding, that present day students can contribute in a large measure to the success of various organisations in future.

At a time when the country's commercial and industrial organisations (both in the public and private sector) are growing rabidly in size and more varied in their undertaking, the future members of such oraganisations have a duty to prepare themselves for their management. They can do no better than to start early during their studentship days, and acquaint themselves with the basic principles of management This will no doubt stand them in good stead in the years to come, and spell the difference between a satisfying career of success and a mere dreary discharge of duties.

M. D. JESUTHASAN.
B.Sc. (Eng) M. I. E. E. (Lond), M. B. I, M. (Lond)
CHIEF ENGINEER
Colombo Engineers Ltd.




தரம் மிகுந்த கிளாஸ் வகைகளுக்கு

# சன் ஷைன்

# கண்ணாடித் தொழிற்சாலை

சங்கானை

*Manufacturers of all types of*
*Quality Glass wares*

# SUN SHINE GLASS FACTORY

**CHANKANAI**

# நீர் வழங்கும் குழாயின் சிக்கன முறைப் பரிமாணத்தைத் துணியும் முறை

(Economical Size)

நீர் வழங்கும் குழாயின் பரிமாணத்தை, அல்லது விட்டத்தை, அதனூடு நீர் செல்லும் வீதம், குழாயின் தன்மை, வேகம், உராய்வினாலேற்படும் சக்தி நட்டம், ஆகியவை நிர்ணயிக்கின்றன. எமது விளக்கத்திற்குப் பின் வரும் குறியீடுகளை உபயோகித்தல் சுலபமாகவிருக்கும்.

Q = குழாயில் நீர் செல்லும் வீதம் (கலன்/நிமிடம்)

L = குழாயின் நீளம் (அடி)

H = உராய் வினாலேற்படும் சக்தி நட்டம் (அடி)

C = குழாயிற்குரிய குணகம்

D = குழாயின் விட்டம் (அடி)

கேசன் வில்லியம் (Hazen Williams formula) சூத்திரத்துப்படி இவற்றிற் கிடையிலுள்ள தொடர்பு


$H = M\,Le\,Q^{1.85}$ என்பதால் தரப்படும்

இங்கு $Le = L\left(\frac{100}{C}\right)^{1.85}\left(\frac{0.667}{D}\right)^{4.86}$ என வரையறுக்கப் படுகின்றது.

$M = \frac{1}{119 \times 10^5}$ குறிப்பு:- C = 100, D = 8 அங்குலம் ஆகும் போது Le = L ஆகும்.

Le ஐ குழாயின் சமவலு நீளமெனப்படும்.

ஒரு வலை வேலையிலுள்ள (Net work) நீர் வழங்கும் குழாய்களின், சமவலு நீளங்களின் கூட்டுத்தொகை மிக இழிவானதாவிருக்கும் போதே, அவ்வலை வேலையிலுள்ள குழாய்களின் பருமன் சிக்கனமான முறையில் மிகக்குறைவானதாக விருக்கும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




உரு 1

உரு 1 இல் காட்டியவாறு குழாயொன்று இரு கிளைகளாகப் பிரிந்து மீண்டும் ஒன்று சேர்கின்றன.

$Q$ = பிரதான குழாயில் நீர் செல்லும் வீதம்

$Q_1$, $Q_2$ = கிளைகளில் நீர் செல்லும் வீதம்

$Le_1$, $Le_2$ = கிளைகளின் சமவலு நீளங்கள்

கேசன் விலலியம் சூத்திரப்படி ஒரு கிளையில் சத்தி நட்டம்

$$H = M\,Le_1\,Q_1^{1\cdot85} \quad \text{———} (1)$$

மறு கிளையில் சத்தி நட்டம்

$$H = M\,Le_2\,Q_2^{1\cdot85} \quad \text{———} (2)$$

ஆனால் $Q_2 = Q - Q_1$

$$\therefore H = M\,Le_2\,(Q - Q_1)^{1\cdot85} \quad \text{———} (3)$$

$X = Le_1 + Le_2$ என்க

இங்கு X சமவலு நீளங்களின் கூட்டுத்தொகையாகும்

(1), (3) என்பவற்றிலிருந்து

$$X = \frac{H}{M\,Q_1^{1\cdot85}} + \frac{H}{M\,(Q - Q_1)^{1\cdot85}}$$

X இழிவானதாயிருப்பதற்கு $\frac{dX}{dQ_1} = 0$ ஆதல் வேண்டும்

$$\frac{dX}{dQ_1} = -\frac{(1\cdot85)\,H}{M\,Q_1^{1\cdot85}} + \frac{(1\cdot85)\,H}{M\,(Q-Q_1)^{2.85}} \; 0$$

இங்கு H, Q, M ஆகியன மாறிலிகளாகும்

$$-\frac{Le_1}{Q_1} + \frac{Le_2}{(Q-Q_1)} = 0$$

$$\frac{Le_2}{Q_2} - \frac{Le_1}{Q_1} = 0$$

ஆகவே இச்சிறிய வளையத்திலே (Loop) $Q_1$ $Q^2$ இன் திசைகளை கருத்திற் கொள்ளும் போது

$$\sum \left(\frac{Le}{Q}\right) = 0$$ எனலாம்

ஆகவே இதுவே சமவலு நீளங்கள் இழிவானதாயிருப்பதற்கும், குழாய்களின் பருமன் சிக்கனமானதாயிருப்பதற்குமுரிய நிபந்தனையாகும்.

n எண்ணிக்கையுடைய குழாய்களைக் கொண்ட ஒரு நீர் செல்லும் வளையத்தை (Loop)க் கருதுவோம்

ஒவ்வொரு குழாயினூடும் நீர் செல்லும் வீதங்கள் $Q_1$, $Q_2$, ——— $Q_n$ ஆகும் ஏதாவதொரு குழாயிற்கு $H = M\,Le\,Q^{1\cdot85}$ ஆகும்

அல்லது $\frac{Le}{Q} = \frac{1}{M} H \quad Q^{2\cdot85}$ ஆகும்

ஆகவே n குழாய்களுக்குரிய $\frac{Le}{Q}$ இன் கூட்டுத்தொகை

$$\sum \frac{Le}{Q} = \frac{1}{M} H_1 Q_2^{-2\cdot85} + \frac{1}{M} H_1 \; Q_2^{2\cdot85} \; .... + \frac{1}{M} Hn\, Qn^{-2\cdot85}$$

$$= f(Q_1, Q_2 - - Qn) \quad \text{——— (4)}$$

ஆரம்பத்திலே எடுத்துக்கொள்ளப்பட்ட நீர் செல்லும் வீதங்கள் $Q_1$, $Q_2$ – – Qn என்பவற்றிற்குரிய திருத்தம் அல்லது வழு $\triangle Q$ ஆகுக.

ஆகவே $$\sum \frac{Le}{(Q+\triangle Q)} = f(Q_1 + \triangle Q,\;\; Q_2 + \triangle Q,\;\; ....Qn + \triangle Q) = O$$

இத் தொடரை விரிவுபடுத்தி, $\triangle Q$ இன் கூடிய அடுக்குகளையுடைய தானங்களைப் புறக்கணித்தால்

$$f(Q_1,\; Q_2 \; ....Qn) + \left(\frac{df}{dQ_1} + \frac{df}{dQ_2} + .... \frac{df}{dQn}\right) \triangle Q = O$$

(4) இலிருந்து பொதுவாக $\frac{df}{dQ_1} = -2\cdot85 \; \frac{H_1}{M} \; Q_1^{-3\cdot85}$ ——— (5)

(1) இலிருந்து $\frac{Lei}{{Q_1}^2} = \frac{H_1 Q_1^{-3\cdot85}}{M}$ ——— (6)

(5), (6) என்பவைற்றிலிருந்து $\frac{df}{dQ_1} = -2\cdot85 \; \frac{Le^1}{{Q_1}^2}$

$$\therefore \left(\frac{df}{dQ_1} + \frac{df}{dQ_2} \;..........\; \frac{df}{dQn}\right) = -2\cdot85 \sum \frac{Le}{Q^2}$$

இதை விரிவுபடுத்திய தொடரில் பிரதியிட்டால்

$$f(Q_1, Q_2, ......\,Qn) + -2\cdot85 \left(\sum \frac{Le}{Q_2}\right) \triangle Q = O$$

$$\sum \left(\frac{Le}{Q}\right) - 2\cdot85 \left(\sum \frac{Le}{Q}\right) \triangle Q = O$$

$$\triangle Q = \frac{\sum\left(\frac{Le}{Q}\right)}{2\cdot85 \sum \frac{Le}{Q^2}} \quad \text{——— (7)}$$

பின்வரும் அட்டவணையைத் தயாரித்தால்

| குழாய் | H | $Q$ | Le | $\frac{Le}{Q}$ | $\frac{Le}{Q_2} \times 10^{-4}$ | $\Delta Q$ | திருத்தப் பட்ட $Q$ |
|---|---|---|---|---|---|---|---|
| AB | 50 | 550 | 5067 | 9·213 | 168 | – 50 | 500 |
| AD | 30 | – 600 | 2587 | – 4·312 | 72 | – 50 | – 650 |
| BC | 10 | – 500 | 1209 | – 2·418 | 48 | – 50 | – 550 |
| CD | 10 | – 250 | 4359 | – 17·436 | 697 | – 50 | – 300 |
| | | | | – 14·953 | 985 | | |

$$\Delta Q = \frac{\sum\left[\frac{Le}{Q}\right]}{2{\cdot}85 \sum\left[\frac{Le}{Q^2}\right]} = \frac{-14{\cdot}953 \times 10^4}{2{\cdot}85 \times 985} = -50$$

திருத்தப்பட்ட சரியான $Q$ உடன் மீண்டும், மீண்டும் $\Delta Q$ சைபராகும்வரை அல்லது $\sum \frac{Le}{Q}$ சைபராகும் வரை செய்தல் வேண்டும். இச்சமயத்தில் குழாய்களின் Le இலிருந்து, அதன் விட்டத்தை

$$Le = L\left[\frac{00}{C}\right]^{1{\cdot}85}\left[\frac{0{\cdot}667}{D}\right]^{4{\cdot}86}$$

என்ற சமன்பாட்டிலிருந்து கணித்துக்கொள்ள முடியும். குழாய்களின் நீளங்களும், C இன் பெறுமானமும் கொடுக்கப்படுகின்றன. அட்டவணை தயாரித்தலில் $Q$ இன் குறியீடு கவனத்திற்கொள்ளல் வேண்டும். கடிகாரத் திசை சகவாகவும், கடிகார எதிர்த்திசை சயவாகவும் கொள்ளல் வேண்டும்.

ந. இந்திரசேனன் B Sc HONS (ENG)
நீர் வழங்கள் வடிகாலமைப்பு லொகா இரத்மலான

# நன்றிப்பெருக்கு

''செய்யாமல் செய்த உதவிக்கு
வையகமும் வானகமும் ஆற்றலரிது

என்ற வள்ளுவனார் வழங்கிய அறிவுப் பெருக்கு எமது நன்றிப்பெருக்காக இச்செந்தமிழ் நதியில் போந்து கலந்து அந்த நல்லவர்களையெல்லாம் நாடி ஓடட்டும்

எமது நன்றிக்குரியவர்கள்

- உதவிகள் பல புரியும் கல்லூரி அதிபர் அவர்கள், பதிவாளர்கள்.
- எம்மை வழி நடாத்தும் உபகாப்பாளர்கள்

  திரு. சீ. மாணிக்கவாசகர் (விரிவுரையாளர்)
  திரு. போ. சங்காரப்பிள்ளை (விரிவுரையாளர்)
- விடயதானம் தந்துதவி அருவிக்கு அழகூட்டிய அறிஞர்கள், மாணவர்கள்;
- விளம்பரதாரர்கள், விளம்பரம் சேகரிக்க உதவியவர்கள் குறிப்பாக

  திரு. எ. பா. மதுராநாயகம் (உபதலைவர்)
  திரு. ஆ. குமாரவேல் (பொருளாளர்)
  திரு. இ. சீ. தனபாலசிங்கம் (விலைமதிப்பு உத்தியோகத்தர்)
  செல்வி. அமிர்தினி எலியேசர்
  செல்வி. சோதிராணி மாட்டின்
  திரு. நா. சந்திரபோஸ் ஆகியோர்
- நிதியுதவிக் காட்சியை திறம்பட நடாத்த உதவிய சினிமா ஸ்தாபனத்தார், சபையர் படமாளிகை ஊழியர்கள், மனேஜர்,
- இதழாசிரியர்க்குதவி நல்கிய செயற்குழுவினர், முன்னாள் இதழாசிரியர்

  திரு. வே. ஜே. போஸ் (முன்னாள் இதழாசிரியர்)
  திரு. க. ம. செல்வரத்தினம் B. A. (Lon) ஆகியோர்
- தரம் மிகுந்த இதழை அச்சு வாகனமேற்றிய கொம்மேஷல் அச்சக ஸ்தாபனத்தார்
- ஏனைய அன்பர்கள்

இதழாசிரியர்கள்




*Fashionable Jewellery*

**GEM PALACE**

No. 57, Kannathiddy,
JAFFNA.

*With Best Wishes*

# Commercial Press & Stores

**MAIN STREET,**
**JAFFNA.**

*Printed at the Commercial Press & Stores, Main Street, Jaffna.*